விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 புரட்டாதி 21 வியாழக்கிழமை (08.10.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 293



கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

## புலமைப்பரிசில் பரீட்சையில் வடக்கு மாகாணத்தில்

# யாழ்.பொஸ்கோ மாணவன் வசீகரன் முதலிடம்

# யாழ்.இந்து மாணவன் துளசிகன் இரண்டாமிடம்




சோ.வசீகரன் (192)
(யாழ்ப்பாணம்-1)



சி.துவசிகன் (191)
(யாழ்ப்பாணம்-2)



த.தர்சாவினி (186)
(முல்லைத்தீவு)



ப.ஹரிணி (188)
(வவுனியா)



சி.லக்ஷிகா (186)
(கிளிநொச்சி)



ஐ.எரிக் கிரேஸ்மன் (183)
(மன்னார்)



ஜே.ஜெற்றஸ் அனோன்
(183) (மன்னார்)

(யாழ்ப்பாணம்)

வெளியாகியுள்ள தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேற்றில் 192 புள்ளிகளை பெற்று வடக்கு மாகாணத்தில் யாழ்.புனித ஜோண் பொஸ்கோ பாடசாலை மாணவன் சோதிநாதன் வசீகரன் முதலிடத்தினையும் இரண்டாம் இடத்தை 191 புள்ளிகளைப் பெற்று யாழ்.இந்து ஆரம்ப 23ஆம் பக்கம் பார்க்க

# 4 இராணுவத்தினருக்கு 30 ஆண்டுகள் சிறை

## விசுவமடு பாலியல் வல்லுறவு வழக்கில் யாழ்ப்பாண மேல் நீதிமன்றம் தீர்ப்பு

*(யாழ்ப்பாணம்)*

கிளிநொச்சி விசுவமடு பகுதியில் கடந்த 2010ஆம் ஆண்டு இரண்டு குடும்ப பெண்கள் மீது 4 இராணுவ சிப்பாய்கள் மேற்கொண்ட கூட்டுப் பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்கில் 4 இராணுவத்தினருக்கும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் 30 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை வழங்கித் தீர்ப்பளித்துள்ளார். 23ஆம் பக்கம் பார்க்க

## பட்ஜெட்டில் 6% கல்விக்கு

(கொழும்பு)

அடுத்த வரவு-செலவுத்திட்டத்தின் மூலம், இலங்கையின் கல்வி முறைமை ஊக்கம் பெறவுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தின் எதிர்க் கட் 24ஆம் பக்கம் பார்க்க

## 4737 பேர் முகாம்களில்

(யாழ்ப்பாணம்)

நான்காயிரத்திற்கும் மேற்பட்ட இடம்பெயர் மக்கள் யாழ்ப்பாணத்தில தொடர்ந்தும் முகாம்களில் வாழ்ந்து வருவதாக புனர்வாழ்வு, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள 32 முகாம்களில் 1318 குடும்பங்களைச் சேர்ந்த 4737 பேர் முகாம்களில் 24ஆம் பக்கம் பார்க்க

## ஐ.நாவின் தீர்மானத்தை தோற்கடிக்க வேண்டும்

### சோமவன்ச அமரசிங்க கருத்து

(கொழும்பு)

மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் தோற்கடிக்கப்பட வேண்டுமென ஜே.வி.பியின் முன்னாள் தலைவரும், மக்கள் சேவை கட்சியின் தலைவருமான சோமவன்ச அமரசிங்க தெரிவித் 23ஆம் பக்கம் பார்க்க

### ஜனாதிபதியின் இல்லத்தை புனரமைக்க

## ரூபா 18 கோடி தேவையென குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் புதிய இல்லத்தை புனரமைப்பதற்கு 18 கோடி ரூபாய் தேவைப்படுவதாக நாடாளுமன்றில் குறைநிரப்புப் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் புதிய இல்லத்தை புனரமைத்தல், கட்டிட நிர்மாணம் மற்றும் ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு வாகனக் கொள்வனவு ஆகியனவற்றுக்காக 23ஆம் பக்கம் பார்க்க

## ரயில் மோதி குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்தேவி புகையிரதத்துடன் விபத்துக்குள்ளான குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் சோமசுந்தரம் வீதி வழியான 392ஆவது கிலோ மீற்றர் கல்லுக்கு அண்மித்த பகுதியில் இந்த விபத்து நேற்று புதன் 23ஆம் பக்கம் பார்க்க

## நீதிமன்ற தாக்குதல்; 8 பேருக்கு பிணை

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேக நபர்களில் 8 பேரை தலா 5 லட்சம் ரூபாய் பெறுமதியுடைய 2 ஆட்பிணையில் செல்லுமாறும் யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி எம்.இளஞ்செழியன் உத்தர 23ஆம் பக்கம் பார்க்க

## மரண தண்டனையை இடைநிறுத்துதல்

### ஐ.நாவின் யோசனைக்கு இலங்கை ஆதரவு

(கொழும்பு)

மரணதண்டனையை தற்காலிகமாக இடைநிறுத்துவது தொடர்பான ஐ.நாவின் யோசனைக்கு இலங்கை இம்முறை ஆதரவாக வாக்களிக்கும் என்றும் நீதி அமைச்சர் விஜேதாஸ சபையில் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சிறுவர் மற்றும் பெண்கள் துஷ்பிரயோகம், படுகொலைச் சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகளுக்கு மரணதண்டனை 24ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.சட்டத்தரணிகள் இன்று பணிப்புறக்கணிப்பு போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத சமூகவிரோத கும்பல் ஒன்று பருத்தித்துறையில் உள்ள சட்டத்தரணியொருவரின் வீட்டிற்குள் அத்துமீறி உள்நுழைந்து தாக்குதல் மேற்கொண்டமையை கண்டித்து யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் இன்றைய தினம் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பருத்தித்துறையை சேர்ந்த சட்டத்தரணி சதானந்தன் நிரகவானந்தனுடைய வீட்டிற்குள் புகுந்த சமூக விரோத குழுவொன்று வீட்டிலிருந்த பெறுமதிமிக்க பொருட்களினை அடித்து நொறுக்கி நாசம் 24ஆம் பக்கம் பார்க்க

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் இருந்து (06.10.2015) செவ்வாய்க்கிழமை அன்று "பிரதீபா பிரபா" விருது பெறும் சிரேஷ்ட ஆசிரியைகளான,



திருமதி த.மனோகரன் (நடனம்)



செல்வி க.கலாவல்லி (சங்கீதம்)

ஆகியோரை கல்லூரிச் சமூகம் சார்பில் மனமார வாழ்த்துகின்றோம்

(1989)

யா/இணுவில் இந்துக் கல்லூரி, ஆசிரிய நலன்புரிக்கழகம்

## விற்பனைக்கு

Dell E6420 i7 2.70 GHZ எனும் வகையான லப் டொப் விற்பனைக்கு உண்டு.



(1986)

தொடர்பு : 0771311663

## தவறவிடப்பட்டுள்ளது

ஆனந்தா வீதி மானிப்பாயினை முகவரியாகக் கொண்ட வல்லிபுரம் ஆனந்தராஜா ஆகிய எனது அடையாள அட்டை (482945228V), வானசாரதி அனுமதிப் பத்திரம், NPUS9837 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் காப்புறுதிப் பத்திரம், வரிப்பத்திரம் மற்றும் சிறுதொகைப் பணம் அடங்கிய மணி பேர்ஸ் கடந்த 05.10.2015 அன்று இரணைமடுவில் நடைபெற்ற விழாவிற்கு சென்று வரும் போது தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறித்த முகவரிக்கோ அல்லது 0750410782 இலக்கமுடைய கையக்க தொலைபேசிக்கோ தொடர்பு கொண்டு ஆவணங்களை ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (1988)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### செல்வி K.தீப்ஷிவானி (174)



நடந்த 2015 ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய மாணவி செல்வி K.தீப்ஷிவானி 174 புள்ளிகள் பெற்று சித்தியடைந்துள்ளார்.

அவர் மேன்மேலும் கல்வியில் சிறந்து விளங்க் வேண்டுமென அவரை மனதார பர்ராட்டி வாழ்த்துகின்றோம்.


(1990)

கதிரகம்
103/1 கோவில் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

**வாழ்த்துபவர்கள்**
அம்மம்மா :- ப.அன்னலட்சுமி
அன்ராமார் :- கோதா, பவா
அக்கா, அண்ணாமார்கள்

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர் வேலுப்பிள்ளை சின்னத்துரை



தோற்றம் 10.06.1933 மறைவு 09.09.2015

கடந்த 09.09.2015 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் சபிண்டீகரணக் கிரியைகள் நாளை 09.10.2015 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இக் கிரியையிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். எமது குடும்பவிளக்கு மறைந்த போது மறைவுச் செய்தி அறிந்து நேரில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியோருக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(C-2399)

நிரந்தர முகவரி :- வேம்பொடுகேணி, பளை.
தற்காலிக முகவரி :- நவிண்டில், கரணவாய் மத்தி

தகவல்
குடும்பத்தினர்.

# 90-ம் நாள் நினைவஞ்சலி







### அமரர் கி.கஜிதன்

நாட்கள் 90 கடந்தாலும் – உம்
நினைவுகளை கடந்து செல்ல முடியவில்லை –
நண்பர்களே
கள்ளமில்லா புன்சிரிப்பும், கனிவான – உம்
இன்முகமும் காற்றடங்கி கண்ட போதே – கண்கள்
கலங்கி நின்றே எண்ணிக் கொண்டோம் – கொடிய
கயவன் அந்த காலன் என்று

### அமரர் ம.குமுதன்

நீர் ஒருமுறை மரணித்தீர்கள் – இனி
உம் நினைவுகள் பிறக்கும் போதெல்லாம் –
மரணிப்போம்
நீர் எம்மை விட்டு செல்லவில்லை – எம்
நினைவுகளிலே தங்கி விட்டீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய – என்றும்
பிரார்த்திப்போம் அந்த இறைவனை!

தகவல் : நண்பர்கள்


(1987)

# மரண தண்டனையை விதிப்பதனால் குற்றச்செயல்களை தடுக்க முடியாது

## அத்துரலிய ரத்ன தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

**மரண தண்டனை விதிப்பதனால் குற்றச் செயல்களை தடுக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.**



இந்தப் பிரச்சினைக்கு மரண தண்டனை ஓர் தீர்வாக அமையப் போவதில்லை. இன்றைய உணவுப் பழக்கவழக்கங்கள் மனிதரின் மரபணுக்களில் வியாகூல மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது எனவும் அவர் விளக்கமளித்துள்ளார்.

பொலிஸ், நீதிமன்றம் ஆகியன தொடர்பில் பிரச்சினை உண்டு. இது குறித்து ஆராய வேண்டியது அவசியமாகின்றது.

சிறுமி சேயா கொலை உள்ளிட்ட சம்பவங்கள் நாட்டில் இடம்பெறுகின்றன. ஊடகங்களின் ஊடாக இந்த சம்பவங்கள் செய்தி அறிக்கையிடப்படும் போது சமூக விஞ்ஞான நோக்குடன் அறிக்கையிடப்பட வேண்டும்.

நாட்டின் சமூகக் கலாசாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. சுயநலவாதம் ஆதிக்கம் செலுத்துகின்றது. சகவாழ்வு என்ற விடயம் கிடையாது.

அங்குலிமாலாவிற்கு மரண தண்டனை விதித்திருந்தால் அவர் துறவியாகியிருக்க மாட்டார் என ரதன தேரர் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விவாதத்தின் போது மேலும் தெரிவித்தார். (இ-10)

# சிறுமி கொலை சந்தேகநபரின் வாக்குமூலம்

கொட்டதெனியாவ சிறுமி சேயாவை கொலை செய்தமை தானே என சமன் ஜயலத் எனப்படும் நபர் வாக்குமூலமளித்துள்ளார்.

இக்கொலை தொடர்பில் ஏற்கனவே வாக்குமூலமளித்திருந்த கொண்டயா எனப்படும் துனேஷ் பிரியசாந்த என்பவரின் சகோதரனான இவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

சிறுமியை கடத்திச்சென்றது எவ்வாறு என்பது தொடர்பில் அவர் பொலிஸாரிடம் வாக்குமூலமளித்துள்ளார்.

சிறுமியை துஷ்பிரயோகத்துக்குட்படுத்தி கொலை செய்தமை தானே என அவர் ஒப்புக்கொண்டுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் ஏற்கனவே பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புபட்டவர் என்பது தெரியவந்துள்ளது.

அவர் வழங்கியுள்ள வாக்குமூலம் வருமாறு,

திறந்திருந்த ஜன்னல் ஊடாக கட்டிலில் காலொன்றை வைத்து வீட்டுக்குள் பாய்ந்து கொண்டேன். அப்போது குழந்தைகள் உறங்கிக் கொண்டிருந்தனர்.

எப்படியாயினும் மிகுந்த சிரமத்துக்கு மத்தியில் சிறுமியை அணைத்துக்கொண்டு ஜன்னலின் ஊடாக வெளியே பாய்ந்தேன். பின்னர் இருட்டில் சிறுமியை தூக்கிக் கொண்டு மணல் வீதியின் ஊடாக சென்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், அன்று பிள்ளையின் வீட்டுக்குச் சென்றபோது அவரது அம்மா தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருப்பது ஜன்னலின் ஊடாக தெரிந்தது.

எனினும் அப்போது வீட்டுக்குள் செல்வதற்கு வழியிருக்கவில்லை. வேறு பிள்ளைகளும் இருக்கின்றன. வீட்டில் ஆட்கள் இருப்பார்கள் என பயம் ஏற்பட்டது. பின்னர் இரவாகும் வரை நடந்து திரிந்தேன்.

நான் மீண்டும் வரும் போது அறையில் மின்குமிழ் எரிந்து கொண்டிருந்தது. அப்போது நினைத்துக் கொண்டேன் நான் கட்டாயம் எதையேனும் செய்வேன் என்று. பின்னர் ஜன்னல்கள் அருகே சென்று ஜன்னல்களை திறக்க முயன்றேன்.

இதன்போது ஒரு ஜன்னல் திறந்தே இருந்தது. பின்னர் அதனூடாகவே கட்டிலில் கால் வைத்து உள்ளே நுழைந்தேன். அப்போதும் அனைவரும் உறங்கிக்கொண்டிருந்தனர்.

பின்னர் உள்ளே சென்று வீட்டினுள் கத்தியொன்றை தேடினேன். எனினும் கத்தியொன்று இருக்கவில்லை. கத்தியொன்று இன்றி பெண் அருகில் செல்லும்போது அவர அலறினால் என்ன நடக்கும் என எனக்கு பயமும் ஏற்பட்டது.

அவ்வாறு நடந்தால் எல்லோரும் வந்து பெரிய பிரச்சினை ஏற்படும் என தோன்றியது. இதனால் முடிவை மாற்றிக்கொண்டேன். அப்போது பிள்ளைகள் உறங்கிக் கொண்டிருந்தனர்.

நான் பிள்ளையைகொண்டு செல்ல தீர்மானித்தேன் என்று தெரிவித்துள்ளார்.

குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு பின்னர் மருத்துவ பரிசோதனைகளுக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், இதன்போது அவரது உடலில் காயங்கள் ஏற்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் சிறுமியின் தாக்குதலில் இக்காயங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# பொலிஸ் விசாரணையில் எனக்குத் திருப்தியில்லை

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

கொட்டாதெனியாவ பிரதேசத்தைச் சேர்ந்த சேயா என்ற சிறுமி கொலை தொடர்பில் பொலிஸாரின் விசாரணைகளில் திருப்தியில்லை என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சேயா கொலை குறித்த பொலிஸ் விசாரணைகள் எந்த வகையிலும் திருப்தி அளிக்கக்கூடிய வகையில் அமையவில்லை.

அன்று முதல் இன்று வரையில் பொலிஸார் சட்டவிரோத மதுபானம் (கசிப்பு) பிடித்தால், பிடிபடுபவர்கள் வசதி குறைந்தவர்களாக இருப்பார்கள். போதைப்பொருள் தொடர்பில் அதனை பிடிப்பவர்களையே கைது செய்கின்றனர்.

பெரியவர்கள், பலம் பொருந்தியவர்கள் கைது செய்யப்படுவதில்லை. மரண தண்டனை அமுல்படுத்தப்பட வேண்டுமென இன்று விவாதம் செய்கின்றார்கள்.

சேயா சிறுமியின் கொலை குறித்து பொலிஸார் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

கொலையுடன் கொண்டயாவிற்கு தொடர்பு உண்டு எனக் கூறுகின்றார்கள்.

பின்னர் கொண்டயா இல்லை, அவரது சகோதரரே கொலையைச் செய்தார் என்கிறார்கள்.

பாடசாலை மாணவர் ஒருவருக்கும் திருமணமான ஒருவருக்கும் எதிராக குற்றம் சுமத்தப்பட்டது. என்ன நடக்கின்றது?

இந்த நிலையில் என்றாவது ஓர் நாள் மரண தண்டனை அமுல்படுத்தப்பட்டால் ஏற்படக்கூடிய நிலைமை என்ன? இதன்படி மரண தண்டனை யாருக்கு வழங்கப்படும் என்பதே கேள்வியாக அமைந்துள்ளது என முன்னாள் ஜனாதிபதி பாரதூரமான கேள்விகளை எழுப்பியுள்ளார்.

சிங்கள பத்திரிகையொன்றுக்கு வழங்கிய நேர் காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ-10)

# கொண்டயாவின் டீ.என்.ஏயும் ஒத்துப்போகவில்லை - சி.ஐ.டி.

(கொழும்பு)

சிறுமி சேயா கொலை செய்யப்பட்ட வழக்கில் கைதான கொண்டயா எனப்படும் துனேஷ் பிரியஷாந்த என்பவரின் டீ.என்.ஏ குற்றத்துடன் ஒத்துப் போகவில்லை என, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கொட்ட தெனியாவ பகுதியில் ஐந்து வயது சிறுமியான சேயா துஷ்பிரயோகத்திற்கு உட்படுத் தப்பட்டு கொல்லப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இதனையடுத்து இந்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் 17 வயது மாணவன் உள்ளிட்ட இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

பின்னர் கொண்டயா என அழைக்கப்படும் துனேஷ் பிரியஷாந்த என்பவர் கைதானதோடு தானே கொலை செய்ததாகவும் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார்.

இதனையடுத்து குறித்த கொலை தொடர்பில் கொண்டயாவின் சகோதரர் கைதுசெய்யப்பட்டார்.

இவரும்தானே அந்தக்கொலையை செய்ததாக வாக்குமூலம் வழங்கியுள்ளதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் அண்மையில் தெரிவித்தனர்.

இந்தநிலையில் கொண்டயாவின் டீ.என்.ஏ குற்றத்துடன் ஒத்துப் போகவில்லை என, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

மேலும் முன்னதாக கைதான சிறுவன் உள்ளிட்ட இருவரின் டீ.என்.ஏ பரிசோதனை அறிக்கை குற்றத்துடன் ஒத்துப் போகாமையால் அவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

# அவயவங்களை சேமித்துவைக்க உத்தரவிடக்கோரி மனுத்தாக்கல்

(கொழும்பு)

திடீர் விபத்துகளின் போதும் மற்றும் பலவிதமான நோய்கள் காரணமாக பலியாகுபவர்களின் அவயவங்களை பாதுகாத்து வைக்கக்கூடிய வங்கிகளை அமைப்பதற்கு உத்தரவிடக் கோரி, கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு ஐந்து, ஹெவ்லோக்கைச் சேர்ந்த பெண்ணொருவரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அந்த மனுவின் பிரதிவாதியாக சட்டமா அதிபர், பௌத்த சாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

அவசர தேவைகளின் போது நோயாளர்களுக்கு இரத்தத்தை பெற்றுக்கொள்ள இரத்த வங்கி செயற்படுகின்ற போதும், சிறுநீரகம், ஈரல் போன்ற உறுப்புகளை பெற்றுக்கொள்ள அவ்வாறான இடங்கள் இல்லை எனவும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-10)

கேலிச்சித்திரம்



# லசந்த கொலைச் சந்தேகநபர்களின் சிம் அட்டைகள் கைதி பெயரில் பதிவு

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலைச் சந்தேக நபர்கள் பயன்படுத்திய சிம் அட்டைகள் வெலிக்கடைச் சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்த கைதி ஒருவரின் பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஐந்து சிம் அட்டைகள் இவ்வாறு கைதியின் பெயரில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இந்த கைதியிடம் புலனாய்வுப் பிரிவினர் வாக்கு மூலம் ஒன்றை பதிவு செய்துள்ளனர். பின்னர் இந்தக் கைதி சிறையிலிருந்து விடுதலையாகி இயற்கையாகவே மரணித்துள்ளார்.

எவ்வாறெனினும் சிம் அட்டைகளின் ஊடாக லசந்த கொலை தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

லசந்தவிற்கு காணப்பட்ட உயிர் அச்சுறுத்தல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நபர்கள் பற்றிய விபரங்களையும் பொலிஸார் திரட்டியுள்ளனர்.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதி அத்திடிய பிரதேசத்தில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் லசந்த கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பிலான குற்றவாளிகள் இதுவரையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# பல்கலைக்கழக புலமைப்பரிசிலை அதிகரிக்க ஏற்பாடு

பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் 2ஆயிரத்து 500 ரூபாய் புலமைப்பரிசில், 4ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாபொல புலமைப்பரிசில் தொகையை 2 ஆயிரத்து 500 ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கவுள்ளதால் அதனுடன் ஒப்பிட்டு இதனை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கூறப்படுகின்றது. (இ-10)

# முரளி கிண்ண கிரிக்கெட் நேற்று ஆரம்பம்






வருடந்தோறும் நடைபெற்று வருகின்ற முரளி கிண்ணம் கிரிகெட் சுற்றுப் போட்டி 2015 நேற்று கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

நேற்றுக் காலை ஒன்பது மணிக்கு இலங்கை கிரிகெட் அணியின முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார விசேட அதிதியாக கலந்து கொண்டு முதலாவது போட்டியை ஆரம்பித்து வைத்தார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மாங்குளம் போன்ற இடங்களில் இடம் பெறுகின்ற இப்போட்டியில் 23 அணிகள் பங்கு பற்றுகின்றன. மாங்குளம் மைதானத்தில் முரளி கிண்ணம் கிரிக்கெட்டின் பெண்களுக்கான போட்டியும் இடம்பெற்றது.

கிளிநொச்சி நேற்றைய முதலாவது போட்டி கிளிநொச்சி அணியினருக்கும், கொழும்பு ஆனந்தா கல்லூரிக்கும் இடையில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் போது கிளிநொச்சியில் தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கு நற்குணாம முன்னேற்ற அமைப்பினால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டிகளை மாணவர்களிடம் குமார் சங்கக்கார வழங்கி வைதததமை நிகழ்வின் சிறப்பம்சமாக அமைந்தது.

**முரளி கிண்ணத்தின் இன்றைய போட்டிகள் :**

யாழ்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் காலை நடைபெறவுள்ள போட்டியில் - டி.எஸ்.சேனநாயக்க கல்லூரியை எதிர்த்து மலியதேவ கல்லூரியும், பிற்பகல் நடைபெறவுள்ள போட்டியில் - யாழ்ப்பாண இணைந்த கல்லூரிகளை எதிர்த்து மொனறாகலை இணைந்த கல்லூரிகள் மோதவுள்ளன. (க)


## எமது பாடசாலையில் தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்


குகலநாதன்
இசைவிழி
புள்ளி - 162
மாவட்ட நிலை - 83


ராஜேஸ்வரன்
வினித்தா
புள்ளி - 162
மாவட்ட நிலை - 83


மகேந்திரகுமார்
கயலரசி
புள்ளி - 159
மாவட்ட நிலை - 106


பெரியண்ணன்
கோகுலன்
புள்ளி - 157
மாவட்ட நிலை - 132


சந்திரகுமார்
கிசோபிகன்
புள்ளி - 152
மாவட்ட நிலை - 175


ஜெயசுதன்
மதிச்செல்வன்
புள்ளி - 152
மாவட்ட நிலை - 175


சந்திரகுமார் டதுசன்
புள்ளி - 184, மாவட்ட நிலை - 02

மாவட்ட நிலையில் 2ஆம் நிலையினைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவன் ச.டதுசன் அவர்களையும் ஏனைய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் ஒன்றியம்,
கிளி/விவேகானந்த வித்தியாலயம்,
அம்பாள்குளம், கிளிநொச்சி.

(சி-2403)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடம்
"குரு பிரதீபா பிரபா" நல்லாசிரியர் விருதைப் பெற்ற
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயத்தின்


திரு. அரசரட்ணம் பங்கையற்செல்வன் (முன்னாள் அதிபர்)


திருமதி. ஞானவசந்தி ஜெயக்குமாரன்


திரு. நாகேஸ்வரன் பிரியந்தன்


திரு. சிவபுண்ணியம் சிவகரன்

(2404)

ஆகியோரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாளர்கள்,
ஆசிரியர் நலன்புரி ஒன்றியம்
கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




ப.அகராயுதன்
164 புள்ளிகள்


சு.தனுரா
172 புள்ளிகள்


இ.பிரசாந்தினி
162 புள்ளிகள்


தி.விதுஜா
169 புள்ளிகள்


ஜெ.சுமேதினி
156 புள்ளிகள்


ந.அலன்
164 புள்ளிகள்


ஜெ.தர்மிகன்
155 புள்ளிகள்

### 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றோர்

1. பே. பிரவீனன் - 152 புள்ளிகள்
2. கு.கிதுர்சன் - 151 புள்ளிகள்
3. ச.தேனுஜன் - 149 புள்ளிகள்
4. சு.கேதுஷன் -148 புள்ளிகள்
5. கி.கீர்த்திகா - 137 புள்ளிகள்
6. சி. கபிஷ்னன் - 137 புள்ளிகள்
7. உ.பபிலந்தன் - 130 புள்ளிகள்
8. வி.அபிஷா - 126 புள்ளிகள்
9. க.யசிந்தா -125 புள்ளிகள்
10. தி.மதுசன் - 123 புள்ளிகள்
11. சி.பூஜா - 123 புள்ளிகள்
12. பா.ரேனுகேஸ் - 120 புள்ளிகள்
13. க.கஜித் - 120 புள்ளிகள்
14. இ.ரஸ்மிதன் - 118 புள்ளிகள்
15. ந.சங்கவி - 118 புள்ளிகள்
16. க. டானியல் - 116 புள்ளிகள்
17. ஸ்.ஸ்னா - 106 புள்ளிகள்
18. பி.டிலக்ஸி - 105 புள்ளிகள்
19. சி.திவியன் - 105 புள்ளிகள்
20. கு.வேனுயன் - 105 புள்ளிகள்
21. தி.சாருக்கான் - 103 புள்ளிகள்
22. சு.வசீகரன் - 103புள்ளிகள்
23. லோ.நிருசாந்தினி - 102 புள்ளிகள்

மேற்படி உயர் பெறுபேறு பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்த மாணவர்களையும் அதற்கு உழைத்த அதிபர் ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

C-2405

சுந்தரோடை
சுன்னாகம்.

யா/ ஸ்கந்தவரோதயா
ஆரம்பப் பாடசாலைச் சமூகம்

# வீதிப்போக்குவரத்து குறித்து விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(கரணவாய்)

வடமராட்சி அரிமாக் கழகத்தின் ஏற்பாட்டில் பருத்தித்துறை பொலிஸார் நடத்தும் வீதி போக்குவரத்து தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழிப்புணர்வுக் கருத்தரங்கிற்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது வீதிப்போக்குவரத்து ஒழுங்குகள் பற்றி ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் செய்முறைப் பயிற்சியும் நடத்தப்படவுள்ளது. (இ-5-60)

## நிர்வாக சபைக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு மீள் குடியேற்ற புனர்வாழ்வு சங்க நிர்வாகக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வலி.வடக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிர்வாகக் குழுக் கூட்டத்தில் சகல நிர்வாக அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளும்படி வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வு சங்கத் தலைவர் அ.குணபாலசிங்கம் அறிவித்துள்ளார். (இ-9)

# வேலைக்காக உண்ணாவிரதம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வேலையற்ற பட்டதாரிகள் தம்மை நிரந்தர நியமனத்தில் உள்வாங்க கோரி. காலவரையறையற்ற உண்ணாவிரத போராட்டத்தினை நேற்று புதன்கிழமை காலை ஆரம்பித்துள்ளனர்.

அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கிழக்கு மாகாண சபைக்கு முன்பான உண்ணாவிரத போராட்டம் நடத்திவரும் நிலையில். மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளும் இவ்வாறான உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு காந்தி பூங்காவில் ஒன்று கூடிய பெருமளவான வேலையற்ற பட்டதாரிகள் இவ்வாறு போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த காலத்தில் கிழக்கு மாகாண சபை மற்றும் மத்திய அரசினால் வழங்கப்பட்ட உறுதிமொழிகள் இதுவரையில் நிறைவேற்றப்படாத நிலையில் இந்த உண்ணாவிரத போராட்டத்தினை நடத்தவேண்டிய சூழ்நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளதாக இதில் கலந்து கொண்டவர்கள் தெரிவிக்கின்றனர். (இ-10)

# அரங்கு திறப்பு விழாவும் பரதநாட்டிய அரங்கேற்றமும்

யாழ்.சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள சுப்பையா உடையார் தெய்வானைப்பிள்ளை அரங்கு திறப்பு விழாவும் பரத நாட்டிய அரங்கேற்றமும் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் திருமதி சத்தியகுமாரி சிவகுமார் தலைவராகப் பங்கேற்கும் இந்நிகழ்வுகளில் அரங்குத் திறப்பு விழாவிற்கு பிரதம விருந்தினராக வலிகாமம் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வைத்திய கலாநிதி எஸ்.இராமச்சந்திரன், கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர்கள் கா.சந்திரபாலன், அ.வேலுப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் பிரதி அதிபர் செ.சிவகுமாரன், வடமராட்சி கல்வி வலய இளையோர் புதிய கண்டுபிடிப்புக்கள் பிரிவின் இணைப் பணிப்பாளர் அ.கிருபானந்தமனுநீதி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்வின் பிரதம விருந்தினராக சாந்தினி சிவநேசன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வலி. மேற்கு சங்கானை பிரதேச செயலர் அ.சோதிநாதன், சங்கீத பாட ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.கணபதிப்பிள்ளை, கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் வ.ஸ்ரீகாந்தன், கனடா பழைய மாணவர் சங்கச் செயலாளர் முகுதர்சன் ஆகியோர் கலந்துகொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக கல்லூரியின் ஓய்வு நிலை பிரதி அதிபர் க.இந்திரராஜா, திருகோணமலை வரையறுக்கப்பட்ட கடற்றொழில் பணிப்பாளர் ஸ்ரீஇதயா பரநாதன் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)


அதிரடிச் சலுகை

வலம்புரியின் அதிரடிச் சலுகை

- மரண அறிவித்தல்கள்
- கண்ணீர் அஞ்சலிகள்
- நினைவு கூருதல்

ஆகியவற்றுக்கு


மேலதிக விபரங்களுக்கு இன்றே வலம்புரி காரியாலயத்தை நாடுங்கள்...

தொடர்புகளுக்கு :-

021 221 7603,
021 321 0815
021 567 1543

Valampurii@yahoo.com


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 - 07 - 1940

மறைவு 19 - 09 - 2014

**அமரர். வேலுப்பிள்ளை கந்தையா**
(சைக்கிள் திருத்துநர்)
திதி: 08.10.2015 ஏகாதசி

அன்பின் திருவுருவே பண்பின் வடிவமே
சொல்லின் செல்வனே
சோராது உழைத்த உத்தமனே
அல்லும் பகலும் எமக்காய்
வாழ்ந்து தேய்ந்தீரே - ஐயா
நெஞ்சம் உருகுகிறோம்
உம் நினைவால் வாடுகிறோம்.

(C2394)

யமுனாநதி,
பழைய விதானையார் வீதி,
உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

## 10ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 28 - 04 - 1927

இறப்பு 28 - 02 - 2005

**அமரர் விநாசி இராமலிங்கம்**
அமரர் வேலாயுதம் துரையப்பாவின் பாசமிகு மச்சான்.

## 4ம் ஆண்டு நினைவஞ்சலியும் பிறந்தநாள் நினைவும்



பிறப்பு 07 - 10 - 1935

இறப்பு 22 - 09 - 2011

**அமரர் இராமலிங்கம் கமலாம்பிகை**
அமரர் வேலாயுதம் துரையப்பாவின் பாசமிகு சகோதரி.

ஏகாதசி: 08-10-2015

குடும்பத்தின் ஒளி விளக்காய் - அன்பின்
இருப்பிடமாய் நற்பண்புகளுடன் - நல்
வாழ்வுக்கு வழிகாட்டி எமக்காகவே
வாழ்ந்த எம் அன்புத் தெய்வங்களே
உங்கள் நினைவுடன் என்றும் வாழ்கிறோம்

கணேஷ் மொடன் கட்டிங்,
910, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

(1983)

தகவல்
கணேஷரெட்ணம் (மருமகன்)
குடும்பத்தினர்.

# ராசி பலன்

08.10.2015
(புரட்டாதி 21, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு
ஏகாதசி முன்னிரவு 10.06 மணிவரை
ஆயிலியம் பிற்பகல் 5.06 மணிவரை
இராகுகாலம் 1.32-3.02 மணிவரை
சுபநேரம் 07.32-9.02 மணிவரை
ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>பூராடம், உத்தராடம்<br>மாலை 5.11 இற்கு<br>சிங்-சந் | | சந் |
| | | | குரு,சுக்<br>செவ் |
| | சனி | | சூரி,புத<br>ராகு |

**மீனம்**
நீண்ட நாட்களாக திட்டமிட்டிருந்த காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, பாராட்டும் புகழும் கூடும், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மேடம்**
எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அழகு சாதனப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**இடபம்**
விடா முயற்சிக்கு இன்று வெற்றி கிடைக்கும், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், மூத்த சகோதரர்கள் உங்களின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவர், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்**
சந்தித்த நண்பர்களால் சந்தோசங்கள் கிடைக்கும் நாள், கடினமான வேலைகளைக்கூட நயமாகப் பேசிச் சமாளிப்பீர்கள், வெளியூர்ப் பயணங்களால் ஆதாயம் கிடைக்கும்.

**கும்பம்**
குடும்பத்தில் மகிழ்ச்சிதரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், கடன்சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள்.

**கடகம்**
பயணங்களின் போது புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், உங்களைப் பற்றி விமர்சிக்கும் சிலரிடம் பேசாமல் இருப்பது நல்லது.

**மகரம்**
மறக்கமுடியாத சம்பவங்கள் இடம்பெறலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**சிம்மம்**
செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வேலைச்சுமை அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**தனுசு**
கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வரம் தரும் தெய்வங்களை வழிபடவேண்டிய நாள், மாலைநேரம் மகிழ்ச்சிக்குரிய தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்**
விருந்தினர் வருகையுண்டு, வழிபாட்டால் பெருமை காணவேண்டிய நாள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, புதிய முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**துலாம்**
சொல்லைச் செயலாக்கிக் காட்ட முற்படுவீர்கள், தொழிலில் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், முயற்சிகள் எளிதில் கைகூடும், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி**
தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.

# முதலமைச்சர் நிதியத்தை ஆரம்பித்து வெகுவிரைவில் பிரச்சினைக்குத் தீர்வு

## மக்களுக்கு வாக்குறுதியளித்தார் விக்னேஸ்வரன்

**முதலமைச்சர் நிதியத்தை ஆரம்பிப்பதில் உள்ள பல தடைகளையும் தாணடி வெகுவிரைவில் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

பிரமாண அடிப்படையிலான நிதி ஒதுக்கீட்டின் கீழ் உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வு நேற்றைய தினம் யாழிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.


அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது பல தேவைகளையுடைய மக்கள் காணப்பட்டாலும் அவர்கள் அனைவருக்கும் உதவி செய்யக்கூடிய வசதி எமக்கு இல்லை. அரசாங்கத்தால் தரப்படும் சொற்ப தொகையை வைத்து அதிக தேவையுடையவர்களுக்கு அதிலும் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு கொடுத்து வருகிறோம்.

மேலும் எமது மக்கள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்க வேண்டுமென விரும்புகிறார்கள். அவர்களுடைய உதவிகளையும் பெற்று எம்மால் முடிந்த பல சேவைகளை செய்து வருகிறோம்.

மக்களின் வாழ்க்கையை மேம்பாடடையக் கூடிய வகையிலான உதவிகளை நாம் செய்ய வேண்டும். வெறுமனே பாவிப்புப் பொருட்களை வழங்குவதில் பயனில்லை.

எனவே நிலைத்து நிற்கக் கூடியதும் மக்களின் வாழ்க்கை முறையை இலகுவாக்கக் கூடியதுமான உதவிகளை செய்ய வேண்டும். அதுவே எமது முக்கிய நோக்கமும் ஆகும். அதனடிப்படையில் உதவிகளை செய்து வருகின்றோம். அவை போதுமானதாக இல்லை என்பது எமக்குத் தெரியும். வெகு விரைவில் எமது மக்களுக்கு தேவையான போதியளவு உதவிகளை செய்வதற்குரிய காலம் வரும் என நம்புவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## மூன்றாமிடம்



ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட தேசிய மட்ட சித்திரப்போட்டியில் யாழ். வட இந்து ஆரம்பப் பாடசாலை மாணவி தர்சனா- அகிலன் 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மேற்படிபோட்டி 26.09.2015 அன்று மருதனார்மடத்தில் உள்ள மாகாண கல்வித் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5-60)




# இந்திய இழுவைப் படகுகளை உடன் தடுத்து நிறுத்துங்கள்

## மஹிந்தவிடம் மீண்டும் முறையிட வடக்கு மீனவர்கள் முடிவு

இந்திய இழுவைப் படகுகளின் வருகையை உடன் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளும்படி கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவிடம் மீண்டும் வலியுறுத்தவுள்ளதாக வட மாகாண கடற்றொழிலாளர் இணையம், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனம் மற்றும் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்கம் என்பனகூட்டாகஅறிவித்துள்ளன.

இது தொடர்பான அந்த அமைப்புக்கள் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

எமது கடற்பரப்புக்கள் அத்துமீறி நுழைந்து கடல் வளங்களையும்மீன்குஞ்சுகளைஅழித்து எமது வலைகளை அறுத்து நாசம் செய்து எமது வாழ்வாதாரத்தைசீர்குலைத்துஎமது பின்சந்ததியினரின் வாழ்வியலை கேள்விக்குறியாக்கி வருகின்ற இந்திய இழுவைப் படகுகளை கைப்பற்றி அரசுடமையாக்கும்படியும் அப்படகுகளில் வருகின்ற மீனவர்களை நீதிமன்றங்களில்நிறுத்திதண்டனைவழங்கவேண்டும் என்ற கோரிக்கைகளைமுன்வைத்து 23.09.2015 அன்று பல ஆயிரக்கணக்கான மக்களை ஒன்று திரட்டி யாழ். வரலாற்றில் முக்கியம் வாய்ந்த அறவழிப் பேரணியை நடத்தினோம். இதன் பின் மகஜரை மாவட்ட செயலர் கடற்றொழில்மற்றும்நீரியல் வளதிணைக்கள உதவிப் பணிப்பாளர் மற்றும் யாழ். இந்திய துணைத் தூதுவர் ஆகியோரிடம் கையளித்திருந்தோம்.

அதற்குரிய பதிலையும் பலாபலன்களையும் எதிர்பார்த்துக் காத்திருந்த வேளையில் மீண்டும் இந்திய இழுவைப் படகுகளின் துணிவுகரமான அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள் அதிகரித்துக் கொண்டே போகின்றது.

மழை காலம் ஆரம்பித்துள்ளதால் இழுவைப் படகுகளின் வருகையை அவதானிக்க முடியாதுள்ளது.

இதுவரைநாட்களில்வலைகள், வளங்கள் தான் நாசமாகின. மழை காலத்தில் படகுகளுடன் மோதி, எமது சிறு படகுகள் சேதத்துக்குள்ளாவதோடு உயிர் ஆபத்து ஏற்பட நூறு வீதம் வாய்ப்புள்ளது.

இதேவேளை எமது மூன்று அமைப்புக்களைச் சார்ந்த ஏழு பேர் அடங்கிய குழு கடந்த 28.09.2015 அன்று பிற்பகல் 1.30 மணியளவில் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள்துறை அமைச்சர் மஹிந்த அமரவீரவை அமைச்சின் மண்டபத்தில் சந்தித்து எமது அத்தியாவசிய மற்றும் அடிப்படைத் தேவைகள் பற்றி கலந்துரையாடினோம். அக்கலந்துரையாடலின் போது,

மாதகல், குருநகர், பருத்தித்துறை ஆகிய துறைகளில் மீன்பிடித்துறைமுகம்அமைத்தல்,

காக்கைதீவு, காரைநகர், நெடுந்தீவு மற்றும் வடமராட்சி கிழக்கு, காக்கைதீவுப்பகுதி, மாதகல் போன்ற இடங்களில் இடிதாங்கி அமைத்தல்,

நெடுந்தீவு, அனலைதீவு, கோவளம், பருத்தித்துறை, மாமுனை, வெற்றிலைக் கேணி போன்ற இடங்களில் உள்ள வெளிச்ச வீடுகளை புனரமைப்பு போன்ற கோரிக்கைகளை முன்வைத்திருந்தோம். அவற்றை பூர்த்தி செய்து தருவதாக உறுதியளித்திருந்தார்.

அதுமட்டுமின்றி மீனவர்களுடைய ஓய்வூதியத்தை அதிகப்படுத்துவதோடு, ஆயுட்கால ஓய்வூதியமாக மாற்றம் செய்து தரும்படி கேட்டிருந்தோம். அதுபற்றி ஆலோசிப்பதாகக் கூறியிருந்தார்.

சட்ட விரோத தொழில்களான தங்கூசிவலை, டைனமைற் போட்டு மீன் அள்ளுதல், லைற் போட்டு மீன் அள்ளுதல் போன்ற தொழில்களை உடனடியாக சட்ட நடவடிக்கை மூலம் தடுப்பதாக கூறினார். அத்துடன்,

உள்நாட்டு இழுவைப்படகுத் தொழிலை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்திருந்தார்.

மேலும் இந்திய இழுவைப் படகுகளின் வருகையை உடனடியாக தடுப்பதுடன் கைது செய்யப்படும் இழுவைப்படகுகளை அரசுடமையாக்குவதோடு அதில் வரும் இந்திய மீனவர்களை நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும் என்று கேட்டிருந்த போது இப் பிரச்சினையை இராஜதந்திர ரீதியில் அணுகி ஒரு முடிவுக்கு வரலாம் என்றும் இந்த மாதத்தின் பிற்பகுதியில் அமைச்சர் யாழ்ப்பாணம் வருவதாகவும் இந்திய இழுவைப்படகு தொடர்பாக விரிவாக பேசப்படும் என கடற்றொழில் அமைச்சரால் எமக்கு உறுதியளிக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பாக யாழ்ப்பாணம் வரும் பொழுது அமைச்சரிடம் மீண்டும் வலியுறுத்தவுள்ளோம் என மேலும் அந்த அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. (இ-9)

# மாற்றுவலுவுடையோர் தினப்போட்டி முடிவுகள்

சர்வதேச மாற்றுவலுவுடையோர் தினத்தை முன்னிட்டு கரவெட்டி பிரதேச செயலகத்தினால் கரவெட்டி கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியோர் விபரம் வெளியிடப்பட்டுள்ளது. முதல் மூன்று இடங்களை பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**கவிதை;-கீழ்ப்பிரிவு**

ம.துவாரகன்(யாழ்.வதிரி திரு இருதயக் கல்லூரி), சு.தக்ஷா (யாழ்.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), உ.நித்திலா(யாழ்.உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**மத்திய பிரிவு**

த.சோபியா(யா/வதிரி திரு இருதயக் கல்லூரி), யோ.நிருஷிகா(யா/வடமராட்சி மத்திய கல்லூரி), ஸ்ரீ.ஜஸ்மிதா(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**மேற்பிரிவு**

இ.கோபிகா(யா/நெல்லியடி மத்திய கல்லூரி), சு.சிவப்பிரியா(யா/விக்னேஸ்வராக் கல்லூரி), சி.லக்ஷலா(யா/வடமராட்சி மத்திய கல்லூரி)

**கட்டுர-கீழ்ப்பிரிவு**

ப.அனுசியா(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சே.சதுர்ஸ்திகா(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சி.மதிவதனா(யா/வதிரி திரு இருதயக் கல்லூரி)

**மத்தியபிரிவு**

ம.லலிதாம்பிகை(யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), கே.ரகுராஜ்(யா/விக்னேஸ்வராக் கல்லூரி), து.பவித்திரா (யா/கம்பர்மலை வித்தியாலயம்)

**மேற்பிரிவு**

க.தயானி(யா/விக்கினேஸ்வராக் கல்லூரி), ஜெ.அபிநயா (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஸ்ரீ.தேனுஜா (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**பேச்சு-கீழ்ப்பிரிவு**

ஆ.தர்சினி (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), து.தயாபரன்(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ர.கலைவாணன்(யா/இமையாணன் அ.த.க.பா.)

**மத்திய பிரிவு**

சி.இந்துஜா (யா/கட்டைவேலி யாக்கரு விநாயகர் வித்தியாலயம்), ர.ஆர்த்திகா (யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), அ.அபிநயா (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)

**மேற்பிரிவு**

இ.செயகுலேந்திரன்(யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), சி.நிதர்சனா(யா/விக்கினேஸ்வராக் கல்லூரி). (இ-5-60)

# பண்பாட்டு பெருவிழா

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கலை, கலாசாரப் பேரவையும் யாழ். மாவட்டச் செயலகமும் இணைந்து நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா நாளை மறுதினம் 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை கலாபூஷணம் செல்லையா மெற்றாஸ் மெயில் அரங்கில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அருட்பணி யோசப் யோன் மௌலீஸ், சாமிசிறி தேசமானிய மௌலி அஸ்மல் ஏ.காதர், ஸ்ரீ நாகவிகாரை சர்வதேச பௌத்த நிலைய வண கலைமாணி மீகஹஜந்துரே சிறிவிமலதேரர் ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் மற்றும் கௌரவ விருந்தினர் வடக்கு மாகாண ஓய்வு நிலை பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-9)

# நெருப்புக்காய்ச்சல் தடுப்பு மருந்தேற்றல்

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 5 வயது தொடக்கம் 25 வயதிற்குட்பட்டோருக்கான நெருப்புக்காய்ச்சல் தடுப்பு மருந்தேற்றல் நடவடிக்கைகள் பிரதி சனிக்கிழமைகளில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட இடங்களில் மேற்படி தடுப்பு மருந்தேற்றல் செயற்பாடுகள் நடைபெறும்.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நெருப்புக்காய்ச்சல் நோயாளிகள் அதிகமாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதனால் சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் ஆலோசனைக்கமைவாகவே தடுப்பு மருந்தேற்றல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி மேலும் அறிவித்துள்ளார். (இ-5-60)




ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைவாக நாடு முழுவதும் ஆரம்பிக்கப்பட்டுள்ள உணவு உற்பத்தி வேலைத்திட்டம் யாழ். மாவட்டத்தில் கடந்த திங்கட்கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. யாழ்.மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், வாழ்வின் எழுச்சிப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பழ மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர். (படங்கள்: பொ.சோபிகா)

# அமெரிக்காவிற்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும்!

## பழ.நெடுமாறன் வலியுறுத்து

(கொழும்பு)

**இலங்கை தொடர்பான தீர்மானத்தில் அமெரிக்காவின் சர்வாதிகார செயற்பாடுகளுக்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும் என இந்தியாவின் தமிழ்த்தேசிய இயகத்தின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.**



மேலும், இலங்கைத் தமிழர்களின் நலன்களுக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்திற்கு எதிராக, ஐக்கிய அமெரிக்காவின் உற்பத்தி பொருட்களை பகிஷ்கரிக்க இளைஞர்கள் மற்றும் மாணவர் அமைப்புக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இலங்கையில் இறுதி யுத்தத்தில் இரண்டு இலட்சம் தமிழ் மக்கள் சிங்கள பேரினவாதிகளால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட்டால்மட்டுமே சரியான தீர்வினை எட்ட முடியும என தெரிவித்துள்ளார்.

இத்தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவு வழங்கியமையானது ஒரு துரதிர்ஷ்ட வசமான செயலாகும் எனவும் தெரிவித்தார்.

இந்நிலையில் இத்தகைய அமெரிக்காவின் சர்வாதிகார செயற்பாடுகளுக்கு தகுந்த பாடம் புகட்டவேண்டும். குறிப்பாக அமெரிக்க உற்பத்திகளை புறக்கணித்து அதன் சர்வாதிகாரத்தினைமுடிவுக்கு கொண்டு வருவதன் ஊடாக எஞ்சியிருப்பதை யாவது சேமிக்க முடியும் என இவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## ஆற்றில் குதித்த யுவதி பொலிஸார் மீது தாக்கு

கண்டி - தென்னக்கும்புர பாலத்திலிருந்து மகாவலி கங்கையில் குதித்த யுவதி ஒருவரை காப்பாற்றிய பொலிஸார் மற்றும் பிரதேச மக்களை குறித்த யுவதி தாக்கி யுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

பலகொல்லை பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய யுவதியே இவ்வாறு ஆற்றில் குதித்துள்ளார்.

குறித்த யுவதி மீது சந்தேகம் கொண்ட பிரதேச வாசிகள், யுவதியை கண்காணித்து பின்தொடர்ந்துள்ளனர்.

இந்நிலையிலேயே குறிதத யுவதி ஆற்றில் குதித்த போது உடனடியாக காப்பாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

காப்பாற்றப்பட்ட பின்னர் யுவதி அந்த இடத்திலிருந்து தப்பிச் செல்ல முயன்றுள்ளதுடன், அவரை காப்பாற்றியவர்களை தாக்கியும் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் (இ-10)

### அதிபர் போட்டிப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது

நாளை மறுதினம் 10 ஆம் திகதி ஆசிரியர்களுக்கு நடை பெறவிருந்த அதிபர் தரம் - III போட்டிப்பரீட்சை பிறிதொரு தினத்திற்குப் பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சை மதிப்பீட்டுக் கடமையில் உள்ள அநேக ஆசிரியர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதால் ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ள அசௌகரியங்கள் குறித்து கல்வி அமைச்சுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் முன் வைத்த வேண்டுகோளுக்கு இணங்க பிற்போடப்பட்டுள்ளது. (இ-10)

## காணாமற்போன எக்னெலிகொட குறித்த பல முக்கியதகவல்கள் வெளியாகியுள்ளன

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் தொடர்பிலான பல முக்கிய தகவல்கள் வெளியாகியுள்ளன.

கிரிதலே இராணுவ முகாமிற்கு சென்ற புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்கள் பல முக்கிய தகவல்களை திரட்டியுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், முக்கிய தகவல்களை வெளியிட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய 11 சந்தேக நபர்கள் கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டு விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி எக்னெலிகொட முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்ட விதம், தடுத்து வைக்கப்பட்டிருந்த இடம் உள்ளிட்ட பல முக்கிய விபரங்களை புலனாய்வுப் பிரிவினர் திரட்டியுள்ளனர்.

கிரிதலே முகாமில் பேணப்பட்டு வந்த அதிகாரிகள் உத்தியோகத்தர்களின் விடுமுறை பெற்றுக் கொள்ளுதல் மற்றும் சேவைக்கு திரும்புதல் தொடர்பான ஆவணங்கள், வாகனங்கள் உட்செல்லல் மற்றும் வெளியேறுதல் தொடர்பான ஆவணங்கள் என்பனவற்றையும் புலனாய்வுப் பிரிவினர் சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களின் கையடக்க தொலைபேசி பற்றிய விபரங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை புலனாய்வுப் பிரிவினருக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் கிருசாந்த டி சில்வா, முகாம் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

2009 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் தம்புள்ள பிரதேசத்தில் காணப்பட்ட காணியொன்றில் எக்னெலிகொட நடத்திய சந்திப்பு ஒன்று குறித்த குரல் தகவல்களை பதிவு செய்திருந்த இராணுவப் புலனாய்வுப் பிரிவினர், அப்போதைய பிரிவின் பணிப்பாளரிடம் சமர்ப்பித்துள்ளனர்.

அந்த விடயம் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-10)


கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை<br>கி.பா:59 செவ் 7 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்<br>தொ.இ: B/5053 | பிறப்பு: 1986RC<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 26 செவ் 2 இல்<br>உயரம்: 162cm<br>தகைமை/தொழில்:BA/அரசதொழில்<br>தொ.இ: G/5076 |
| பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 43<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/Lலண்டன் NOT PR<br>தொ.இ: B/5056 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 9<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/5078 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 8சூரிசெவ் 10 இல<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: PHDஅமெரிக்கா<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம்<br>தொ.இ: B/5057 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 37<br>உயரம்: 4'10"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/5079 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 19 செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/5059 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 43<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:பட்டதாரி<br>தொ.இ: G/5085 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சையில்

# துணுக்காய்,முல்லை.கல்வி வலயங்களில் 201 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்

(மல்லாவி)

**துணுக்காய், முல்லைத்தீவு ஆகிய கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளிலிருந்து இவ்வருடம் நடைபெற்று முடிந்த தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியவர்களில் 201 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக அந்தந்த வலயக் கல்விப்பணிப்பாளர்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது.**

இதற்கமைய துணுக்காய் கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 30 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக துணுக்காய் வலய கல்விப்பணிப்பாளர் திருமதி.மாலினி வெனிற்றன் அறிவித்துள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலையிலிருந்து பரீட்சைக்கு தோற்றியவர்களில் 171 மாணவர்கள் சித்தியடைந்துள்ளதாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உதயராணி முனீஸ்வரன் அறிவித்துள்ளார். (2-15)



வவுனியா செட்டிக்குளம் மகாவித்தியாலயத்தில் அண்மையில் ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டதை படத்தில் காணலாம்.

(படம்: குருமன்காடு செய்தியாளர்)

# நடப்பாண்டில் பப்பாசிப்பழ ஏற்றுமதியில் 7 கோடி ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது

## வடக்கு மாகாண விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(வவுனியா)

வவுனியா வடக்கு விவசாயிகளின் அபார முயற்சியினால் பப்பாசிப்பழ ஏற்றுமதிகளில் நடப்பாண்டில் 7 கோடி ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது. வவுனியா வடக்கில் பப்பாசிச் செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் தனித்தனியாகப் பிரிந்து நின்று இயங்காமல் பழச்செய்கையாளர் கூட்டுறவு அமைப்பாகச் செயற்பட்டதாலேயே இது சாத்தியமாகியது என வடக்கு விவசாய மற்றும் கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா கடந்த 4 ஆம் திகதி வவுனியா முத்தையா மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், கூட்டுறவு அமைப்புகள் நலிவடைந்திருப்பதற்கு கடந்த காலப் போரையே பலரும் காரணமாகச் சொல்லிவருகிறார்கள். போரும் ஒரு காரணமே தவிர, போர் மட்டுமே ஒரு காரணம் அல்ல.

கூட்டுறவு அமைப்புகள் சரிவர இயங்க முடியாமல் இருப்பதற்கு, திறந்த பொருளாதாரத்தின் போட்டிச் சந்தைக்கு அவற்றால் முழுமையாக முகங்கொடுக்க முடியாமல் இருப்பதும் ஒரு பெருங்காரணமாக உள்ளது. தனியார் துறையுடன் போட்டி போடக்கூடிய புதிய வழிமுறைகளைக் கூட்டுறவு அமைப்புகள் கண்டறிந்து செயற்படுத்துவதற்கு முன்வர வேண்டும்.

வவுனியா வடக்கு பழச் செய்கையாளர் கூட்டுறவுச்சங்கம் 200 பப்பாசிச் செய்கையாளர்கள் இணைந்து இந்தக் கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த விவசாயிகளிடம் இருந்து சங்கம் கிலோவுக்கு 30 ரூபா கொடுத்துப் பப்பாசிப்பழத்தை கொள்வனவு செய்து வருகிறது. 2015 ஆம் ஆண்டில், இதுவரையில் 700 இலட்சம் ரூபாவிற்கு பழம் கொள்வனவு செய்யப்பட்டிருக்கிறது.

இந்தக் கூட்டுத் தொழில் முயற்சியால், விவசாயிகளிடம் கொள்வனவு செய்யும் பப்பாசிப் பழங்களை மத்தியகிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துகொண்டிருக்கிறது. இதன்மூலம் இந்த ஆண்டில் கூட்டுறவு அமைப்புக்கு 24 இலட்சம் ரூபா இலாபப் பங்காகக் கிடைத்திருக்கிறது. வினைத்திறன் மிக்க இந்தச் சங்கத்தைக் கௌரவிக்கும் முகமாக இலங்கை ஏற்றுமதியாளர் சம்மேளனம் வடக்கின் 2015 ஆம் ஆண்டின் சிறந்த ஏற்றுமதியாளர் என்ற விருதை இதற்கு வழங்கி கௌரவித்திருக்கிறது என்றார். (2)




# திட்ட முன்வரைபுக்கான நிதி வளங்களை பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும்

## வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சருடனான சந்திப்பில் பிரி.துணைத்தூதுவர் உறுதி

(மன்னார்)

வன்னியுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்ட 11 ஆயிரத்து 816 குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்திட்டங்களை ஏற்படுத்த வேண்டிய தேவை காணப்படுவதாக வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய துணைத்தூதுவர் லவ்றா டேவிஸ்க்கும் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கும் இடையில் விசேட சந்திப்பு நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் மன்னார் ஆகாஸ் ஹோட்டலில் நடைபெற்றது.



இவ்விசேட சந்திப்பு தொடர்பாக அமைச்சர் கருத்து தெரிவிக்கையில், இந்தச் சந்திப்பானது அரசியல் மற்றும்அபிவிருத்தி தொடர்பில் அமைந்ததாகவும், குறிப்பாக வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் அரசியல் கைதிகள், புனர்வாழ்வு பெற்ற போராளிகள், பிள்ளைகளை யுத்தத்தால் இழந்த குடும்பங்கள் தொடர்பாக உரையாடியதாகவும், மேற்படி நபர்களுக்கான வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பில் தெரியப்படுத்தியதோடு, இவ்வருடம் ஏறக்குறைய 860 குடும்பங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியினூடாக ஓர் கணிசமான வருமானம் பெறக்கூடியவகையில் சுயதொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தமுடியும். ஏனைய பதிவு செய்யப்பட்ட 11 ஆயிரத்து 816 குடும்பங்களுக்கு இன்னமும் வாழ்வாதாரத்திட்டங்களை ஏற்படுத்தவேண்டிய தேவை எமக்குகாணப்படுவதாலும் இவர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதனாலும் இவர்களுக்குவாழ்வாதாரத்தை ஏற்படுத்த மத்திய அரசு தரும் நிதி போதாது என்பதை தாம் சுட்டிக்காட்டியதாகவும். அத்தோடு மேற்படி குடும்பங்களுக்கு வாழ்வாதார ஊக்குவிப்பு உதவித்திட்டத்துக்கான திட்ட முன்வரைபையும் பிரித்தானிய துணை தூதுவரிடம் கையளித்துள்ளேன். அந்தசந்தர்ப்பத்தில் அவர் மேற்படி திட்ட முன்வரைபுக்கான நிதிவளங்களை பெறுவதற்கான ஏற்பாடுகளை செய்து தருவதாகவும், இத்திட்டம் தொடர்பான வலுவான தனது சிபாரிசினை ஐரோப்பிய ஒன்றியத்திடம் வழங்குவதாகவும் உறுதியளித்துள்ளார். என்றும் அமைச்சர் தெரிவித்தார். (2-9)

# தமிழ்ச் சமூகத்தின் கல்வித்துறையை கட்டிக்காக்கும் தூண்கள் ஆசிரியர்கள்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் புகழாரம்

தமிழ்ச் சமூகத்தின் கல்வித்துறையை அழிப்பதற்காக பலவடிவங்களில் சுழன்றடித்த சூறாவளிகளுக்கு நடுவிலும் நிமிர்ந்துநின்று கல்வியை கட்டிக்காத்த தூண்கள் எமது ஆசிரியர்கள் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

கிளி/விவேகானந்தா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தினத்தில் கலந்து கொண்டு ஆசிரியர்களை வாழ்த்தி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் உரையாற்றுகையில், கடந்தகாலங்களில் எமது கல்வித்துறையானது பல இன்னல்களையும் சவால்களையும் சந்தித்தது. மீள் குடியேற்றத்தின் ஆரம்பத்தில் எமது பிரதேசங்களில் மாணவர்கள் கல்வியை தொடர்வதற்கான சூழல் இருக்கவில்லை. பாடசாலைகள் எவற்றிலும் வகுப்பறைகள் காணப்படவில்லை பல பாடசாலைகளில் ஆசிரியர் மேசைகள்கூட இருக்கவில்லை பல பாடசாலைகள் அடிப்படையான இருப்பிடங்கள் இன்றியே இயங்கின. அன்று ஆசிரியர்கள் பாடசாலைகளுக்கு செல்வதென்பதுகூட இப்பகுதிகளில் மிகச்சிரமமான விடயமாகவே காணப்பட்டது. ஒவ்வொரு பாடசாலைகளுக்குமான போக்குவரத்து உட்பட எந்த வசதி வாய்ப்புக்களும் இருக்கவில்லை. ஆனால் அந்த நிலைமையிலிருந்து இன்று நாம் மீண்டு வந்திருக்கின்றோம்.

இழந்த கல்வி இன்று பல சவால்களுக்கு மத்தியில் மீளக்கட்டியெழுப்பப்பட்டிருக்கின்றது . பாரிய யுத்தம் நடைபெற்ற இப்பூமியில் மீளவும் கல்வித்துறையை கட்டியெழுப்புவதென்பது சாதாரண விடயமல்ல ஆனாலும் மிகக்கடினமான உழைப்பிற்கூடாக அது நிறைவேற்றப்பட்டிருக்கின்றது. அதற்காக கல்வித்துறைசார்ந்த அனைவரும் தமது ஒத்துழைப்புக்களை வழங்கியிருக்கின்றார்கள். பல அர்ப்பணிப்பு மிக்க உன்னத சேவைகளின் பின்னணியில் இன்று கிளிநொச்சி மாவட்டம் கல்வியால் மேம்பாட்டை எட்டியிருக்கின்றது. இம்மாவட்டத்தில் இயங்கிவரும் அனைத்து பாடசாலைகளின் தேவைகளும் ஓரளவு நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. ஒரு பின்தங்கிய கிராமத்தின் பாடசாலையில் ஒரு ஆசிரியரின் சேவை எவ்வாறு அமையவேண்டும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இங்கு கற்பிக்கும் ஆசிரியர்களின் சேவை அமைந்திருக்கின்றது.

ஆசிரியர் தினத்தில் ஆசிரியர்களின் மகத்தான சேவை மேலும் விரிவடைந்து சமூகத்தில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் அறியாமை என்னும் இருளை நீக்கி நிறைவான அறிவுசார் சமூகத்தை கட்டியெழுப்ப தொடர்ந்தும் ஆசிரியர்கள் பாடுபடவேண்டும். என அவர் மேலும் குறிப்பிட்டார்.(2)





கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் முதியோர் தின நிகழ்வுகள் கடந்த முதலாம் திகதி இடம்பெற்றது. இந்நிகழ்வில் கிராமத்தின் 100 சிரேஷ்ட பிரஜைகள் கிராமமக்களால் கௌரவிக்கப்பட்டனர்.

(படங்கள்: மல்லாவி செய்தியாளர்)

### தேவார பண்ணிசை வகுப்பு

மதுரை திருவாரூர் 'தேவார இசை மணி' கு. இராமச்சந்திரன் ஓதுவாரினால் தேவார பண்ணிசை வகுப்பு இன்று வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி மகாதேவ ஆச்சிரமத்தில் ஆரம்பித்துவைக்கப்படவுள்ளது.

இதில் ஆர்வமுள்ள சிறார்கள் அனைவரையும் பங்கேற்று பயன்பெறுமாறு ஆச்சிரமத்தலைவர், ஞானசிரோன்மணி ஸ்ரீமத் கணேஷானந்த மகாதேவ சுவாமிகள் அறிவித்துள்ளார். (2)

# தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை-2015 பெறுபேறுகள்

நடைபெற்று முடிந்த 2015 ஆம் ஆண்டுக்கான தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களின் பெயர் விபரம் அந்தந்தப் பாடசாலை அதிபர்களினால் நேற்று வெளியிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில்,

**முல்லைத்தீவு மாவட்டம்**

**(துணுக்காய் கல்வி வலயம்)**

**மு/கொல்லவிளான் குளம் அ.த.க. பாடசாலை**

கி.சிவயதுர்சன் -157

**மு/ விநாயகபுரம் அ.த.க. பாடசாலை**

ப.தனுசியா-153

**மு/ பாண்டியன் ஆரம்ப வித்தியாலயம்**

கே.துளசிகா-158

**மு/குமாரசாமி வித்தியாலயம்**

வ.கோபிசன்-180, ற.பகீசன்-175, அ.அருட் கவி-160, ம.சாதுயன்-160, ம.டிசாந்-155, ச.சுடரவன்-155, சி.யதுர்சன்-155, றொ.அபிசேகா-154

**மு/ஆறுமுகம் வித்தியாலயம்**

வி.தமிழ் நிலவன்-171, சி.குலக்சிகா-159,

**மு/கருவேலன் கண்டல் அ.த.க.பாடசாலை**

கே.அபிநேகா-178

**மு/முத்துவிநாயகர் தமிழ் வித்தியாலயம்**

ம.தவரூபி-152, ரா.தர்சனா-154

**மு/ ஒட்டுசுட்டான் இந்து தமிழ்கலவன் வித்தியாலயம்**

இ.மேனகா-156

**மு/ கற்சிலை மடு அ.த.க. பாடசாலை**

மு.லோகிதா-166, வ.வானுசன்-152

**மு/ ஒலுமடு தமிழ் வித்தியாலயம்**

சி.சரணியா- 156

**மு/ திருமுறிகண்டி இந்து வித்தியாலயம்**

சி.நிகிதா-153

**மு/ மயில்வாகனம் தமிழ் வித்தியாலயம்**

கா.காயத்திரி-171, மு.மதுசுதன்-164

**மு/ உயிலங்குளம் அ.த.க. பாடசாலை**

யோ.யதுர்சன்-165

**மு/ அமைதிபுரம் அ.த.க. பாடசாலை**

அ.கிரியன்-153

**மு/ அனிஞ்சியன்குளம் தமிழ் கலவன் வித்தியாலயம்**

ந.திகலினி-176, ச.துர்சிகன்-173, பி.திருவேணி-168, எஸ்.தர்சிகா- 164, பி.பிரணவன்-156. (2-15)

**(முல்லைத்தீவு கல்வி வலயம்)**

**மு/ விஸ்வநாதர் ஆரம்பப் பாடசாலை**

த. தர்சாளினி-186, ல.லதுர்சன்- 184, ந.அட்சயன்-183, கி.சிவாகரன்- 180, க.திசாலி-178, க.கபிசன்-175, ஏ.ஜெனோசன்-174, ச.ஆதித்தியன்-173, ர.ரெனோல்ட்- 173, க.வினோதன்- 173, யோ. சர்சிகா-172, கி.நிதுர்சா- 170, க.நிதர்சன்- 167, க.நிலவன்-167, க.கோபிகா- 166, க.குறிஞ்சி நிலவன்-166, செ.நித்தியா-166, சி.நிதுர்சிகா-165, த.திருமாறன்-165, தி.சாரங்கன்- 162, ரே.அர்ச்சனன்- 158, யோ.யதுர்சி- 154, கோ.துசாந்-152, ஆ.ஆர்த்திகா-152. (2-302)

**மு/ உடையார்கட்டு ஆரம்பப் பாடசாலை**

க.யாலினியன்- 172, சி.அபிதா- 171, கு.ஜெஸ்மிதா-168, பா.திபானுஜன்-160, ர.கயானா-159, ஜெ.டனராம்-158, ஜெ.சிவஜி- 158, சி.பிரியங்கன்- 158, ம.அஜந்தன்- 158, பு.கீர்த்திகன்-156, சி.சிவானுஜா- 154, ரோ.அஸ்வினா-154, கு.கவிப்பிரியா-154, ச.ஜதுசன்-153, ஜெ.தர்மிகன்-152. (2-302)

**மு/ வற்றாப்பளை மகாவித்தியாலயம்**

ச.மிதுர்சனா-180, சி.கஜிந்தன்-167, சி.மதுவிழி-161, உ.சஞ்சை-160, வி.லெஸ்மிதா-157, சி.சோபிதன்-155. (2-302)

**கிளிநொச்சி மாவட்டம்**

**(கிளி/ விவேகானந்தா வித்தியாலயம்)**

ச.டதுசன்-184, இ.வினித்தா- 162, கு.இசைவிழி-162, ம.கஜலரசி- 159, பெ.கோகுலன்-157, ச.கிசோபிகன்-152, ஜெ.மதிச்செல்வன்-152

**கிளி/ தருமபுரம் இல.1 அ.த.க.பாடசாலை**

சி.லக்ஷிகா- 186, தி.கீர்த்திகா-171, ஜெ.பஜிசினி- 168, மோ.டின்சிகா- 165, த.பிரதீசனா- 161, தி.அபிநயன்- 159, வி.நர்மதன்-158, ஜெ.தேனுஷா- 156, ச.சஞ்செயன்-155, பே.விதுஷா-155.

**கிளி/ கனகபுரம் மகா வித்தியாலயம்**

யோ.ஹம்சானந்தி- 171, பா.யாதவன்-160, ர.அபிஷா- 159, ம.நிதுசிகா- 159, பு.கேதுஷா- 154, ரா.ஆர்த்திகா-152.

**கிளி/ அன்னை சாரதாதேவி வித்தியாலயம்**

மு. நிலாவினி-159.

**கிளி/ ஸ்கந்தபுரம் இல.01 அ.த.க பாடசாலை**

எஸ்.தாரகன்- 184, ரி.கவிகரன்-169, ரி.மகிந்ததீபன்-155, பி.வினுஜன்-154, எஸ்.டனுசாந்-152, எஸ்.தீபாஜினி-152. (2-271)






**ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் யு.என்.ஹபிராட் நிறுவனத்தின் அனுசரணையுடன் மாத்தளன் சகாய மாதா முன்பள்ளி கட்டட திறப்புவிழா கடந்த 30 ஆம் திகதி நடைபெற்றதைப் படத்தில் காணலாம்.**

## மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடமாடும் சேவை

(மன்னார்)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனின் ஏற்பாட்டில் மடு பிரதேச செயலகத்துக்குட்பட்ட தட்சணா மருத மடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசேட நடமாடும் சேவையொன்று நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான ஆயத்தப்பணிகளை மேற்கொள்ளும் வகையில் கடந்த 30 ஆம் திகதி காலை மடு பிரதேசத்துக்கு நேரில் விஜயம் மேற்கொண்ட வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர், வடக்கு மாகாண முதலமைச்சரின் இணைப்பு செயலாளர் எஸ். சண்முகப்பிரியன் ஆகியோர் மடு பிரதேச செயலாளர் எப்.சி. சத்தியசோதி ,மடு திருத்தல பரிபாலன அருட் தந்தை எமிலியானுஸ்பிள்ளை, அங்குள்ள கிராம மட்ட அமைப்புகளின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோருடன் கலந்துரையாடலை மேற்கொண்டனர்.

இந் நடமாடும் சேவை தொடர்பில் அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படும் மடு பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களது காணிகள் விவசாயம், சுகாதாரம், கல்வி, நீர்ப்பாசனம், போக்குவரத்து வீதிகள் போன்ற இவ்வாறாக பலதரப்பட்ட பிரச்சினைகள் இங்கு காணப்படுவதால் எமது மக்களுக்கு இந்த விடயங்கள் தொடர்பில் இலகுவில் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைப்பெற்றுக்கொடுக்கும் நோக்கோடு இவ் நடமாடும் சேவையை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

இவ்விசேட நடமாடும் சேவைக்கு வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் ஏனைய துறைசார் மூன்று அமைச்சர்கள் அவர்களுக்கு கீழ் இயங்கும் திணைக்களங்கள் மற்றும் மத்திய அரசின் திணைக்களங்கள் என்பன வருகை தரவிருப்பதால் இந்த அரிய சந்தர்ப்பத்தை எமது மடு பிரதேச மக்கள் தவறாது பயன்படுத்தி உடனடி தீர்வு பெறக்கூடிய விடயங்களில் தீர்வையும் தொடர் நடவடிக்கைகள் செய்ய வேண்டிய விடயங்களில் தொடர் நடவடிக்கை மூலமும் தமக்கான சிறந்த தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (2-9)

## பாடசாலை மாணவர்களுக்கு இடையே தேசிய இலக்கிய கலைப்போட்டி தொடர்

(மல்லாவி)

ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மட்டத்தில் தேசிய இலக்கிய கலைப்போட்டி தொடர் நடைபெறவுள்ளது.இதற்கான ஆக்கங்கள் பாடசாலை மாணவர்களிடம் இருந்து கோரப்படுவதாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் ஆர்.குருபரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, ஒட்டுசுட்டான் பிரதேச செயலகமட்டத்தில் தேசிய இலக்கிய கலைப்போட்டி தொடர் எதிர்வரும் நவம்பர் மாதம் 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்விற்குரிய ஆக்கங்கள் அனைத்தும் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக் கிழமைக்கு முன்பாக ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கப்படவேண்டும் என அவர் கேட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு இடையே பாலர்பிரிவு (6 தொடக்கம் 10வயது), கனிஷ்ட பிரிவு(11 தொடக்கம் 15 வயது), சிரேஷ்ட பிரிவு (16 தொடக்கம் 19 வயது), திறந்த பிரிவு (19 வயதிற்குமேல்) எனப்பல பிரிவுகளாக வகைப்படுத்தி கட்டுரைப் போட்டி, கவிதைப்போட்டி, கவிதைப்பாடல் போட்டி, கையெழுத்துப் போட்டி, பாடல் நயத்தல் போட்டி, குழுநடனம், தனிநடனம், சிறுவர் நாடகம், பட்டிமன்றம், வில்லுப்பாட்டு ஆகிய போட்டிகள் நடைபெறவுள்ளன.

மேற்படி போட்டிகள் தொடர்பான விபரங்களை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றுநிருபங்களைப் பார்வையிட்டு விண்ணப்பதாரிகள் அறிந்து கொள்ள முடியும்.

போட்டிகளில் வெற்றியீட்டுபவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசில்கள் என்பன வழங்கி கௌரவிக்கப்படுவதுடன் மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளும் கௌரவிக்கப்படவுள்ளன என அவர் மேலும் அறிவித்துள்ளார். (2-15)

## புதையல் தோண்டிய விவகாரம் தொடர்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு விளக்கமறியல்

(குருமன்காடு)

புதையல் தோண்டிய விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் வவுனியா, மன்னார் பிரதேச பிரதி பொலிஸ்மா அதிபர் யூ.கே. திஸ்ஸநாயக்கவின் விளக்கமறியல் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா, குடாகச்சகொடி பிரதேசத்தில் புதையல் தோண்டிய சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த வவுனியா, மன்னார் பிரதேச முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் யூ.கே திஸ்ஸ நாயக்கா மற்றும் அவருக்கு உடந்தையாக செயற்பட்ட பொலிஸ் அதிகாரி ஆகிய இருவர் மீதான விசாரணை வவுனியா மாவட்ட நீதிமன்றில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதனை விசாரித்த வவுனியா மாவட்ட நீதிபதி வி.இராமகமலன் பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் அவருக்கு உதவிய பொலிஸ் அதிகாரி ஆகிய இருவரதும் விளக்கமறியலை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நீடித்தார். (2-250)

## மு/ தண்ணீரூற்று முஸ்லிம் ம.வித்தி ஒரு தொகுதி தளபாடங்கள் அன்பளிப்பு



(முல்லைத்தீவு)


முல்லைத்தீவு வலயக்கல்வி அலுவலகத்துக்குட்பட்ட தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்துக்கு ஒரு தொகுதி கதிரைகள் மற்றும் நூலகத்துக்கான தளபாடங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலையின் அதிபர் ஏ.சி.ரியாஸ் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெயநாதன், வடமாகாண சபை உறுப்பினர் யாசின் ஜவாஹிர் ஆகிய இருவருமே குறித்த தளபாடங்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இரு மாகாண சபை உறுப்பினர்களிடம் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே, மாகாண சபையின் நிதியொதுக்கீட்டின் கீழ் இந்த தளபாடங்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன.

இதற்கமைய வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெயநாதன், பாடசாலையின் நூலகத்துக்கு 50 ஆயிரம் ரூபாய் பெறுமதிமிக்க தளபாடங்களையும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் யாசின் ஜவாஹிர், ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் பெறுமதிமிக்க 140 பிளாஸ்டிக் கதிரைகளும் அன்பளிப்புச் செய்துள்ளனர் என்று அதிபர் தெரிவித்துள்ளார். (2)

# வடமாகாணத்தில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி குறித்த ஒரு நோக்கு



சி.சிவேசன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
முகாமைகள் கற்கைகள்
வணிகபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

சமகால உலகில் சுற்றுலாத்துறை முதன்மை வாய்ந்த துறையாகவும், மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருகின்ற துறையாக விளங்குகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகள் முதல், வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகள் வரை சுற்றுலாத்துறையின் வளர்ச்சியில் அக்கறையுடையனவாக உள் ளன. ஏனெனில் இத்துறையானது அதிகளவு அந்நியச்செலாவணியை பெற்றுத் தருகின்ற துறையாகவும் பெரும் எண்ணிக்கையான நேர், நேரில் வேலைவாய்ப்பினை உருவாக்குகின்ற துறையாகவும் அமைந்து காணப்படுகிறது. உதாரணமாக 2014 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறையினால் 218 மில்லியன் அந்நியச்செலாவணியைப் பெற்றுக் கொடுத்ததுடன் மேலும், இத்துறையானது நான்காவது பாரிய அந்நியச் செலாவணியை உழைத்துத் தருகின்ற ஓர் துறையாகவும் விளங்குகின்றது. சுற்றுலாத்துறையின் அபிவிருத்தியானது பல்வேறு மூலக்கூறுகளினை உள்ளடக்கியதாகவும் பல்வேறுபட்ட அமைப்புக்களுடன் தொடர்புபட்டதாகவும் காணப்படுகின்றது. சுற்றுலாத்துறையைப் பொறுத்தவரை சுற்றுலாப்பயணிகள் நுகர்வோர் ஆகவும் சுற்றுலா மையங்கள் பொருட்களாகவும் எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஈழவள நாட்டின் மகுடமாக அமைந்துள்ள யாழ்ப்பாணமும், ஏனைய வடமாகாணத்தின் பிரதேசங்களும் தமக்கெனத் தனித்துவமுடைய கலாசாரம் (Culture) பாரம்பரியங்கள் (Traditions) மற்றும் தனித்துவமான மரபுரிமைகள் (Heritage) என்பவற்றை கொண்டுள்ளன. இவையே இவற்றின் அடையாளமாகவும் கலாசாரத்தின் மூலாதாரமாகவும் விளங்குகின்றது.

இலங்கைத் தீவில் தொடர்ச்சியாக இடம்பெற்ற இனப் போராட்டத்தினால் ஏற்பட்ட அழிவுகளிலும் திட்டமிட்ட கலாசார எச்சங்களின் சிதைப்புக்களிலும் இருந்து மிஞ்சி நிற்கும் மையங்களினை (Destinations) உள்நாட்டு (Domestic), வெளிநாட்டு (International) சுற்றுலாப் பயணிகள் பார்வையிடுவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதனை இந்த ஆய்வின் மூலம் கண்டுகொள்ளக்கூடியதாக உள்ளது. சுற்றுலாத் துறையினுடைய வளர்ச்சியானது வடமாகாணத்தைப் பொறுத்தவரையில் 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் சற்றுப்புத்துயிர் கண்ட போதிலும் வளர்ச்சியின் போக்கானது சுற்றுலா விடுதிகளினை அமைப்பதினை மையப்படுத்தப்பட்டதாகவே அமைந்து காணப்படுகிறது. எனினும் சுற்றுலாத்துறை அபிவிருத்தியானது நீண்டகால நோக்குடையதும் பல நீண்ட திட்டங்களோடு தொடர்புடையதாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

## வட மாகாணத்தில் சுற்றுலா அபிவிருத்திக்கான சூழல் ஆய்வு

இவ்வாய்வானது கள ஆய்வுமுறை மூலம் மேற்கொள்ளப்பட்டது. வடமாகாணத்தில் சுற்றுலாத்துறையினை அபிவிருத்தி செய்வதற்கு இவ்மாகாணத்திலுள்ள பல்வேறு சூழ்நிலைகள் சாத்தியப்பாடுடையதாக அமைந்துள்ளது. இவ் ஆய்வின் விளைவாக பின்வரும் பரிந்துரைகள் திட்டவகுப்பாளர்களுக்கும் (Policy makers) அதனை நடைமுறைப்படுத்துவோருக்கும் (Policy implementers) முன்வைக்க விரும்புகின்றேன். பெரும்பாலும் இப் பரிந்துரைகள் திட்டவகுப்பாளர்களை மையப்படுத்தியதாகவே அமைந்திருக்கின்றது காரணம் வடமாகாணத்திற்கென பிரத்தியேகமான அதாவது தனித்துவமான சுற்றுலாத் திட்டமானது நடைமுறைக்கு அவசியமானதாகக் காணப்படுகின்றது.

## சுற்றுலா இடங்களினை அபிவிருத்தி செய்தல்:

வளர்ச்சியடைந்து வருகின்ற நாடுகளில் பொதுவாக கலாசார, மரபுரீதியான இடங்களை மையப்படுத்தியதாகவே சுற்றுலாத்துறையினுடைய வளர்ச்சி காணப்படுகின்றது. இவ்வாறான எழுதா விதிக்கு இலங்கை ஒன்றும் விதிவிலக்கானது அல்ல.

- வடமாகாணத்தைப் பொறுத்தவரை மற்ற மாகாணங்களோடு ஒப்பிடுகையில் குறைந்தளவான இயற்கை மற்றும் மரபுரீதியான பகுதிகள் காணப்படுகின்றன. இலங்கையில் எட்டு பிரதேசங்கள் UNESCO வினால் அங்கீகரிக்கப்பட்டவையாகக் காணப்படுகின்றன. அநுராதபுரம், பொலநறுவை, கண்டி, சிகிரியா, தம்புள்ள, சிங்கராஜவனம், மத்திய சமதரை, காலி போன்றன ஆகும் மேலும் இலங்கையில் தெற்கே அமைந்துள்ள கடற்கரைகளும் கிழக்கே அமைந்துள்ள கடற்கரைகளும் உல்லாசப் பயணிகளின் சொர்க்கபுரியாக விளங்குகின்றது. இவற்றுடன் ஒப்பிடுகையில் யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற உல்லாசப்பயண மையங்கள் குறைவானவையாகவும் குறைந்தளவு அபிவிருத்தி உடையனவாகவும் காணப்படுகின்றன. எனவே வடமாகாணத்தில் Man–Made Tourist Destinations உருவாக்கப்பட வேண்டும் எடுத்துக்காட்டாக சிங்கப்பூர் நாட்டை எடுத்துக்கொண்டால் அங்கு காணப்படும் சிங்கப்பூர் சபாரி போன்ற MAN-MADE சுற்றுலா மையங்கள் இங்கும் உருவாக்கப்பட வேண்டும்.
- Kankesanthurai fort Point Pedro fort, Hammenheil (கம்மண்ணில் கோட்டை), Kayts fort (ஊர்காவற்துறை கோட்டை), Jaffna fort (யாழ்ப்பாண கோட்டை), Delft fort (நெடுந்தீவு கோட்டை), Poonery fort, Mannar fort, Arippu fort (அரிப்பு கோட்டை), Pyl fort (பைல் கோட்டை), Beschutter fort (பெசுச்சுட்டர் கோட்டை), Elephant Pass fort, Mullaitivu fort ஆகிய பதின்மூன்று கோட்டைகளில் நான்கு அழிவடைந்த நிலையிலும் (Pyl fort (பைல் கோட்டை), Beschutter fort (பெசுச்சுட்டர் கோட்டை), Elephant Pass fort, Mullaitivu fort) அதாவது இருந்தவைக்கான எச்சங்கள் மிஞ்சியுள்ள நிலையில் ஏனைய கோட்டைகள் புலக்காட்சிக்குரியனவாய் அமைந்துள்ள சாதகநிலையானது இக்கோட்டைகளினை உலக மரபுரிமைச் சின்னமாக (World Heritage Site) UNESCO வினால் Section (iv) (to be an outstanding example of a type of building, architectural or technological collection or landscape which illustrates (a) significant stage(s) in human history) என்கின்ற சட்ட வரையின் கீழ் பிரகடனப்படுத்துவதற்கு பாரியவாய்ப்பு காணப்படுவதனை அவதானிக்கலாம். ஏனெனில் உலகில் எந்தவோர் பாகத்திலும், 40 km தூரத்தில் இத்தகைய அமைப்பில்லை என்பது சுட்டிக் காட்டத்தக்கது. இவ்வாறு UNESCO வினால் மரபுரிமைச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்ட உலக அளவில் யாழ்ப்பாணமும், ஏனைய வடமாகாணத்தின் பிரதேசங்களும் பாரிய சுற்றுலா மையங்களாக உருவகம் பெறவாய்ப்புள்ளது.
- யாழ்ப்பாணக் கோட்டை, அதைச்சுற்றி உள்ள சூழலையும் அழகான உல்லாசப் பயணமையமாக மாற்றுதல். சுற்றுலாத்துறை வளர்ச்சிக்கு மிக அவசியமானதும் அவசரமானதுமாகும். உதாரணமாக காலிக்கோட்டையைச் சுற்றி கடைகள், விடுதிகள் அமைந்திருப்பது போன்று யாழ்ப்பாணக் கோட்டையின் சுற்றுப்புறத்திலும் அழகிய சிறிய பல்பொருள் வாணிப மையங்களும் அவ்மையங்களில் வட மாகாணத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற கைவேலை உற்பத்திப் பொருட்களினை விற்பனை செய்தல் மற்றும் காட்சிப்படுத்தல் மேலும் நவீனமுறையில் எல்லா வசதிகளையும் உள்ளடக்கிய ஒருகலையரங்கு அமைத்தல் (Art Auditorium) அதில் எமது பாரம்பரிய கூத்துக்கள், பரதநாட்டிய நிகழ்வுகள், நாடகங்கள் இடம் பெறச்செய்வதுடன் மேலும், மேலைத்தேய மற்றும் தென்னாசிய இசை நிகழ்ச்சிகளை தினமும் சுற்றுலாப் பயணிகளுக்கு அவை யாவற்றினை காட்சிப்படுத்தல். கோட்டையைச் சூழ உள்ள பிரதேசங்களில் பனையோலை, தென்னை ஓலைகளிலான கூரைகளைக் கொண்ட குடிசைகளை அமைத்து Eco-Tourism த்தினை அபிவிருத்தி செய்தல். கோட்டையை, சூழவுள்ள அகழிகளில் (கோட்டையின் இடதுபுறம் துரையப்பா விளையாட்டு அரங்கிற்கு பின்னால் உள்ள அகழி) படகுச்சவாரிகளினை நடத்துதல். மேலும் கோட்டைக்குள் சிறுசிறு மையங்களை நிறுவி அதில் சோதிட மையங்கள்



படம்- யாழ்ப்பாணக் கோட்டை

சுதேச வைத்திய மையங்கள் மற்றும்பாரம்பரிய உணவு விற்பனை மையங்கள் போன்றவற்றை நிறுவி இவற்றை நோக்கி உல்லாசப் பயணிகளை கவர வழியேற்படுத்தல். Antiquities Ordinance (Ordinance No, 9 of 1940 Act, Amendment 1955 N0.2, and 1955 No.22) இத்தகைய நடவடிக்கைளுக்கு உதவும் வகையில் சட்டம் வாய்புக்களை வழங்குகின்றது
- தீவுகளுக்கு இடையே சுற்றுலாவினை (Islands Tourism) விருத்தி செய்தல் அழகிய ஐந்து தீவுகள் அணமித்துக் காணப்படுகின்றது.





அவையாவன நயினாதீவு, நெடுந்தீவு, புங்குடுதீவு, அனலைதீவு, மண்டைதீவு என்பவையே. அவற்றுக்கிடையில் (Inter-tourism) ஒழுங்கு செய்தல் நெடுந்தீவுவினை சுற்றுலாத்தீவு ஆகப் பிரகடனப்படுத்தி சகல வசதிகளையும் அங்கு உருவாக்குதல்.
- வடமாகாண அரசின் உதவியுடன் மனிதவள அபிவிருத்தி மேம்படுத்தற் பயிற்சி நிலையங்களை உருவாக்கலும் அவற்றில் சர்வதேச தரத்தில் பயிற்சி வழங்குதலும் மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் உதவியுடன் (Faculty of Management and Commerce, University of Jaffna) Tourism and Hospitality பயிற்சிகளினை சுற்றுலா வழிகாட்டிகளுக்கும் (Tourist Guide) வழங்குதல்
- சுற்றுலாத் தகவல் மையத்தினையும் (Tourist Information Center) அதன் கிளைகளையும் யாழ்ப பாண புகையிரத நிலையம் யாழ்ப்பாண பேருந்துத் தரிப்பிடம் போன்ற இடங்களுக்கு அண்மித்து அமைத்தும் இவற்றுக்கான ஊழியர்களை நியமித்து அவர்களை சுற்றுலா அபிவிருத்தியில் ஈடுபடவைத்தலும் அவசியப்பாடுடையதாகும்.
- சுற்றுலா பொலிஸ் நிலையம் (Tourists Police Station) நிறுவுதல், Foreign Currency ATM நிறுவுதல், International Conference Hall ஆகிய அமைப்புகள் நிறுவுதல் இலங்கையில் இரண்டு சர்வதேச மகாநாட்டு மண்டபம் அமைந்துள்ள போதும் இலங்கையில் (Magam Ruhunupura International Convention Center (MRICC / BMICH) and Bandaranaike Memorial International Conference Hall) இவற்றில் BMICH மாத்திரம் மகாநாடுகள் நடத்தப்படுகின்றது. ஏனெனில் Hambantota இல் இதற்கு தேவையான விடுதி, போக்குவரத்து வசதியின்மை இன்மையே மிக முக்கிய காரணம். எனவே, யாழ்ப்பாணத்தில், இவ்வாறான வசதியுடன் சர்வதேச மகாநாட்டு மண்டபம் அமைத்தல். மேலும் அடிப்படை உட்கட்டுமான வசதிகளினை ஏற்படுத்துதல், யாழ்ப்பாணமானது இலங்கையில் காணப்படுகின்ற கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து 350 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. இதனால் போக்குவரத்துக்கு ஒரு முழு நாளின் அரைப்பகுதி செலவு செய்ய வேண்டிய தேவை சுற்றுலாப் பயணிகளுக்கு அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் நோக்கி சுற்றுலாப் பயணிகளை வரவழைக்க வேண்டுமெனில் மத்திய அரசாங்கம் பலாலி விமான நிலையத்தினை சர்வதேச விமானநிலையமாக மாற்றுவதோடு அதிவேக நெடுஞ்சாலையினை யாழ்ப்பாணத்திற்கும் கொழும்புக்கும் இடையில் அமைத்தலும் இலங்கையின் இயற்கை அழகு கொஞ்சும் மத்திய மாகாணத்திற்கும் யாழ்ப்பாணத்திற்கும் சொகுசு புகையிரதசேவையினை அறிமுகம் செய்தலும் அவசியமாகும்.
- விடுதி வசதிகளினை அதிகரித்தல். யாழ்ப்பாணத்தின் நகரை அண்டிய பகுதிகளில் சுற்றுலா விடுதிகள் அமைந்துள்ளன. ஆனால் அவற்றில் ஒன்றுகூட நட்சத்திர விடுதிகள் அல்ல. சர்வதேச தரத்துடனான சுற்றுலா விடுதிகள் அமைக்க வேண்டும். சுற்றுலா விடுதிகளில் வழங்கப்படுகின்ற விருந்தோம்பல் வசதிகளானது சர்வதேசதரத்தில் அமைந்திருப்பதுடன் அங்கு அமர்த்தப்படுபவர்கள் வேலைக்குப் பொருத்தப்பாடு உடையவர்களாகவும்போதிய பயிற்சியைப் பெற்றவர்களாகவும், தாய்மொழி மற்றும் ஆங்கிலம், சிங்களம் போன்றவற்றில் பாண்டித்தியம் பெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.
- யாழ்ப்பாணத்தினுள் நுழைகின்ற வீதிகளின் இருமருங்கிலும் யாழ்ப்பாணத்தின் சுற்றுலா மையங்களினை அறியப்படுத்தும் விளம்பரப்பதாகைகளை தமிழ், ஆங்கிலம், சிங்களம். போன்ற மொழிகளில் காட்சிப்படுத்தலும் சென்ற ஆண்டு வடமாகாண சபையினால் வெளியிடப்பட்ட சுற்றுலா மையங்களில் வரைபடத்தினை அனைவரும் இலகுவாக பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தலும்.
- விடுதி உரிமையாளர்கள் City tour முறையினை அபிவிருத்தி செய்தல் (ஒருசில விடுதியினர் இத்தகைய முறையினை நடைமுறைப்படுத்தியிருந்தனர். அதாவது யாழ்ப்பாணத்திலுள்ள இந்து மற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடத்தினை (கந்தரோடை, நல்லூர், நகுலேஸ்வரம், கீரிமலை, செல்வச்சந்நிதி, வல்லிபுரக் கோயில், நாகர் கோவில்) உள்ளடக்கி இருத்தல் வேண்டும்.

## முடிவுரை (Conclusion)

சுற்றுலாத்துறை அபிவிருத்தியானது யாழ்ப்பாணத்திற்கு தேவைப்பாடுடையது என்பது இவ் ஆய்வின் ஊடாக எடுத்துரைக்கப்படுகின்றது. அபிவிருத்தியானது சுபீட்சத்தையும் சிறிய உழைச்சல்களையும் கொண்டமைந்த போதிலும். யாழ்ப்பாணத்தில் சுபீட்சம் உழைச்சலைவிஞ்சி பிரதேச, பிரதேசவாசிகளினுடைய அபிவிருத்தி வாழ்வாதார முன்னேற்றத்திற்கு சுற்றுலாத்துறை அபிவிருத்தியானது இன்றியமையாதது சுற்றுலா அபிவிருத்தியானது வணிகரீதியில் நோக்காது சமூக, கலாசார மற்றும் சமூக விழுமியங்களின் முன்னேற்றத்தினை அடிப்படையாகக் கொண்டு அமைத்தல் வேண்டும்.

# 8 வயது சிறுமியை சுட்டுத்தள்ளிய 11 வயது அயல் வீட்டுச் சிறுவன்

## அமெரிக்காவில் பெரும் சோகம்

**(டென்னிசி)**

**தனது நாயுடன் விளை யாடதே என்று கூறிய 8 வயது சிறுமியை 11 வயது சிறுவன் சுட்டுக் கொன்ற சம்பவம் அமெரிக்காவில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள் ளது.**



டென்னிசி மாகாணத்தின் ஒயிட் பைன் நகரில் வசிக்கும் பெண் லடாஷா டையர். இவரது மகள் கடந்த சனிக்கிழமை வீட்டுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்தாள். அப்போது அங்கு வந்த பக்கத்து வீட்டு சிறுவன் மெக்கேலாவிடம் அவள் வளர்க்கும் நாயை காண்பிக்கும் படி கேட்டுள்ளான். அதற்கு அவள் மறுக்கவே, கோபமடைந்த அந்தச் சிறுவன், தனது தந்தையின் துப்பாக்கியை எடுத்து தனது வீட்டில் இருந்தபடியே மெக்கேலாவை நோக்கிச் சுட்டான். இதில் குண்டு பாய்ந்து அவள் உயிரிழந்தாள்.

துப்பாக்கியால் சுட்ட சிறுவன் கைது செய்யப்பட்டு சிறார் சீர்திருத்த மையத்துக்கு அனுப்பப்பட்டுள்ள தாக தெரிவித்துள்ள நகர பொலிஸ் அதிகாரி கொலை செய்தது சிறுவன் என்பதால் அவனை பற்றிய விபரங்களை வெளியிட மறுத்து விட்டார்.


இதேவேளை கடந்தவாரம் அமெரிக்காவின் ஓரியன் மாநிலத்தில் 10 பாடசாலை மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவ்வாறு இடம்பெறும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களுக்கு அமெரிக்கச் சட்டங்களே காரணம் என ஜனாதிபதி ஒபாமா ஆவேசமாகத் தெரிவித்திருந்தார். தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் நடைபெற அனுமதிக்கக்கூடிய அளவில்தான் நம்முடைய அரசியல் தேர்வு உள்ளது. துப்பாக்கிச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வருவதற்கு அமெரிக்காவின் தேசிய ரைபிள் அசோசியேசன் மிகுந்த முட்டுக்கட்டையாக உள்ளது என்று ஒபாமா குற்றம் சாட்டியிருந்தார்.

அமெரிக்க ஜனாதிபதியாக பராக் ஒபாமா 2008ம் ஆண்டில் பதவியேற்றதிலிருந்து இதுவரை 13க்கும் மேற்பட்ட துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் நடைபெற்றுள்ள அங்கு பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (3-7)




## வைத்தியசாலை மீதான தாக்குதல் தவறுதலாக நடந்த சம்பவமாகும்

### அமெரிக்க இராணுவம் வருத்தம்



(வோஷிங்டன்)

ஆப்கானிஸ்தானின் வடக்கே குண்டூஸ் நகரில் உள்ள வைத்தியசாலை மீது நடத்தப்பட்ட விமான தாக்குதலில் 22 பேர் பலியாகியுள்ளனர்.

இந்த தாக்குதல் அமெரிக்கா தலைமையிலான கூட்டுபடையினரால் நடத்தப்பட்டது. இந்த தாக்குதல் மன்னிக்க முடியாதது மட்டும் அல்ல இது ஒரு குற்ற செயல் என்று ஐ.நா. கடுமையாக கண்டித்தது. வைத்தியசாலை மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது, அந்த வைத்தியசாலை யில் நோயாளிகளும் பணியாளர்களும் நிரம்பியிருந்தனர். தாக்குதலில் குறைந்தது 22 பேர் பலியானார்கள். மேலும் 37 பேருக்கு மேற்பட்டவர்கள் படுகாயம் அடைந்தனர்.


குண்டூஸ் நகரில் உள்ள வைத்தியசாலை மீது நடத்தப்பட்ட விமானத் தாக்குதல் தவறுதலாக நடந்து விட்ட சம்பவம் என்று ஆப்கானுக்கான அமெரிக்க ஜெனரல் ஜோன் எப் காம்ப்பெல் தெரிவித்துள்ளார். மேலும் அவர் "நாங்கள் வேண்டுமென்றே ஒரு பாதுகாப்பு வளையத்தில் இருக்கும் வைத்தியசாலையை இலக்கு வைத்து தாக்கமாட்டோம்" எனவும் கூறியுள்ளார். (3-7)

### ஒளியைவிட வேகமான நியூட்ரினோவை கண்டுபிடித்த

## இரண்டு விஞ்ஞானிகளுக்கு இயற்பியல் நோபல் பரிசு

(ஸ்டாக்ஹோம்)

நியூட்ரினோ பற்றிய ஆராய்ச்சிக்காக இந்த ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசு ஜப்பான், கனடா நாட்டு விஞ்ஞானிகளுக்கு கூட்டாக வழங்கப்படுகிறது. அவர்கள் பரிசுத் தொகை 6.25 கோடி ரூபாவை பகிர்ந்துகொள்கின்றனர்.



டகாக்கி கஜிதா ஆர்தர் மெக்டொனால்டு.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், பொருளாதாரம், இலக்கியம், உலக அமைதி துறைகளில் உலகளாவிய சாதனை படைத்தவர்களுக்கு நோபல்பரிசு வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டின் நோபல் பரிசு பட்டியல் வெளியாகி வருகிறது. மருத்துவத்துக்கான நோபல் பரிசு அயர்லாந்து (டாக்டர் வில்லியம் காம்பெல்), ஜப்பான்( டாக்டர் சடோஷி ஒமுரா), சீன (டாக்டர் யூயூ டு) விஞ்ஞானிகளுக்கு வழங்கப்படுவதாக நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

இயற்பியல் துறைக்கான நோபல் பரிசு யாருக்கு என்பதை ஸ்டாக்ஹோமில் ராயல் சுவிடிஷ் அறிவியல் அக்கடமி நேற்று அறிவித்தது. அது, நியூட்ரினோ ஆராய்ச்சியில் சாதனை படைத்துள்ள ஜப்பான் விஞ்ஞானி டகாக்கி கஜிதா(வயது 56). கனடா விஞ்ஞானி ஆர்தர் மெக்டொனால்டு (வயது72) ஆகிய இரு வருக்கும் இயற்பியல் நோபல் பரிசு கூட்டாக வழங்கப்படுவதாக அறிவித்துள்ளது. நியூட்ரினோ தொடர்பாக ஆராய்ச்சி நடத்தி, 'நியூட்ரினோக்களுக்கு நிறை உண்டு' என்று இவர்கள் நிரூபித்துள்ளதற்காக இந்த பரிசு வழங்கப்படுகிறது.

இவர்கள் இருவரும் பரிசுத் தொகையான 9 லட்சத்து 62 ஆயிரம் டொலரை (சுமார் ரூ.6 கோடியே 25 இலட்சத்து 30 ஆயிரம்) பகிர்ந்து கொள்கிறார்கள்.

உலகில் உள்ள அனைத்துப் பொருட்களும் அணுக்களால் ஆனவை என்பது விஞ்ஞானிகள் கூற்று. இந்த அணுவில் எலக்டிரான், புரோட்டான், நியூட்ரான் என்னும் 3 பொருட்கள் இருப்பதாக கூறப்பட்டு வந்த நிலையில், நான்காவதாக வேறு ஒரு துகளும் இருப்பதாக 1930ம்ஆண்டு கண்டறியப்பட்டது. உல்ப கேங் என்ற சுவிஸ் நாட்டு விஞ்ஞானி அறிவித்தார். அந்தத் துகள்தான் நியூட்ரினோ. இந்த நியூட் ரினோவை 1956ஆம் ஆண்டு கிளைவ்லோ வான் பிரடெரிக் ரெயன்ஸ் என்னும் இரு அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்தனர். இது, ஒளியைவிட வேகமாக பயணிக்கிற ஆற்றலைக் கொண்டதாகும். இந்த நியூட்ரினோ துகள்களுக்கு நிறை உண்டு என்று இந்த ஆண்டு இயற்பியலுக்கான நோபல் பரிசு பெறுகிற ஜப்பான் விஞ்ஞானி டகாக்கி கஜிதா, கனடா விஞ்ஞானி ஆர்தர மெக்டொனால்டு கண்டுபிடித்துள்ளனர். இந்த கண்டுபிடிப்புத்தான் அவர்களுக்கு நோபல் பரிசை பெற்றுக் கொடுத்துள்ளது.

ஜப்பான விஞ்ஞானி டகாக்கி கஜிதா, அண்டக் கதிர் ஆராய்ச்சி மைய இயக்குநராகவும், டோக்கியோ பல்கலைக்கழகத்தின் பேராசிரியராகவும் உள்ளார். கனடா விஞ்ஞானி ஆர்தர் மெக் டொனால்டு, கனடாவில் கிங்ஸ்டனில் உள்ள குயின்ஸ் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக உள்ளார்.(3-7)

## ரஷ்ய போர் விமானங்கள் தவறுதலாக பறந்தன என்ற விளக்கம் ஏற்க முடியாதது - நேட்டோ

(வோஷிங்டன்)

துருக்கி வான்பரப்பில் ரஷ்ய போர்விமானங்கள் பறந்தது எதிர்பாராமல் நடந்த ஒரு தவறு என ரஷ்யா கூறிய விளக்கத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என நேட்டோ தெரிவித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை சிரியாவுடனான எல்லைக்கு அருகில் துருக்கியின் வான் பரப்பில் நுழைந்த ரஷ்ய போர் விமானங்கள் அத்துமீறி பறந்ததாக துருக்கி தெரிவித்துள்ளது. இனிமேல் இப்படியான அத்துமீறல்கள் நடந்தால் அதற்கு ரஷ்யா பொறுப்பேற்க வேண்டி வரும் எனவும் துருக்கி எச்சரித்திருந்தது.

இச்சம்பவம் பற்றி ரஷ்யா அளித்துள்ள விளக்கத்தில் 'துருக்கி வான்பரப்பில் ரஷ்ய போர் விமானங்கள் பறந்தது எதிர்பாராமல் நடந்த ஒரு தவறு, இதற்கு அங்கு நிலவிய மோசமான வானிலை தான் காரணம் என கூறியுள்ளது. ஆனால் இந்த விளக்கத்தை துருக்கியும் நேட்டோவும் ஏற்றுக்கொள்ள முடியாது என தெரிவித்துள்ளன. மேலும் சிரியாவிற்கு விமானப் படையை தவிர தரைப்படை வீரர்களையும் ரஷ்யா அனுப்பிவருவதற்கும்நேட்டோ எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

சிரியாவில் தாக்குதல் நடத்தி வரும் நேட்டோ நாடுகளின் போர் விமானங்களுடன் மோதல் ஏற்படாமல் தவிர்ப்பது பற்றி அமெரிக்காவுடன் பேச்சு நடத்த தயார் என ரஷ்யா கூறியுள்ளது. ஆனால் இது பற்றி அமெரிக்கா இதுவரை கருத்து எதையும் தெரிவிக்கவில்லை.

சிரியாவில் ஜனாதிபதி அசாத் அரசாங்கத்துக்கு ஆதரவாக கிளர்ச்சியாளர்கள் மற்றும் ஐ.எஸ். குழு மீது ரஷ்யா வான் வழி தாக்குதல் நடத்தி வருகிறது. (3-7)

# தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை**

ஸ்துளசிகன்-191, ஜிசங்கரன்-188, எம்.சுஜீபன்-186,எம்பிரணவன்-184, ஆர். ஆர்த்தி-184, கே.யதுசன்-181, எம்.ரதஞ்ஜலி-180,வி.பெஸ்தரசி-180, ரி.ஆனந்தராம்-179, ஆர்.ரதுக்சன்-179,கே.ஆர்த்தனா-178,வி.ஸ்ரீகஜன்-178,பி.லக்சாயினி-177, கே.தனுசியன்-177,ஜே.கிரிசிகேசன்-176, எஸ்.சபிசன்-176, கே.ஜனனி-176, பி.அபிசயன்-164,எம். அகரன்-175, எல். தினுஷா-175, சி.நந்தலாலன்-175, பி.குகாஜன்-175, எம்.டெனுசன்-175,ஜே.பிரணவன்-174,வி.பெஸ்ரினா லக்ஸ்ஷியா- 160,எஸ். ஸ்ரீகணா-173, கே.கஜானன்-173, ஜே.ஆர்த்திகன்-173,ஜி. ஆத்தியா-173,ரி.நர்த்தனா-173,எம். ஓவியலக்சினி-173,எம்.லக்சிகா-172, ஜே. தஷ்ஜயனி-172,எம். யதுகுமரன்-171, ஆர். தருண்-171, பி.கஜமுகன்-171, ஆர்.நர்த்தகி-171,எஸ். கஜாயினி-171,எஸ்.சதுர்ஜன்-171, ரி.மிதுர்சியன்-170, ஜே. சரவணன்-170,எஸ். ஜெனுகா-170, எஸ்.மோனிசா-170, டபிள்யூ திரேசன்-169,எஸ். சம்வத்சன்-169,என். துவாரகன்- 169, கே.டிரோசன்-169, கே.வெர்னிலா-169,என். கீர்த்திகா-169,யு.ஷேசாந்-169, எம்.திசானா-169, எஸ். சிவோதயன்-168,எஸ். பிரியங்கா-168, ஆர்.லக்சிகா-168, எல்.லோசிகன்-167, பி. அபிநயன்-167, ஜி.சஞ்ஜீத்-167,ஏ.குலநிதி-167, யு.யனுசன்-167,ஆர்.ஸ்வர்னன்-167,எஸ்.ஜஸ்வந்திகா-167, எஸ். புவன்-166, வி.கஜனீபன்-166,ஏ. அபர்நாத்-166,எம்.ஆரண்யா-166, எஸ்.அனுசிகா-166,பி.கிரண்-166, டி.சதுர்ஜன்-166,ஜி.டிலக்சிகா-166, ஜி.யருனி-165,ஆர்.கிசாந்-165, ஆர்.மகிழ்ராஜன்-165, என். சங்கவி-165, ஏ.விதுசனன்-165,ஜே.கோபிஷன்-164,ரி.சைலனி-164, எம்.மாதங்கி-164,ஜே.அபிசன்-164, ரி.ஆதவன்- 163,என்.அதிரன்-163,எஸ். கம்சாயினி-163,எம்.விதுசனா-163, ரி.ஜனகசீலன்- 163,யு.சந்தோஷ்-163,ஏ.சாதுரியன்-162, எஸ். ஜனுயன்-162,ஆர்.ஜகத்பிரியன்-162, யு.மகிழ்ந்தனா-162, எம்.மௌரா-162, கே.லோகஜன்-161,எஸ். அஸ்விகன்-161, ஜெ.தாருண்யன்-161, எஸ்.ஆரபி-161,என்.குருசங்கர்-160,பி.கோபிகன்-160, எஸ்.திகலவன்-160, வை.மதுசன்-160, எம்.ருக்சன்-160,ஜே.இந்துபி-160, எஸ்.துசான்-160,எஸ்.அபினாஸ்-160,எஸ்.வர்ணராஜா-159,ரி.பவதாரணி-159, பி.தீபிகா-159, ரி.கேசவன்-158,ஆர்.சாருசன்-158,ஜே. கிதுசன்-158,பி.சன்சிகா-158,எஸ். சாத்விகன்-157,ரி.தனுசன்-157, எஸ்.பானுசன்-157,ஆர்.தனுசன்-157, வி.சியாத்-157,எஸ்.துஷாந்தி-157,ஜே.சங்கீதா-157,பி.அபிசன்-156,வி.வரணன்-155,பி.மதுரிகா-155,ஜே.ஜதுசன்-155, எஸ்.சாருகன்-155,எஸ்.பிரணவி-155, கே.விஷால்-154,எஸ்.சோபிதன்-154, கே.பபிநாத்-154,எஸ்.திலக்சன்-154, எஸ். பிரணகா-154,ஏ.மகிந்தன்-154, ஆர்.துவாரசாந்-154, வி.விவம்மன்-154,வி.ஜெயசூரியா-154, கே.தனுசியா-154,பி.ஜகாசினி-154, எம்.கஜலக்சன்-153, கே.கரினி-153,எஸ். செவ்வைஷ்ணவி-153,எம். நிஷான்-153, ஆர். கஜானன்-153, எஸ்.சாருகா-153.

**சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்**

சோ.வசீகரன்-192, க.கபிலஷன்-188, எஸ்.கஜலக்ஷன்-186, ப.சபகீதன்-184, ம.கிஷாந்-184, கி.துஷானி-182, சு.மதுஷன்-182, ச.சாருஜா-181, சி.சங்கீதனன்-181, ஜெ.லதுர்ஷன்-181, டெனிகொன்ஸ்ரன்ரைன் லெகான்ஸ் றென்லில்-181, எஸ்.தேனுஜன்-181, ந.சானுஜன்- 180, ச.சஞ்சித்-179, க.ராமிலன்- 178, ச.காருண்யன்- 178, சி.கஜலக்ஷி-177, வி.ஆகாஷ், 177, கெஜின் சாள்ஸ் கெற்றியன் -177, ஷ.லதுசன்-177, ம.பிரவின்ஜாஸ்-177, ர.விஸ்வஜா-176, சு.கஜானன்-176, பா.பபிஷா- 176, சீ.ஆர்த்திகன்-175, ச.அபிஷன்- 175, சி.புருஷோத்- 175, அ.டனுஷன்- 174, மு.பிரதாபன்-174, ம.தர்ஷனா-174, கி.தீபசியாஜினி-173, ச.பிரவினன்- 173, ஜெயதிலக் நிவின் நிக்கோ- 173, ச.சுவேனிகா-173, ரா.பவிஷனன்- 172, ஞானகிருஷ்ண பாலசிங்கம் நந்தகோபன்-172, நி.பாவனா-172, அ.கம்சனா-172, ப.கஜானா- 172, பி.தேவபிரஷாந்தி-172, உ.நிதுஷா- 172, ச.ஜதுர்ஷனா- 171, வி.ஜதுஷனா-171, ஞா.ஹருணி-171, இ.அக்ஷா-170, ஜோ.அபிஷேக்- 170, அ.மேரி அக்ஷயா- 170, ர.ஹருணி-170, வி.தேனுஜா- 170, அ.டன்ஷன்-169, து.மானுஷா- 169, ஜெ.ஜெரூஷன்- 169, ச.விவேகா- 169, ச.அமலினி- 169, ஸ்ரீ.ஹரீஷ்- 168, பி.கஜீபன்- 167, கே.திக்ஷன்-167, ஜோ.டியூற்லின்ரா-167, ஜோ.அருண்குமார்- 166, நி.சாகித்தியன்- 166, பி.அபிஷா-166, சி.கனிஷியா-166, பீ. ஷிஷான்-166, வ.நிகிதன்- 166, கி.புருஷோத்- 165, சு.லாவண்யா-165, செ.ஹருணி- 165, ம.மதுஷாயினி-164, ச.லதிசனன்-164, ச.லதுஷன்-164, யே.அபிஷ்யா-164, த.நதுஷாயினி-164, பா.வைஷிகா-164, றோ.அபிதாஸ்-163, சு.சரணியா-163, பா.அபிநயா-163, ற.லவினாஷ்-162, ற.சாகித்தியா-162, வி.சறோமி-162, பா.பானுஜன்- 162, ஜெ.வெண்ணிலவன்-162, இ.தயானி-161,வி.கிறிஷிகன்-160, கௌ.மதீஷன்-160,ஸ்ரீ. சகீர்த்- 160,இ.நமிதா-160,ம.ஸ்ரெபானி-160,த.பாவலன்-160, எல்.மர்லின் கீர்த்தனா-160, ஷ.வர்சிகா-160, அ.அபிஷாந்-159,சு.ஜெருஷன்-159, யோ.சாருஜன்-159, த.சஞ்ஜீவன்-159,சு.யானுஷன்-159,நி.தேவ அமிர்தா-159, பி.கபிகன்-158, யோ.லக்ஷிகன்-158,கே.அஸ்வினி-158, ரா.ஜெசாயினி-158, ம.நிசாமிகா-158, செ.சதுர்ஷன்-158, றொ. வின்ஸ்நிலா-157,ரா.ரூபிதன்-157, ஜே.சுராஜ்சன்-157, பா.ஜதுஷா-157, ம.ஜெயசிறி-157, கு.சாம்பவி-157, த.விசாலி-157, ஸ்ரீ.ஸ்ரீசங்கவி-156,க.தனுஷன்-156,ஞா.மோஷியன்-155,கி.ஒலிவர் சுகாளன்-155, அ.வளன்விஷோக்-155, சு.ஆத்மிகா-155, கே.மிதுனன்-155, சி.மகிஷா-155,லோ.விஷ்ணுகா-155,ஸ்ரீ.பரத்துவசன்-154, பா.அபிநயா-154,ரா. ஜதுஷன்-154,ஜெ.ஜெனற்டிவின்ஷியா-154, ஜெ.கேசகி-154, ந.ருத்ரபைரவி-154, வி.வர்சனா-154,மு.விதுஷன்-154, பி.சறோமியா-154, உ.ஜனார்த்தனி-153. (இ-4)

**அளவெட்டி அருணோதயக் கல்லூரி**

உ.சோபிதன்-185, ம.சுபரகன்-179,இ.தக்சன்-172,கு.விஷ்வசுந்தர்-164,பா.மதுமிதா-164, வி.இந்துஜா-164,ஜெ.கம்ஷன்-161,உ.தயாகரன்-157,யோ.ஆஷிக்கா-157,உ.யதுஷா-156, ச.ரதிக்கா- 155, யூ.டிலுசன்-153.

**யாழ்.துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்**

பி.நதியா-177, பி.பிரவீனன் - 172,ச.பவித்திரன்-171,உ.மானுஷா-168,உ. மதுமிதன்-167, ச.சாதுர்ஷன்-167, சு.மாதுரி-164,ஆ.ஹரிஸ்ணவி-155, ஜெ.ஜதுர்சிகா-153

**யாழ்.அம்பன் அ.மி.த.க.பாடசாலை**

இ.அபினாஸ்-170

**யாழ்.புலோலி மெ.மி.த.க பாடசாலை**

மு.குறிஸ்ரி லெஷைனா-174

**யாழ்.மணற்காடு றோ.க.த.க பாடசாலை**

சு.ஜெந்தன்-168,ஸ்கனியூட்-157

**பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயம்**

ஜெ.மதுஷலா-186, ச.மதுஷன்-182,வி.கீர்த்திகன்-177, கி.அபிலாஸ்-176, சு.தினேஸ்-172, ர.சந்தோஷ்-171,கௌ.தவரூபன்-169,றொ.அரிஸ் ஜெயன்-169, சா.ஜனார்த்தனன்-168, வ.தாருண்யா-166

**யாழ். கரணவாய் வேதாரணியேஸ்வர வித்தியாலயம்**

வி.கமலநாத்-179, இ.சங்கரி-169,ச.அர்ச்சனா-164,ஹ.தினேந்திரராமன்-160,சி.ஆரணி-160,இ.அஜந்-158,ந.அபிஷா-155,நா.ரதுஷன்-155

**யாழ்.கரணவாய் மணியகாரன் தோட்டம் ஜி.ரி.எம்.பாடசாலை**

சி.பிரணவன்-180, க.கிருசிகன்-174,க.ஸ்நேகன்-169, சி.மிருணாளன்-161,த.நிதர்சிகா-160,மு.ஸிரோஜன்-154, சு.தனுசாந்-153.

**யாழ். உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்**

பி. தக்ஷஜா-175,சே. பிரசாகினி- 169,சா. சிவானுஜா -164,த. லக் ஷயா- 161,ர.ரிஷாந்தன்- 160

**யாழ் கரணவாய் மகா வித்தியாலயம்**

த.கபிலன்-164,ர.விஸ்ணு- 161, சி.டிலக்ஷன்-158,த. காயத்திரி-153,

**யாழ் வதிரி திரு இருதயக் கல்லூரி**

கி. நிசானி 169, செ. மேரிடினோசி 164, மு.அரோன்-156,

**யாழ். கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்**

வி.நந்திதா-184, ந. அருண்யா 179, நா. கிருஸ்ணமேனன்-179, கு. வைகுந்தன்-177,அ.ஸ்ரீபரன்-170,க. ஹம்சாயினி-166,சு.அனோஜன்-163, செ.சாரங்கா-160, மு.அஸ்விகா-157, கு. சகானா-155, உ. புருசோத்மன்-154, கு.கானுஜன்- 153

**அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**

ஆ.சாதுசாந்-183, பு. சஞ்சீவன் -171, ர.சாத்வீகன்-170,க.லக்சனா -168,பி. சாணுகா -167,ர.நிவேதிகன் -166 சி.தயானி -166, மோ.கிரிசன-165,க. அனுசன் - 165-,ச. சதுர்சிகா -165, சு. மாதங்கி -158, ஜீ. யதுசா -158 ,ரெனெற் சியானு சாடொ னால்ட் கிளேன் றோய் -158, ஸ்ரீ.மதுரா -157 ,சி. கிருசிகன் -157,சௌ.சந்தீபன் - 156,அன்ரன் பிரான்சிஸ் செரன் ஜீவோசன்-154,ர. கபில்சன் -154

**யாழ்.நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை**

சி.சிநோஜன்-186, உ.கீர்த்தனி-185,ஸ்ரீ.டேரிகா-178,சி.ஆர்நிகன்-178,வி.ஹர்சன்-178, யோ.ஆர்நிகன்-177,கி.ஜனனி-177,மோ. அர்ஜீன்-176,சி.தனோஜ்-175, வி.அபிசாதனன்-175,ந.தாரிகா-174, வை. வைஷ்ணவி-172,த.கம்சத்வனி-171,ர.சுஜானி-171,யோ.சுபசங்கவி-171, நி.சாளின்-169,சு.பிரணவன்-168, ச.கம்ஷவி-168,இ.சந்தியா-167,சி.துவிகரன்-166, பா.அபிநயன்-165,கு. ஆதிகேசவன்-165, சு.சன்சிகா-164,சி.பவித்திரா-163,ர.பிரியங்கா-163,சி.நிதுஷ்-162,சு.வர்ஷனா-161,பா.மதுசா-161,ஞா. ஹம்சத்வனி-161,கு.லிக்ஷன்-159, தே.சியாமளி-158,கு.த.சாயினி-157, கஹறினி-154,ஜெ.ஆதர்ஷா-153

(இ-60)

## வைத்தியராவதே எனது இலட்சியம்

### யாழ்.மாவட்டத்தில் 192 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தை தனதாக்கிய மாணவன் வசீகரன்



எதிர்காலத்தில் சிறந்த வைத்தியராக உருவாகி எமது மக்களுக்கு சேவையாற்றுவதே எனது இலட்சியம் என புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றில் யாழ்.மாவட்ட ரீதியில் முதலிடம் பெற்ற சோதிநாதன் வசீகரன் கூறியுள்ளார்.

யாழ்.புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலய மாணவன் வசீகரன், வெளியாகியுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றில் 192 புள்ளிகளை பெற்று சித்தியெய்தி மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தினை பெற்றுள்ளான். மாணவனின் வெற்றி குறித்து கேட்டபோதே அவன் மேற்கண்டவாறு தெரிவித்தான்.


கொக்குவிலை சேர்ந்த நான் விடாமுயற்சியுடன் கல்வி கற்று இந்த சிறந்த பெறுபேற்றினை பெற்றுள்ளேன். இதற்கு எனது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் உறுதுணையாக இருந்துள்ளனர்.

அதிகாலையிலும் இரவிலும் சுய கற்றலை மேற்கொண்டமையினால் தான் மாவட்ட மட்டத்தில் என்னால் முதலிடம் பெற முடிந்துள்ளது.

என்னைப்போல் ஏனைய மாணவர்களும் வரவிரும்பினால் கட்டாயம் காலையிலும் இரவிலும் கற்றல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அந்த மாணவன் மேலும் கூறினான். (இ-4)

## தன்னம்பிக்கையிருந்தால் அனைவரும் சாதிக்கலாம்

### யாழ்.மாவட்டத்தில் 191 புள்ளிகளைப்பெற்று இரண்டாமிடம் வந்த மாணவன் துளசிகன்



விடாமுயற்சியும்தன்னம்பிக்கையுமிருந்தால் அனைவராலும் கல்வியில் சாதிக்க முடியுமென புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேற்றின் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் இரண்டாமிடம் பெற்ற சிவஞானம் துளசிகன் தெரிவித்தார்.

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை மாணவன் தற்போது வெளியாகியுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேற்றில் 191 புள்ளிகளைப் பெற்று மாவட்ட ரீதியில் 2ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளான்.

மாணவனின் பெறுபேறு குறித்து கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தான்.

வண்ணார்பண்ணையை சேர்ந்த நான் மாவட்ட மட்டத்தில் இரண்டாம் நிலையைப்பெற்றுள்ளேன். எனது பாடசாலைஅதிபர், ஆசிரியர்கள் மற்றும் எனது பெற்றோரின் உதவியுடன் கற்றதனால் இந்த சிறந்த பெறுபேற்றைப் பெற முடிந்துள்ளது.

எதிர்காலத்தில் ஒரு வைத்தியராக வந்து சிறந்த சேவையாற்ற வேண்டுமென்பதே எனது விருப்பாகும் என்றான் மாணவன். (இ-4)

# ஜெனீவாவில் வெற்றி பெற்ற அமெரிக்க இராஜதந்திரம்

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில், இலங்கை தொடர்பான தீர்மானம் தொடர்ந்து நான்காவது ஆண்டாக நிறைவேறியிருக்கிறது.

2012 ஆம் ஆண்டு தொடங்கிய இந்த தீர்மான யுத்தம், இப்போது ஒருமித்த தீர்மானமாக வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்படும் நிலையை வந்தடைந்திருக்கிறது.

2012 ஆம் ஆண்டிலும் கூட, அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானம் நம்பகமான உள்நாட்டு விசாரணையைத் தான் வலியுறுத்தியிருந்தது. 2013 இலும் அதே கோரிக்கை தான் விடப்பட்டது.

ஆனால், அப்போதைய அரசாங்கம் அந்த தீர்மானத்தை எதிர்த்தது. நடைமுறைப்படுத்த முடியாது என்று சர்வதேச சமூகத்துடன் முரண்பட்டது.

இதன் விளைவாக, 2014 இல், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் விசாரணைக்கு வழிவிடும் தீர்மானத்தை அமெரிக்கா முன்வைத்தது.

அதன்படியே விசாரணைகள் நடத்தப்பட்டு, அதன் அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில்தான், மீண்டும் ஒரு தீர்மானத்தை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது அமெரிக்கா.

இதற்கு முந்திய மூன்று தீர்மானங்களையும், பெரும்பான்மையான உறுப்பு நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றுவதற்கு அமெரிக்காவுக்கு தனது இராஜதந்திர பலம் முழுவதையும் பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.

ஏனென்றால், சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கியூபா என்று வலுவான நாடுகள் பல இலங்கையின் பக்கத்தில் நின்றன. கடைசி நேரத்தில் இந்தியாகூட இலங்கைக்காக வாதாடியது.

இதனால், பல நாடுகளின் ஆதரவைப் பெறுவதற்காக அமெரிக்கா தனது வழக்கமான பாணியிலான அழுத்தங்களைக் கொடுக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

ஏனென்றால், இது அமெரிக்காவின் கௌரவப் போராட்டமாகவும் அமைந்திருந்தது. ஆனால், இம்முறை அமெரிக்கா, தீர்மானத்தை நிறைவேற்ற அந்தளவுக்கு பெரிய இராஜதந்திர அழுத்தங்களைச் சந்திக்கவில்லை.



தாம் முன்வைத்த தீர்மானத்தை இலங்கையையும் ஏற்றுக் கொள்ள வைத்து, இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்த, குரல் கொடுத்து வந்த நாடுகளையும் இணங்க வைத்து, அதனை ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறது அமெரிக்கா.

கடந்த மாத தொடக்கத்தில் கொழும்பு வந்திருந்த அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால், இம்முறை ஜெனீவாவில் ஒருமித்த கருத்துடைய தீர்மானத்தை கொண்டு வந்து நிறைவேற்ற முடியும் என்று நம்புவதாக குறிப்பிட்டிருந்தார்.

அவரது அந்தக் கருத்து அப்படியே நடந்தேறியிருக்கிறது. இந்த தீர்மானத்தை எப்படி கொண்டு செல்வது என்று அமெரிக்கா முன்கூட்டியே நன்கு திட்டமிட்டு காய்களை நகர்த்தியிருக்கிறது என்பது இதன்மூலம் உணர முடிகிறது.

இந்த தீர்மான விடயத்தில், இலங்கையை ஏற்றுக்கொள்ள வைத்தமை அமெரிக்காவுக்குக் கிடைத்த முதலாவது வெற்றி.

இந்தியா, சீனா, ரஷ்யா போன்ற நாடுகளை எதிர்க்காமல் அடக்கி வைத்தமை அமெரிக்காவின் இரண்டாவது வெற்றி என்று கூறலாம்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர், புதிய அரசாங்கம் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாகவே நடக்கத் தொடங்கியிருக்கிறது.

எனவே, ஜெனீவாவில் தாம் கொண்டு வரும் தீர்மானத்தை எதிர்க்காமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இலங்கைக்கு அமெரிக்கா நிச்சயம் அழுத்தம் கொடுத்திருக்கும்.

ஆனால், இந்த தீர்மானத்தை நிறைவேற்றுவது மட்டும் முக்கியமல்ல, இதனை நடைமுறைப்படுத்துவது தான் முக்கியமானது. அதற்கு இலங்கையின் ஆதரவும் அர்ப்பணிப்பும் அவசியமானது.

எனவே, சாதாரண அழுத்தங்களின் ஊடாக மட்டும் இந்த விடயத்தில் முன்னேற்றங்களை எட்டமுடியாது என்பதை அமெரிக்கா நன்கு உணரும்.

அதேவேளை, முதலாவது தீர்மான வரைவை கடந்த மாதம் அமெரிக்கா வெளியிட்ட போது, அதனை முறைசாராக் கூட்டங்களில் கடுமையாக எதிர்த்திருந்தது இலங்கை அரசாங்கம்.

அந்த முதல் வரைவு, ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் பரிந்துரையை முற்றிலுமாகப் பிரதிபலிக்கும் வகையில், சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள், வழக்குத் தொடுநர்களை உள்ளடக்கியதாக நம்பகமான, சுதந்திரமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது.

ஆனால், பெரும் போராட்டத்தின் பின்னர், இலங்கை அரசாங்கம், "சர்வதேச" என்ற பதத்தை நீக்குவதற்கு அமெரிக்காவை இணங்க வைத்திருந்தது.

முதல் வரைவு முற்றிலுமாகவே கலப்பு நீதிமன்றத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தது. ஆனால், இலங்கையின் வற்புறுத்தல் மற்றும் இந்தியா உள்ளிட்ட நாடுகளின் ஆலோசனையின் பேரில், சர்வதேச நீதிபதிகள் உள்ளிட்டோரின் பங்களிப்புடன் என்பதற்கு பதிலாக, கொமன்வெல்த் மற்றும் வெளிநாட்டு நீதிபதிகள் என்று தீர்மானம் மாற்றியமைக்கப்பட்டது. இதுவும் கூட கலப்பு நீதிமன்றத்தைத்தான் பிரதிபலிக்கிறது.

ஆனால், சில குறைபாடுகள் இதில் இருப்பதையும், தெளிவின்மைகள் இருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

குறிப்பாக, கொமன்வெல்த், வெளிநாட்டு நீதிபதிகள், விசாரணையாளர்கள் விசாரணையில் இடம்பெற வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தாலும், அது எந்த அடிப்படையில், எந்தளவு பிரதிநிதித்துவம் கொண்டதாக இந்த நியமனங்கள் இருக்க வேண்டும் என்று தீர்மானத்தில் குறிப்பிடப்படவில்லை.

நம்பகமான உள்ளக விசாரணை ஒன்றுக்குக் கூட இணங்காத நிலையில் தான் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் இருந்தது. ஆனால், நம்பகமான உள்ளக விசாரணையை நடத்த தற்போதைய அரசாங்கம் முன்வந்தது.

என்றாலும், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர், போர்க் குற்றங்கள் குறித்து நம்பகமான விசாரணையை நடத்தும், உள்நாட்டு சட்ட கட்டமைப்புகள் ஏதும் இலங்கையில் இல்லை என்று தெளிவாக கூறியிருந்த நிலையில், உள்ளக விசாரணைக்கு இணங்க அமெரிக்கா மறுத்தது.

இந்தக்கட்டத்தில் தான், சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்களை உள்ளடக்கிய விசாரணையை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

ஆனால், அதற்கு இலங்கை மட்டுமன்றி அதன் நட்பு நாடுகளும் எதிர்ப்பு வெளியிட்டன. அது இலங்கையில் இறைமையை மீறுகின்ற செயல் என்று வாதிட்டன.

இந்த நிலையில் தான், கொமன்வெல்த் மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளின் பங்களிப்புடன் விசாரிக்க வேண்டும் என்ற இரண்டாவது வரைவை அமெரிக்கா கையளித்தது.

இதன் மூலம் இந்தியா உள்ளிட்ட நாடுகளின் வாயை அமெரிக்கா மூடியது.

விசாரணைகளில் வெளிநாட்டவர்கள் தலையீடு செய்வது, இலங்கையின் இறைமையை மீறும் செயல் என்று வாதிட்டு வந்த சீனா, ரஷ்யா, பாகிஸ்தான், கியூபா, இந்தியா போன்ற நாடுகளெல்லாமே இறுதி தீர்மான வரைவுக்கு எதிராக குரல் கொடுக்கவில்லை.

இதுகுறித்து சீனா, இந்தியா போன்ற நாடுகள் அதிகம் பேசவில்லை. தீர்மான வரைவைத் திருத்தவும் முயற்சிக்கவில்லை.

கொமன்வெல்த் மற்றும் வெளிநாட்டு நீதிபதிகளை விசாரணையில் உள்ளடக்க வேண்டும் என்ற பதத்தை மேலும் வலுவிழக்கச் செய்ய இலங்கை மறைமுக முயற்சிகளை மேற்கொண்டதாக தகவல்கள் வெளியாகின. இந்த விடயத்தில் கடந்த காலங்களைப் போலவே இந்தியா தலையீடு செய்யும் என்றும் வலுவாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், கொமன்வெல்த் மற்றும் வெளிநாடுகளின் நீதிபதிகள் என்ற பதம் சேர்க்கப்பட்டதால் இந்தியா அடங்கிப் போனது.

இந்தியாவைப் பொறுத்தவரையில், ஜெனீவாவில் இந்த முறை கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை ஆதரித்தது என்று கருத முடியாது. ஆனால், எதிர்க்கவில்லை. எதிர்க்க முடியவில்லை என்பதே உண்மை. ஏனென்றால், இதுபோன்ற வெளியக விசாரணைகளை இலங்கையில் நடத்த அனுமதிப்பது, காஷ்மீரிலும் இது போன்ற கோரிக்கைகளைப் பலப்படுத்தி விடும் என்று இந்தியா கருதுகிறது.


**-ஹரிகரன்-** (தொடரும்)

## இஸ்லாம் மதத்தை தழுவ மறுத்த 12 வயது சிறுவன் உட்பட

# நான்கு பேரை சிலுவையில் அறைந்து கொன்ற ஐ.எஸ்.

(டமாஸ்கஸ்)

சிரியாவின் அலெப்போ பகுதியில் இஸ்லாம் மதத்தை தழுவாத கிறிஸ்தவர்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் சித்திரவதை செய்து சிலுவையில் அறைந்துள்ளனர்.



அலெப்போ பகுதியில் உள்ள கிறிஸ்தவர்கள் மீது தொடர்ந்து தாக்குதலை நடத்திவரும் ஐ.ஸ். தீவிரவாதிகள். தற்போது அவர்களை இஸ்லாத்தை தழுவ வேண்டும் என வற்புறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் அலெப்போ பகுதியில் மதபோதகராக இருப்பவரையும் அவர் குடும்பத்தினரையும் சுற்றிவளைத்த ஐ.எஸ்.தீவிரவாதிகள். இஸ்லாம் மதத்தை தழுவ வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கு மறுப்பு தெரிவித்த அந்த போதகரின் 12 வயது மகனின் விரல் நுனிகளை துண்டித்து பெற்றோரை கடுமையாக தாக்கவும் செய்துள்ளனர்.

மதபோதகரை பலமுறை தாக்கியும் சித்திரவதை செய்தும் இஸ்லாத்தில் இணைய அவர் மறுப்பு தெரிவித்து வந்தது. ஐ.எஸ்.தீவிரவாதிகளை ஆத்திரம் கொள்ளச் செய்ததாக பார்வையாளர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் மதபோதகரும் அவரது ஊழியர்கள் இரண்டு பேருடன் 12 வயது சிறுவனையும் சித்திரவதைக்கு பின்னர் சிலுவையில் அறைந்துள்ளனர்.

மேலும். இஸ்லாத்தை தழுவ மறுத்த 2 பெண்கள் உள்ளிட்ட மேலும் 8 பேரை தலை துண்டித்து கொலை செய்துள்ளதாக சிரியாவில் செயறபட்டு வரும் தொண்டு நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது. (3-7)

## பிரதமர் மோடி எடுத்த செல்பி வழக்கிலிருந்து நீதிபதி விலகல்

(அகமதாபாத்)



பிரதமர் நரேந்திர மோடி கடந்த ஆண்டு ஏப்ரல் 30ஆம் திகதி நடைபெற்ற பாராளுமன்ற தேர்தலின் போது வாக்களித்துவிட்டு வெளியே வந்தபோது. பா.ஜ.க.வின் சின்னமான தாமரை சின்னத்தை அணிந்தபடி. வாக்களித்தமை அடையாளத்துடன் விரலை உயர்த்திய வாறு. வாக்குச்சாவடி வாசலில் நின்று அவர் தனது செல்போனில் 'செல்பி' எடுத்துக் கொண்டார்.

இதன் மூலம். தேர்தல் நடத்தை விதிமுறைகளை நரேந்திர மோடி மீறிவிட்டதாக ஆம் ஆத்மி கட்சியைச் சேர்ந்த நிசாந்த் வர்மா என்பவர் அகமதாபாத் நகர நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கு தள்ளுபடிசெய்யப்பட்டது.

இதையடுத்து. குஜராத் உயர் நீதி மன்றத்தில் வர்மா மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்தார். இந்த வழக்கு கடந்த மாதம் 8ஆம் திகதி விசாரணைக்கு வந்தது. அப்போது. வழக்கு தொடர்பான அறிக்கையை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஜெனரல் திரிவேதி கால அவகாசம் கேட்டதால் நீதிபதி ஜி.ஆர். உத்வானி ஒக்டோபர் 6ஆம் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

இந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது. வழக்கு தொடர்பான அறிக்கையை தாக்கல் செய்ய சட்டத்தரணி ஜெனரல் வராததால். அரசு சட்டத்தரணி மிதேஷ் அமின். மேலும் சற்று கால அவகாசம் கேட்டார். ஆனால். திடீர் திருப்பமாக இந்த வழக்கை விசாரிக்க விரும்பவில்லை என்றும். வழக்கில் இருந்து தான் விலகிக்கொள்வதாகவும் நீதிபதி உத்வானி அதிரடியாக அறிவித்துள்ளார். (3-7)

## ஏமனில் ரொக்கெட் தாக்குதல் மயிரிழையில் உயிர்தப்பிய பிரதமர்

### சவுதி கூட்டுப்படையினர் 15 பேர் பலி



ஏமன் தென்துறைமுக நகரான ஏடனிலுள்ள ஹோட்டல் ஒன்றின் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தப்பட்டுள்ள நிலையில். அங்கு தங்கியிருந்த அந்நாட்டு பிரதமர் கலேத் பஹா உயிர்தப்பியுள்ளார் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த தாக்குதலில் பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொல்லப்பட்டவர்களில் ஏமனுக்கு உதவும் சவுதி அரேபியா தலைமையிலான கூட்டணி நாடுகளின் 15 படையினரும் அடங்குவர் என்று செய்திகள் கூறுகின்றன.

இத்தாக்குதல் தொடர்பில் ஷியா இனப்பிரிவைச் சேர்ந்த ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கிளர்ச்சியாளர்களுக்கு எதிரான தாக்குதல்களுக்கு ஏமன் அரசாங்கத்திற்கு உதவி வரும் வளைகுடா நாடுகளில் ஒன்றான. ஐக்கிய அரபு எமிரேட்ஸைச் சேர்ந்த படையினர் தங்கியிருந்த குடியிருப்பின் மீது மற்றுமொரு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. மூன்றாவது தாக்குதல் இலக்கொன்று தவறியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. இதனால் நிகழவிருந்த பெரும் அனர்த்தம் தவிர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (3-7)

## வெளிநாட்டவர் ராணுவத்தில் உக்ரைனில் புதிய சட்டம்

(மொஸ்கோ)

உக்ரைன் ராணுவத்தில் வெளிநாட்டவரை சேர்க்க வகை செய்யும் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய பகுதியில் ரஷ்ய எல்லையில் அமைந்துள்ள நாடு உக்ரைன். பிரிவினை காரணமாக கிழக்கு உக்ரைனில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. ரஷ்ய கிளர்ச்சியாளர்களுக்கு இராணுவ படையையும். போர் தளபாடங்களையும் அனுப்பி வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில். உக்ரைன் பாராளுமன்றம் புதிய தேசிய பாதுகாப்பு கொள்கை ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த சட்டம் மூலம் வெளிநாட்டை சேர்ந்தவர்களை உக்ரைன் இராணுவத்தில் சேர்க்க அனுமதிக்கும் புதிய விதிமுறை பாராளுமன்றத்தில் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. எனினும். இதற்கான இறுதிக்கட்ட அனுமதி ஜனாதிபதி கையெழுத்திட்ட பின்பே வழங்கப்படும். அதன் பின்னரே. இது சட்டமாக்கப்படும்.

ஆனால். இது குறித்து கருத்து தெரிவித்துள்ள ரஷ்யா. உக்ரைனில் மேற்கு பகுதியில் அதிக ஆதிக்கம் செலுத்தி வரும் நேட்டோ மற்றும் உக்ரைன் இராணுவம் ரஷ்யாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருவதாகவும். இராணுவத்தில் வெளிநாட்டினரை அனுமதிப்பது சரியல்ல என்றும் தெரிவித்துள்ளது. (3-7)

## கவுதமாலா நிலச்சரிவில் பலியானோர் 161 பேர்

(கவுதமாலா)

மத்திய அமெரிக்க நாடான கவுதமாலாவில். சாண்டா கேட்டரினா பினுலா என்ற கிராமத்தில் கடந்த 2ஆம் திகதி பெய்த பலத்த மழைக்கு பின்னர் கடுமையான நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் சுமார் 125 வீடுகள் இடிந்து தரை மட்டமாகின. சம்பவத்தன்று 30 பேர் பலியாகினர். 600 பேரை காணவில்லை என முதற்கட்ட தகவல்கள் வெளியாகின.

அந்த கிராமத்தில் தொடர்ந்து மீட்புப்பணி நடந்து வருகிறது. இந்நிலையில். பலியானவர்கள் எண்ணிக்கை நேற்று 161 ஆக உயர்ந்துள்ளது. முந்நூறுக்கும் மேற்பட்டவர்களை காணவில்லை. அவர்களின் கதி என்ன ஆனது? என தெரியவில்லை. இருப்பினும். இடிபாடுகளுக்குள் சிக்கியவர்கள் இனி உயிர் பிழைத்திருக்க வாய்ப்பு இல்லை என அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

பலியானவர்களில் பெரும்பாலானோர் சிறுவர்-சிறுமியர் மற்றும் கைக்குழந்தைகள் என தெரிய வந்துள்ளது. இடிபாடுகளை தோண்டி தேடுதல் வேட்டை நடத்துகிற இடங்களில் எல்லாம். தங்களுக்கு அன்பானவர்களின் புகைப்படங்களை வைத்துக்கொண்டு. அவர்களைப் பற்றி தகவல் கிடைக்கிறதா? என கண்ணீருடன் பலர் காத்திருப்பது கல்நெஞ்சையும் கரைய வைப்பதாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (3-7)

### மாட்டிறைச்சி சாப்பிட்டதால் வந்தவினை

## கொலையுண்டவர் குடும்பம் புதுடில்லிக்கு மாறியது

(புதுடில்லி)



உத்தரபிரதேச மாநிலம் தர்தரி மாவட்டத்தில் உள்ள பிசாதா கிராமத்தில் பசு மாட்டை வெட்டி சாப்பிட்டதாக ஏற்பட்ட வதந்தி காரணமாக முகம்மது இக்லாக் என்பவரை சிலர் கும்பலாக வந்து அடித்து கொன்றனர்.

பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள இந்த சம்பவத்தில் தொடர்புடைய 10 பேரை பொலிஸார் பிடித்து விசாரித்து வருகிறார்கள்.

கொல்லப்பட்ட முகம்மது இக்லாக்கின் இளைய மகன் மீதும் கொடூர தாக்குதல் நடத்தப்பட்டதால் படுகாயம் அடைந்த அவர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். இக்லாக்கின் மூத்த மகன் சர்தாஜ் சென்னை விமானப்படை பிரிவில் பொறியியலாளராக உள்ளார். அவர் தற்போது தனது குடும்பத்தினருடன் பிசாதா கிராமத்தில் உள்ளார்.

அவருக்கு உதவ முன்வந்த விமானப்படை அதிகாரிகள். சர்தாஜ் குடும்பத்தினரை அவருடன் சென்னையில் குடியமர்த்த திட்டமிட்டனர். முதலில் அதற்கு சர்தாஜ் சம்மதித்தார். பிறகு அவர் தன் முடிவை மாற்றிக் கொண்டார்.

இந்த நிலையில் முகம்மது இக்லாக் குடும்பத்தினரை விமானப் படையினர் டில்லிக்கு அழைத்து சென்றுள்ளதாக தெரியவந்துள்ளது. டில்லியில் சப்ரதோ பார்க் பகுதியில் உள்ள விமானப் படை ஊழியர்கள் குடியிருப்பில் அவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளதாக விமானப்படை வட்டார தகவல்கள் தெரிவித்தன. (3-7)

# வர்த்தக நலன்களுக்காக சூழலியல் சட்டங்கள் புறக்கணிக்கப்படுகின்றன

## ஜனாதிபதி ஆதங்கம்



அபிவிருத்தி செயன்முறைகளில் சூழல் பாதுகாப்புடன் தொடர்புடைய சட்டதிட்டங்கள் போதுமானவையாக இருந்தபோதும் மக்கள் அவற்றுக்கு முரணாகச் செயற்படுவது அவை தொடர்பாக அறியாத காரணத்தினால் அல்ல. மாற்றாக தமது தனிப்பட்ட வர்த்தக நலன்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவேயாகும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

முழு உலகத்தினதும் கவனம் சூழல் பாதுகாப்பு தொடர்பாகக் குவிந்திருக்கையில் சூழல் பாதுகாப்பு தொடர்பாக எல்லோரும் அதுவொரு பொறுப்பு என்றவகையில் மட்டுமல்லாது அதுவொரு மானிடக்கடமை என்றவகையில் செயற்பட வேண்டும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற தேசிய பசுமை விருதுகள் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

சூழல் பாதுகாப்பு மனிதர்கள் உட்பட அனைத்து ஜீவராசிகளினதும் இருப்புக்கு மிகவும் முக்கியமானதாகும். தனிப்பட்ட பொருளாதார நன்மைகளை மறந்து நாட்டை அழிவிலிருந்து பாதுகாப்பதற்கான உணர்வுடன் சூழலைப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும்.


நிறுவன ரீதியான ஒருங்கிணைப்பு இல்லாத காரணத்தினால் திண்மக்கழிவு மற்றும் குப்பைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் கண்டுகொள்ள முடியாதிருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். இந்த பிரச்சினைகளுக்கு சகல நிறுவனங்களினதும் ஒருங்கிணைப்புடன் ஒரு இணைந்த நிகழ்ச்சித்திட்டத்தினூடாக இப்பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வைக் கண்டறிய புதிய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தேசிய பசுமை விருதுகள் மிகவும் மதிப்புவாய்ந்த நடுவர்கள் குழாமினால் தெரிவு செய்யப்பட்டு பல்வேறு வகைகளில் அவை வழங்கப்பட்டுவருகின்றன. இந்த வகைகளின் கீழ் பசுமை முன்னெடுப்புக்காக அவர்களது செயலாற்றுகைக்கேற்ப தங்கம், வெள்ளி, வெண்கல விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த நிகழ்வில் ஒரு சில வெற்றியாளர்களுக்கான விருதுகளை ஜனாதிபதி தமது கரங்களினால் வழங்கி வைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# இலங்கையை பிளவுபடுத்துவதே அந்நிய சக்திகளின் நோக்கமாகும்

## குணதாச அமரசேகர குற்றச்சாட்டு



**(கொழும்பு)**

**அமெரிக்கா உள்ளிட்ட அந்நிய சக்திகள் இலங்கையை பிளவுபடுத்தும் நோக்கில் செயற்படுவதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமர சேகர குற்றம் சாட்டியுள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேசிய இயக்கங்களின் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட கலாநிதி குணதாச அமரசேகர,

2009ம் ஆண்டு விடுதலைப் புலிகளுடனான யுத்தம் நிறைவு பெற்றவுடன் மகிந்த ராஜபக்ஷ நாட்டைத் துண்டாடி, வடக்கையும் கிழக்கையும் பிரித்துக் கொடுத்திருந்தால் இந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் எழுந்திருக்காது.

தற்போது முன்வைக்கப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பான அனைத்து குற்றச்சாட்டுகளும் அதன் அடிப்படையில் எழுந்தவைதான்.

இவ்வாறான குற்றச்சாட்டுகளின் மூலம் நாட்டைப் பிளவுபடுத்துவதே சர்வதேச சக்திகளின் கடைசி இலக்காகும்.

அமெரிக்காவின் வலைக்குள் சிக்கிக் கொண்டு, தேசிய விசாரணைப் பொறிமுறையை சிலாகித்துக் கொண்டிருப்பவர்கள் இலங்கையின் கழுத்தில் சுருக்குக் கயிறை மாட்டியுள்ளார்கள்.

இனி எந்த வகையிலும் இதிலிருந்து விடுபட முடியாது. உண்மையில் இப்போதுதான் நாம் அதிக ஆபத்தை எதிர்கொண்டுள்ளோம்.

ஆனால் அரசாங்கம் இதனை அழகான வார்த்தைகளால் மறைக்கப் பார்க்கின்றது என்றும் குணதாச அமரசேகர மேலும் குற்றம் சாட்டியுள்ளார். (இ-10)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் மாணவர்கள் 13 பேருக்கு மறியல்

ஒலுவில் தென் கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் 13 பேரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

பல்கலைக்கழகத்தின் தங்குமிட வசதிகள் தொடர்பில் நிலவி வரும் பிரச்சினைகளுக்குத்தீர்வு காணும் நோக்கில் எதிர்ப்பு போராட்டங்களை மாணவர்கள் நடத்தியிருந்தனர்.

இந்த போராட்டத்தின் போது பல்கலைக்கழக சொத்துக்களுக்கு சேதம் விளைவித்ததாகத் தெரிவித்து 13 மாணவர்கள் பொலிஸ் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

போராட்டம் நடத்தபபட்ட தருணத்தில் ஒரு தொகுதி மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தினருடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர்.

மற்றுமொரு தரப்பு மாணவர்கள் பல்கலைக்கழக கட்டடங்களுக்கு சேதம் விளைவித்திருந்தனர்.

நிர்வாகக் கட்டடத்தின் ஜன்னல்களை உடைத்து சேதப்படுத்தியதாக பல்கலைக்கழக நிர்வாகம் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளது. இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் 13 பல்கலைக்கழக மாணவர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்த மாணவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது எதிர்வரும் 20 ஆம் திகதி வரையில் மாணவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதவான் எச்.எம். மொஹமட் பாசீல் உத்தரவிட்டுள்ளார். (எ-12)

# இன்று ஒரு தகவல்

## கஷ்டங்களை கஷ்டப்படுத்துவோம்

வாழ்க்கையில் கஷ்டங்களே வரக்கூடாது என்று சிலர் எதிர்பார்ப்பார்கள். இந்த நினைப்பு குழந்தைத்தனமானது. தினந்தோறும் தீபாவளியாகவே இருக்காதா என்று ஏங்குகின்ற எதிர்பார்க்கிற மத்தாப்பூ மனசுக்காரர்கள் : சின்னப்பிள்ளைகள். கஷ்டமே இல்லாத வாழ்க்கை என்பது யாருக்குமே அமைந்ததில்லை.

ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் தான் இன்பமும் துன்பமும். துன்பம் என்பது வாழ்வின் ஒரு நிலை... ஒரு நிகழ்ச்சி... ஒரு நேரக்கட்டாயம்... விதிப்படியும் இயற்கை நியதிப்படியும் நடந்தாக வேண்டிய நடப்பு. அந்தக் கஷ்டங்களை எதிர் கொள்வதும் வெல்வதும் தான் வாழ்வின் சுவை... சுகம்... சுவாரஸ்யம்... சவால்கள்... வாழ்க்கையை வளப்படுத்தும் வழிவகைகள்.

கஷ்டம் என்ற ஒன்று வராவிட்டால் கடவுளை யார் நினைக்கப் போகிறார்கள்! பத்து மணி பஸ்ஸுக்குப் பதைபதைக்க ஓடி வருகிறோம். பஸ் கிடைத்தால் கடவுள் நினைப்பு வருவதில்லை. இப்பதான் பஸ் போச்சு என்று ஒருவர் சொன்னால் அடக் கடவுளே எப்படி ஆபீஸ் போறது என்று கடவுளை ஆபீஸ் வரை சுவட்டிப் போகிறோம். கஷ்டங்கள் தான் கடவுளை ஞாபகப்படுத்துகின்றன.

கஷ்டத்துக்கான காரணங்களை ஆராய்ந்தால் நமக்கு அறிவுத் தெளிவு வரும்.உலக வாழ்வின் உன்னதமான உண் மைகள் புலப்படும். மகாபாரதப் போர் முடிந்து அஸ்தினாபுரம் வெறும் அஸ்திபுரமாக சாம்பல் சாம்ராஜ்யமாகத் தருமரிடம் வந்தது. ஒரு நெருப்புப் போருக்குப்பின் கிடைத்த குவைத் போல! தருமருக்குராஜ்ய ஆசையே இல்லை. கண்ணன் தருமர் மனத்தை மாயமாய் மாற்றினான்.

தருமர் தலையில் தங்க மகுடம். பளபளப்பான பட்டாபிஷேகம். படாடோபம். விருந்து... மகிழ்ச்சி... விழா மின்னல்... எல்லாம் முடிந்தது. அரண்மனை அமைதியடைந்த பின்னர் துவாரக்கைக்கு கண்ணன் புறப்படும் காலை நேரம். தருமரை வணங்கி அருச்சுனனை அணைத்து பீமனைத் தழுவி நகுல சகாதேவருக்கு நல்வாழ்த்துச் சொல்லித் தேரில் ஏறினான் தேரை ஓட்டிய கண்ணபிரான்.

அவன் கண்கள் யாரையோ தேடின...கண்ணனை நோக்கிக் கை கூப்பி நின்ற அந்தத் திருவுருவத்தைக் கண்ணன் கண்டு பிடித்து விட்டான். தேர்த் தட்டிலிருந்து குதித்து ஓடிவந்து அவளை வணங்கினான் . அந்தப் பாக்கியவதி குந்திதேவி தான். அத்தை போய் வருகிறேன் ! கண்ணனின் கனிவான குரலில் விடை கேட்டான்.

கண்ணா... நலமாகப் போய் வா... புறப்படும் முன் எனக்கு ஒரு வரம் வேண்டுமே...தயங்கினாள் குந்தி. என்ன கேட்பாள் ஜெபமாலை... நார்மடி... பூஜைக்கான உபகரணங்களில் ஒன்றிரண்டு... அல்லது ஐந்து பிள்ளைகளுக்கும் ஆதரவு... அரவணைப்பு. ஆசீர்வாதம் அல்லது செத்துப் போன அல்லது செத்துப்போன கர்ணனுக்குக் கதி மோட்சம்... எது கேட்டாலும் தருவது கடமைதானே.

கேளுங்கள் அத்தை... கேளுங்கள்... எது கேட்டாலும் தருவேன். இந்த அஸ்தினாபுரத்திலேயே அதிகம் கஷ்டப்பட்டவர்கள் நீங்கள் தான்.உங்களுக்கு இல்லாத உரிமையா? கேளுங்கள்! ஊக்கப்படுத்தினான் கண்ணபிரான்.

கைகூப்பிக் குந்தி கேட்டாள்.

கண்ணா... கஷ்டங்கள் வேண்டும். துன்பங்கள் வேண்டும் இன்னும் இன்னும் இன்னல்கள் வேண்டும்.

அத்தனை பேருக்கும் அதிர்ச்சி. கண்ணன் பேசினான்.

அத்தை... நீ பட்ட கஷ்டங்கள் போதாதா? பிறந்த வீட்டில் நீ வளரவில்லை. பெற்ற பிள்ளை கர்ணனை நீ வளர்க்கவில்லை. விரும்பாதபோது தாயானாய். விரும்பிய போது உன் தாய்மை சாபத்தால் தடை செய்யப்பட்டது. பாண்டுவைப் பிரிந்து துயர் உற்றாய். துரியோதனாதிகள் உன் ஐந்து பிள்ளைகளைக் கொன்று விடுவார்களோ என்று அஞ்சி அஞ்சி அழுதாய். கெட்ட பிள்ளைப் பெற்றால் எல்லோரும் கஷ்டப்படுவார்கள். நீயோ நல்ல பிள்ளைகளைப் பெற்றே துயர் உற்றாய்.காட்டில் திரிந்தாய். பிச்சை எடுத்தாய். பீமன் பசிக்கு மெலிந்தாய். நல்ல நிலை வந்த போது தருமன் சூதாட நீ நலிந்தாய். அஸ்தினாபுரத்தில் அவமானப்பட்டாய். பாரதப் போரிலும் பேரப் பிள்ளைகளைப் பலி கொடுத்துக் கண்ணீர் விட்டாய்... இது போதாதா! இன்னுமா கஷ்டங்கள் வேண்டும்? கஷ்டமே இல்லாத வாழ்க்கையைத்தான் எல்லோரும் கேட்பார்கள்.நீ கஷ்டத்தை கேட்கிறாயே... ஏன்? ஏன்? ஏன்?.

குந்தியின் வறண்ட இதழ்களில் புன்னகை நெளிந்தது மெதுவாகச் சொன்னாள். என் ஒவ்வொரு கஷ்டத்திலும் நான் நினைத்தேன். உன்னைத் தானே. ஓடோடி வந்து நீதானே காப்பாற்றினாய். கஷ்டங்கள் இல்லை என்றால் உன்னை நினைக்கப் போவதில்லை.நீ எங்கள் பக்கம் வரப்போவதில்லை. என்னைப் பொறுத்தவரை கஷ்டங்கள் உன்னை அடையும் சாதனங்கள்! இது தான் குந்தி தவம்...

திருவள்ளுவர் கூட தனக்குவமை இல்லாதானை மனக்கவலை தீர வணங்குக என்கிறார். என்ன? பொருள் ?மனக் கவலை இறைவனை அடைய ஒரு வழி என்பது திருக்குறள் நெறி சங்கடம் ஒஸ்தே வெட்கிடரமணா? என்று தெலுங்கில் உள்ள பழமொழி இதே கருத்துக்குச் சான்று கூறும். கஷ்டமே இல்லாத வாழ்க்கை என்பது கற்பனை. சினிமாத் தனமான கற்பனை .

எனவே இறைவனை வேண்டும் போது கஷ்டங்களை வெல்லும் மனோபலத்தை –தாங்கிக் கொள்ளும் தைரியத்தை தா என்று வேண்டுவது அறிவுடைமை தெளிவான மனோநிலை ; வளர்ச்சியின் அடையாளம். திருவள்ளுவர் ஒருபடி மேலே போனார். வாருங்கள் கஷ்டத்தை கஷ்டப்படுத்துவோம் என்று கட்சிசேர்க்கிறார்.எப்படி? நாம் கஷ்டத்திற்கு கஷ்டப்படாவிட்டால் கஷ்டமே கஷ்டப்படும் என்றார். ... ஆஹா!

# தமிழ் சினிமா வரலாறு

22

## "ராஜமுக்தி" அதிர்ச்சி தோல்வி

**...ல**ட்சுமிகாந்தன் கொலை வழக்கில் சிறை சென்ற பாகவர் விடுதலையான பிறகு நடித்த ராஜமுக்தி, பெரிய எதிர்பார்ப்புகளுக்கு இடையே வெளி வந்து தோல்வியடைந்தது.

ராஜமுக்தியை படமாக்க முடிவு செய்த பாகவதர், அதன் படப்பிடிப்பை சென்னையில் நடத்த விரும்பவில்லை.

சென்னை கீழ்ப்பாக்கத்திலிருந்த நியூட்டோன் ஸ்டுடியோவின் முக்கிய பங்குதாரர்களில் அவர் ஒருவர்.

அப்படி இருந்தும் அகில இந்திய புகழ்பெற்ற பிரபாத் ஸ்டுடியோவில் படப்பிடிப்பு நடத்த தீர்மானித்து புனா நகருக்கு சென்றார்.

படத்தில் பாகவதருக்கு ஜோடி வி.என். ஜானகி.

பாகவதருக்கு அடுத்த முக்கிய வேடம் எம்.ஜி.ஆருக்கு.

சுவர்க்க சீமா தெலுங்குப்படத்தில், ஓகோ...கோ... பாவுரமா என்று பாட்டைப்பாடி, மிகவும் புகழ்பெற்று விளங்கிய பானுமதியை தமிழ்ப்பட உலகுக்கு அறிமுகப்படுத்திய படம் ராஜமுக்திதான்.

எம்.ஜி.ஆருக்கு ஜோடியாக- ஆனால் வில்லி கேரக்டரில் அவர் நடித்தார்.

எம்.ஜி.சக்கர பாணியும் முக்கிய வேடத்தில் நடித்தார்.

**கூட்டணி உடைந்தது**

படத்தில் ஒரு முக்கிய மாற்றம். பாகவருடன் இணைந்து பணியாற்றி வந்த இளங்கோவனும் ஜி.ராமநாதனும் இப்படத்தில் இல்லை.

வசனத்தை பிரபல எழுத்தாளர் புதுமைப்பித்தன் எழுதினார்.

இசை. சி.ஆர். சுப்பராமன் (பிற்காலத்தில் தேவதாஸ் படத்துக்கு இசை



ராஜமுக்தியில் பாகவதர் - பானுமதி

அமைத்தவர்)

மிகப்பெரிய மாறுதல்: தொடர்ந்து பாகவதர் படங்களில் நடித்து வந்த என்.எஸ்.கிருஷ்ணன்- டி.ஏ.மதுரம் ஜோடி, இப்படத்தில் நடிக்கவில்லை.

(பாகவதருக்கும், கிருஷ்ணனுக்கும் ஏதோ கருத்து வேற்றுமை என்று அப்போது பத்திரிகைகள் எழுதின.)

கணீர் என்ற குரலில் அசரீரி பாடல்கள் பாடுவதில் புகழ்பெற்ற வரும், தென்னாட்டு சைகால் என்று பட்டம் பெற்றவருமான பி.ஜி.வெங்கடேசன் நகைச்சுவைப் பாத்திரத்தில் நடித்தார்.

**எம்.எல்.வசந்தகுமாரி**

பாகவரின் சிறை வாசத்தின்போது நடிகர்- நடிகைகளுக்குப் பின்னணி பாடும் முறை வந்துவிட்டது.

பிரபல சங்கீத வித்வான் ஜி.என். பாலசுப்பிரமணியத்திடம் இசை பயின்ற எம்.எல்.வசந்தகுமாரி, வி.என்.ஜானகிக்கு குரல் கொடுத்தார்.

படத்தின் பெரும் பகுதிக்கு வசனம் எழுதி முடித்த தருணத்தில் புதுமைப்பித்தன் காசநோயினால் பாதிக்கப்பட்டார்.

அதனால் மனைவி வசித்த திருவனந்தபுரத்துக்குத் திரும்பிய அவர், சில நாட்களில் காலமானார். எனவே மீதி வசனங்களை நாஞ்சில் ராஜப்பா எழுதி முடித்தார்.

**இசைத்தட்டு விற்பனையில் சாதனை**

இதற்கு முன்னால் பாகவதரின் பாடல்கள், படம் வந்து சில நாட்களுக்குப் பின்னரே இசைத்தட்டுக்களாக வெளியிடப்பட்டு வந்தன.

ராஜமுக்தியின் இசைத்தட்டுக்கள், படம் வருவதற்கு முன்பே வெளியிடப்பட்டு விற்பனையில் சாதனை படைத்தன.

(தொடரும்)

# ஆத்ம ஞானத்தைத் தேடி

ஆன்மீகம் 290

## அதிருப்தியிலிருந்து நன்றியுணர்விற்கு...

**...நாம்** வெறுமனே மீண்டும் மீண்டும் கேட்டுக்கொண்டே இருக்கிறோம்.

நமது பிரார்த்தனை என்பது பிச்சைப் பாத்திரத்தைத் தவிர வேறல்ல.

நாம் லோகாயதமான விடயங்களுக்காக மென்மையான உறவு முறைகளுக்காக அதிகாரத்திற்காக நமது இலக்கை அடைவதற்காக உடல் அழகிற்காக மற்றும் இன்னும் பலவற்றிற்காகவும் கடவுளிடம் பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

நாம் எப்பொழுதும் தொடர்ந்து எதற்காகவாவது நமது மனதிற்குள் கேட்டுக்கொண்டே இருக்கிறோம்.

உண்மையில் நாம் கேட்பதுடன் மிகவும் இசைந்துபோய்விட்டதால் கேட்கிறோம் என்பதைக்கூட நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு அது நமக்குள் ஒரு விழிப்பற்ற செயற்பாடாகவே ஆகிவிட்டது.

நாம் அதைக் கேட்பதாகப் பார்ப்பதில்லையாதலால், நாம் ஒன்றும் கேட்பதில்லை என்று வாதம் பண்ணலாம்.

அதை வாழ்க்கையில் ஒரு இயல்பான வழியாகவே பார்க்கிறோம்!

நாம் அதில் மிகுந்த ஈடுபாட்டுடன் இருப்பதால் நம்மை அதிலிருந்து விலக்கிக்கொண்டு ஒரு புதிய மனதுடன் பார்க்க முடியவில்லை.

புரிந்து கொள்ளுங்கள்... உலகில் இரண்டே இரண்டு வகையான



மதங்கள் மட்டுமே உண்டு; பிரார்த்தனையை அடிப்படையாகக் கொண்ட மதம், மற்றும் நன்றியுணர்வை அடிப்படையாகக் கொண்ட மதம்.

பிரார்த்தனையை அடிப்படையாகக் கொண்ட மதம் என்பது கடவுளிடம் ஏதாவது கேட்டுக் கொண்டே இருப்பது.

அதைக் கூட்டுப் பிரார்த்தனை வாயிலாகச் செய்யலாம்; ஏனெனில் அது நமது கேட்கும் மனோபாவத்துடன் மிகவும் இசைந்திருக்கிறது.

அது சிறுவயது முதலே நமக்குள் பதிந்துவிட்ட நெறிப்படுத்தல்களுடன் இசைந்திருக்கிறது.

நாம் குழந்தைகளாக இருக்கும் பொழுதிலிருந்தே பிரார்த்தனை என்றால் கேட்பது என்று கற்றுக் கொடுக்கப் பட்டுவிட்டது.

அதுவே கடவுளை அல்லது பிரபஞ்ச இருப்புத் தன்மையை அணுகும் ஒரு மிகவும் இயல்பான வழிபோல தோன்றுகிறது.

இன்னொரு பக்கம் நன்றியுணர்வு மதமானது, கடவுளை அல்லது பிரபஞ்ச இருப்புத் தன்மையை நோக்கிய உள்ளிருந்து பொங்கும் தாங்க முடியாத நன்றியுணர்வை அடிப்படையாகக் கொண்டது.

அது நமக்குக் குழந்தைப் பருவத்திலிருந்து சொல்லிக் கொடுக்கப்பட்டதற்கு முற்றிலும் மாறானது.

நமக்கு எப்பொழுதும் பெற்றுக் கொண்டதற்கு மட்டுமே நன்றி தெரிவிக்குமாறு கற்றுக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவ்வளவுதான். நமக்கு நன்றியுணர்வு என்பது ஒரு சமூகப் பண்பாடு என்பதற்கு மேலாகக் கற்றுத் தரப்படவில்லை!

பிறகு, எப்படி நாம் எப்பொழுதும் நன்றியுணர்வுடன் இருக்க முடியும்? அது மிகவும் அதிகம்!

அதனால்தான் இந்த நன்றியுணர்வு மதங்கள், குறிப்பிட்ட மிகச் சிலராலேயே பின் பற்றப்படுகின்றன.

(தொடரும்)

பரமஹம்ஸ சுவாமி

# வடபகுதி பேருந்துகளை சோதனையிட உத்தரவு

## நிமால் சிறிபாலடி சில்வா தெரிவிப்பு

வடபகுதியில் வழித்தட அனுமதிப்பத்திரமின்றிப் பயணிக்கும் பேருந்துகளை இனம்கண்டு பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா பொலிஸாருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அரசை ஏமாற்றி, திறைசேரிக்குச் சேரவேண்டிய பணத்தைச் செலுத்தாத பேருந்து உரிமையாளர்கள் எவ்வித சட்டவிரோதச் செயற்பாட்டில் ஈடுபடுவதையும் அனுமதிக்க முடியாது.

நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவு தமக்குண்டு எனக் காட்டிக் கொளளும் வகையில் அவர்களது படங்களைத் தமது பேருந்துகளில் காட்சிப்படுத்தியும், பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு மிரட்டல்விடுத்தும் பேருந்து உரிமையாளர்கள் இத்தகைய சட்டவிரோத பேருந்து சேவைகளை நடத்தி வருகின்றனர்.

இத்தகையோரது குற்றத்துக்காக அறவிடப்படும் பத்தாயிரம் ரூபா அபராதத் தொகையை ஒரு இலட்சம் ரூபா வரை அதிகரிக்க நான் நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளேன்.

அதேவேளை கேள்வி கோரல் நடைமுறை மூலம் வழித்தட அனுமதிப்பத்திரம் பெறுவோர் சட்டபூர்வமற்ற பேருந்து சேவையை மேற்கொள்வோரது செயற்பாடுகளால்பாதிப்பை எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது.

எனவே வடபகுதிக்கு பேருந்துச்சேவைகளை மேற்கொள்ளும் பேருந்து உரிமையாளர்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்குரிய கட்டணங்களைச் செலுத்தி வழித்தட அனுமதி பெற்றுக் கொள்ளுமாறு பேருந்து உரிமையாளர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டில் சமாதானச் சூழல உருவாக்கப்பட்ட பின்னர் நாட்டின் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் வட பகுதிக்குப் பயணம் மேற்கொள்வது அதிகரித்துள்ளது.

எனவே தேசிய போக்குவரத்து ஆணைக்குழு முக்கியத்துவம் வாய்ந்ததான வவுனியா நகரில் இலங்கை போக்குவரத்து ஆணைக்குழுவின் மத்திய நிலையமொன்றை நிறுவ முன்வந்தது.

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதிக்குப் பின்னர் இவற்றில் நிலவும் குறைபாடுகள் நேர் சீர்செய்யப்பட்டு மக்கள் தமது பயணங்களை இலகுவாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (இ-10)

# ஜனாதிபதியின் படகு வெடிப்பு முன்கூட்டியே திட்டமிட்ட செயல்

## இலங்கை விசாரணையாளர்கள் தெரிவிப்பு

மாலைதீவு ஜனாதிபதி யாமீன் அப்துல் கையூம் பயணித்த படகில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவம் முன்கூட்டியே திட்டமிட்ட செயல் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து சென்றுள்ள புலனாய்வுத் துறையினர் இதனை தெரிவித்துள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதியன்று மாலைதீவு ஜனாதிபதி பயணித்த படகில் வெடிப்பு சம்பவம் ஏற்பட்டது.

இதன்போது ஜனாதிபதிக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. எனினும் அவரின் பாரியார் காயமடைந்தார்.

சம்பவத்துக்கு படகின் இயந்திர பிரச்சினையே காரணம் என்று முன்னதாக சந்தேகிக்கப்பட்டது.

இந்த நிலையில் ஒக்டோபர் முதலாம் திகதியன்று அங்கு சென்று இலங்கையின் புலனாய்வுத் துறையினர் வெடிக்கக்கூடிய பொருள் ஒன்று அதி முக்கியஸ்தர்கள் பயணிக்கும் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்ததாக கண்டுபிடித்துள்ளனர்.

இந்த சம்பவம் குறித்த இந்தியா மற்றும் சவூதி புலனாய்வுத்துறையினரும் விசாரணைகளை நடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# லலித் வீரதுங்க, அனுஷ பெல்பிட்டவுக்கு பிணை

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்டவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் தொலைத் தொடர்புகள் ஆணைக்குழுவுக்கு சொந்தமான 60 கோடி ரூபா பணத்தில், மத ரீதியான சில் துணிகளை பகிர்ந்தளித்தமை தொடர்பில் இருவரும் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறித்த வழக்கு நேற்று எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் அவர்கள் தாக்கல் செய்த பிணை மனுவை விசாரித்த கொழும்பு உயர் நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி அவர்களுக்கு பிணை மனுவை அங்கீகரிப்பதாகதெரிவித்தார்.

அதனடிப்படையில் தலா, ஒரு இலட்சம் ரூபா பணம் மற்றும் 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையின் அடிப்படையில் பிணை வழங்கப்பட்டது. (இ-10)

# சிறுமி உள்ளிட்ட இருவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு

வாகரை - கேணிநகர் குளத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை குளித்துக் கொண்டிருந்த ஏழு வயது சிறுமிகள் இருவர் நீரில் மூழ்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வாகரைப் பிரதேச செயலாளர் பிரிவில் மீள்குடியேற்றக் கிராமமான கேணிநகர் பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள வரட்சி காரணமாக அப் பகுதி கிணறுகளில் நீர் வற்றிக் காணப்படுகின்றன.

இதனால், இரு சகோதரிகளின் பிள்ளைகளான இரண்டு சிறுமிகளும் தங்களது அம்மம்மாவுடன் கேணிநகர் குளத்தில் குளிப்பதற்குச் சென்றுள்ளனர். இவர்கள் குளித்துக் கொண்டிருக்கும் போதே, இருவரும் நீரில்மூழ்கிய போது, அயலவர்களின் உதவியுடன் ஒரு சிறுமி காப்பாற்றப்பட்டுள்ளார். எனினும் மற்றைய சிறுமி உயிரிழந்துள்ளார்.

காப்பாற்றப்பட்டுள்ள சிறுமி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், மரணமடைந்த சிறுமியின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

இச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் விசாரணைகளை மேற்கொனண்டு வருகின்றனர்.

இதேவேளை புத்தளம் களப்பில் மீன்பிடிக்கச் சென்ற ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இந்த சம்பவத்தில் பலியானவர் புத்தளம் பகுதியைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது. (இ-10)

# துறைகளை உறுதிப்படுத்துங்கள்


2014 இல் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தோற்றி Z புள்ளி அடிப்படையில் கல்வியாண்டு (2014/ 2015) பல்கலைக்கழக அனுமதி பெற்ற யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் தொடரவுள்ள துறைகள் தொடர்பான விபரத்தை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னதாக கல்லூரியின் நிர்வாகத்திற்கு தெரியப்படுத்துமாறு அதிபர் வே. ஞானகாந்தன் அறிவித்துள்ளார்.

கல்லூரியின் 2015 ஆம் ஆண்டுக்கான பரிசுத் தினத்திற்குரிய பரிசில் பெறும் பட்டியல் தயாரிக்கப்படவுள்ளதால் க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களது துறைகள் தொடர்பாக பரிசில் பெறும் பட்டியலில் இடப்பட்டுள்ளமையினாலேயே தத்தமது துறையினை தெரியப்படுத்துமாறு கேட்கப்பட்டுள்ளனர். (இ-5)

# இலங்கைத் தமிழர் வரலாறு

## ராஜேந்திர சோழனிடம் தோற்றுப்போன சிங்கள மன்னன்!

06



ராஜேந்திர சோழன் முன்னால், கைதியாக சிங்கள மன்னன் மகிந்தன்

....நடந்ததை அறிந்த நரசிம்ம வர்மர், ஒரு பெரும் படையைக் கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பினார்.

அந்தப் படையிடம் அட்டதத்தன் படை தோற்றது. மானவர்மன் இலங்கை அரசன் ஆனான்.

தமிழ் நாட்டின் வரலாற்றில் பொற்காலத்தைப் படைத்தவர்கள் ராஜராஜசோழனும் அவன் மகன் ராஜேந்திர சோழனும் ஆவார்கள்.

இவர்கள் ஏறத்தாழ இலங்கையை



தஞ்சை பெரிய கோவில் அருகே உள்ள ராஜராஜ சோழன் சலை

முற்றிலுமாக வென்று சோழ ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக ஆக்கினார்கள்.

கி.பி. 982 ஆம் ஆண்டில் ஐந்தாம் மகிந்தன் என்ற சிங்கள அரசன் இலங்கையை ஆண்டு வந்தான்.

அவன் சோழர்களுக்கு எதிரிகளான பாண்டியனுக்கும் சேரனுக்கும் உதவி செய்து வந்தான்.

### படையெடுப்பு

எனவே, இலங்கை மீது படையெடுக்க சோழமன்னன் ராஜராஜ சோழன் முடிவு செய்தார். தன் மகன் ராஜேந்திர சோழன் தலைமையில் ஒரு பெரிய கப்பல் படையை அனுப்பி வைத்தார்.

தமிழ்ப் போர் வீரர்களுடன் கப்பல்கள் இலங்கையை சென்றடைந்தன.

போர்க்கப்பல்களைப் பார்த்து சிங்களவர்கள் மிரண்டனர். சோழர் படையை எதிர்க்கத் துணிவின்றி மன்னன் மகிந்தன் இலங்கையின் இன்னொரு பகுதியான ரோகண நாட்டிற்குத் தப்பி ஓடிவிட்டான்.

சோழர் படை இலங்கையின் வட பகுதியைக் கைப்பற்றிக்கொண்டது. அந்தப் பகுதிக்கு மும்முடிச்சோழ மண்டலம் என்ற பெயர் சூட்டப்பட்டது.

தலைநகரமான அனுராதபுரம் அழிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக பொலநறுவா நகரம் புதிய தலைநகரம் ஆக்கப்பட்டது. அத்றகுச் சனநாதமங்கலம் என்ற புதிய பெயர் சூட்டப்பட்டது.

சிங்கள மன்னனின் கருவூலத்தில் இருந்த நகைகள், வைர மாலைகள், அரச அணிகலன்கள் முதலியன கைப்பற்றப்பட்டன. உடைக்க முடியாத வாள் ஒன்று சோழன் வசமாகிய்து.

### இரண்டாவது படையெடுப்பு

ரோகண நாட்டிற்குத் தப்பி ஓடிய மகிந்தன் சும்மா இருக்கவில்லை. சோழருக்கு எதிராகப் பெரும்படை ஒன்றைத் திரட்டினான். இலங்கையில் சோழர்கள் கைப்பற்றிய பகுதியை மீட்க போர் தொடுத்தான்.

இதுபற்றி சோழ மன்னன் ராஜேந்திரனுக்குத் தெரிந்தது. அவன் கி.பி. 1017 ஆம் ஆண்டில் மீண்டும் இலங்கை மீது படையெடுத்தான்.

இரு தரப்புக்கும் இடையே பெரும் போர் நடந்தது. சோழ படைகளின் தாக்குதலை மகிந்தன் படைகளால் சமாளிக்க முடியவில்லை.

போரில் சோழர் படை வென்றது. சிங்களர் படை தோற்றது.

மகிந்தனின் மணிமுடியும், அரசியின் மகுடமும் ராஜேந்திரனின் வசம் ஆகின.

(தொடரும்)

# ஐ.நா.பேரவை தீர்மானம் குறித்து மகிந்த மகிழ்ச்சியடைய வேண்டும்

## நிமால் சிறிபால டி சில்வா தெரிவிப்பு

(கொழும்பு)—

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான அறிக்கை வெளியிடப்பட்டிருந்த நிலையில் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்திருந்தால் இன்று நாட்டின் நிலைமை என்னவாகியிருக்கும் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா கேள்வி எழுப்பினார். ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை குறித்து கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் முதலில் மகிந்த ராஜபக்ஷவே மகிழ்ச்சியடைய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை குறித்து நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ள நிலையில் அது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டை வினவிய போதே போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபாலடி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானம் குறித்து முதலில் மகிந்த ராஜபக்ஷவே மகிழ்ச்சியடைய வேண்டும்.

முன்னைய ஆட்சியில் இடம்பெற்றதாக முன்வைக்கப்பட்டுள்ள போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் ஆதாரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதேபோல் வெளிநாட்டு ஊடகங்கள் ஆவணங்களையும், புகைப்படங்களையும் தொடர்ச்சியாக முன்வைத்து வருகின்றன.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் மகிந்த தரப்பினர் இதுவரையில் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்கவில்லை. இலங்கை இராணுவம் தொடர்பில் சுமத்தப்பட்டுவரும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் எமது இராணுவத்தை நியாயப்படுத்தி காப்பாற்ற வேண்டிய முக்கிய பொறுப்பு அரசாங்கத்திடமே உள்ளது. ஆனால் மகிந்த அரசாங்கம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறானதொருநடவடிக்கையை மேற்கொள்ளவில்லை.

அதேபோல் மேற்கத்தேய நாடுகளின் எதிரிகளை ஆதரித்தமை இலங்கை மீது சர்வதேசம் அழுத்தம் செலுத்த காரணம்எனவும்நாட்டை இவர்கள் பங்குபோடுவதாகவும் மகிந்த மற்றும் மகிந்த ஆதரவு தரப்பினர் முன்வைக்கும் காரணங்களை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். அமெரிக்காவும், பிரித்தானியாவும் எப்போதும் இலங்கைக்கு உதவும் நோக்கத்திலேயே செயற்படுகின்றன.

அதேபோல் அமெரிக்கா ஆதரிக்காத நாடுகளுடன் இலங்கை நட்புறவை பேணுவதனால் அவர்கள் எம்மை எதிர்க்கவேண்டிய அவசியமும் இல்லை.

மேற்கத்தேய நாடுகள் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க பிரதான காரணம் மனித உரிமை மீறல்களேயாகும். மனித உரிமை மீறல்கள் விடயத்தில் அரசாங்கம் சரியாக நடந்திருந்தால் எமக்கு இவ் வாறானதொரு அழுத்தம் ஏற்பட்டிருக்காது.

நாட்டில் ஜனவரி மாதம் மாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்காவிடின் இப்போது எமக்கு எதிரான விளைவுகள் மிக மோசமானதாகவே அமைந்திருக்கும். பொருளாதார ரீதியிலும், ஏனைய பாதுகாப்பு ரீதியிலும் எமக்கு எதிரான அழுத்தங்கள் அதிகரித்திருக்கும்.

ஒருவேளை தொடர்ந்தும் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்திருந்தால் அவ்வாறான நிலையில் ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கை தொடர்பில் தீர்மானம் முன்வைக்கப்பட்டிருக்குமாயின் இன்று நாட்டின் நிலைமை என்னவாகும்.

ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்னர் எமது அரசாங்கம் முதற்கடமை யாக யுத்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் சர்வதேச மட்ட த்தில் எமது இராணுவத்தை கொண்டுசெல்லும் செயற்பாட்டில் இருந்து காப்பாற்றியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 60 | 60 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 120 | 150 | 120 | 160 | 160 |
| தக்காளி | 50 | 60 | 60 | 100 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 50 | 60 | 60 | 60 | 70 |
| கரட் | 80 | 60 | 90 | 100 | 60 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 40 | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 110 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 120 | 120 | 110 |
| பாகற்காய் | 80 | 100 | 90 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 50 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 80 | 60 | 70 | 100 | 80 |
| பயற்றங்காய் | 80 | 50 | 80 | 100 | 60 |
| லீக்ஸ் | 60 | 60 | 60 | 80 | 80 |
| பீற்றூட் | 30 | 20 | 40 | 40 | 50 |
| கறிமிளகாய் | 80 | 90 | 100 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 100 | 40 | 80 | 80 | 80 |
| போஞ்சி | 140 | 170 | 170 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 30 | 30 | 40 | 40 | 40 |
| கீரை – 1 பிடி | 30 | 10 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 240 | 250 | 200 | 300 | 140 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 25-60 | 40 | 40-50 | 50 |
| இராசவள்ளி | 200 | 200 | — | — | — |
| வெங்காயப்பூ | 200 | 150 | 170 | 160 | 150 |
| முள்ளங்கி | 40 | 40 | 60 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 30 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 10 | 20 | 20 | 20 |


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 511

Search for people, places and things Nagendram Home

காட்பெயின்




ஆர்.ராஜீ



கர்ணா



நம்பிக்கை என்பது வெற்றியோடு வரும்.. ஆனால் வெற்றி என்பது நம்பிக்கை உடையோரிடமே வரும்...

கவிதாஞ்சனி



விதுஸ்




பிரணவன் விகனா




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# சிறுநீரகங்கள் செயலிழந்த நிலையில் உள்ளேன் கருணை உள்ளம் கொண்டவர்களே உதவுங்கள்

## கிளிநொச்சி வாழ் பெண்மணி கோரிக்கை

கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்த இன்பநாதன் விஜயராணி என்பவர் இரண்டு சிறுநீரகங்களும் செயலிழந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இறுதி யுத்தத்தின் போது தனது கணவனை இழந்த விஜயராணி மிகவும் வறுமைப்பட்ட நிலையில் எந்தவித உதவிகளும் இன்றிக் கடந்த ஒருமாத காலமாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இறுதி யுத்தத்திற்குப் பயந்து பல இடங்களுக்கும் இடம்பெயர்ந்து அலைந்து திரிந்தோம். புதுமாத்தளனில் குடியிருந்தபோது நானும் என் பிள்ளைகளும் பதுங்கு குழிக்குள் இருந்தோம். என் கணவர் பதுங்கு குழி வாசலில் இருந்திருந்தார். அந்த நேரம் எங்கிருந்தோ வந்து வீழ்ந்து வெடித்த ஷெல்லின் சிதறல்கள் பட்டு இரத்தம் ஓட அதிலேயே உயிரை விட்டார். தொடர்ந்து வீழ்ந்து வெடித்த ஷெல்லிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ள அவ்விடத்திலிருந்து என் பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டுஓடிவிட்டேன்.

தற்போது சொந்த ஊரில் எந்த உதவிகளுமின்றி வாழ்ந்து வருகின்றேன். எனக்கு இரண்டு சிறுநீரகமும் பாதிக்கப்பட்டு விட்டது. கண்டியில் சிகிச்சை மேற்கொண்டு வந்தேன். பொருளாதார வசதியின்றி அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றேன். தற்போது யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளேன்.

அறுவைச் சிகிச்சை மூலம் ஒரு சிறுநீரகத்தையாவது உடனடியாக மாற்ற வேண்டும் என்று கூறிய வைத்தியர்கள் அதற்கான ஒழுங்கைச் செய்யும்படி சொல்கின்றனர்.

வைத்திய சிகிச்சைக்காக 10 இலட்சம் ரூபா வரை செலவாகும் என்று தெரிவித்தனர். ஒரு நேரம் கஞ்சி குடிக்கவே இயலாத நிலையில் வாழும் நான் இவ்வளவு தொகைக்கு எங்கு செல்வேன்.

எனக்கு இரண்டு பிள்ளைகள். ஒரு பெண் பிள்ளை, ஒரு ஆண் பிள்ளை. அதில் ஆண் பிள்ளை மாற்றுத் திறனாளி.

கணவனையும் இழந்து பரிதவித்து வரும் எனக்கு கருணையுள்ளங் கொண்டவர்களிடம் இருந்து உதவியை வேண்டுகின்றேன். ஒரு சிறுநீரகத்தை அன்பளிப்பாக வழங்க முன்வரவேண்டும் அல்லது சிகிச்சைக்கு உதவிட வேண்டும் என்று மன்றாட்டமாக கேட்டுக் கொள்கின்றேன் என்றார் விஜயராணி.

உதவிகளை அனுப்ப விரும்புபவர்கள் இன்பநாதன் கிருஷாந் BOC 73881000 கிளிநொச்சி என்ற வங்கி இலக்கத்தில் வைப்பிலிடும்படியும் நேரடியாக உதவ விரும்புபவர்கள் இல.435, ஆனந்தபுரம் கிழக்கு, கிளிநொச்சி என்ற முகவரிக்கும் செல்லமுடியும். (இ)

# 200ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ். மத்திய கல்லூரியின் நடைபவனி

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் நடைபவனி நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

மேற்படி நடைபவனி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஏ.நடராஜன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

கௌரவவிருந்தினர்களாகதொழில் அதிபர்கள் ஈ.எஸ்.பி. நாகரத்தினம், எம்.ஆர்.ஜெயபாஸ்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

காலை 8 மணிக்கு கல்லூரி வாசலில் இருந்து ஆரம்பிக்கவுள்ள மேற்படி நடைபவனியானது மேற்படி வீதியூடாகச் சென்று புகையிரதக் கடவை வீதியூடாக பலாலி வீதிக்கு சென்று பின்னர் இராமநாதன் வீதி, பிறவுண்வீதி, அரசடி வீதி ஊடாக கஸ்தூரியார் வீதியைச் சென்றடைந்து அங்கிருந்து கல்லூரி வீதிக்கு சென்று காங்கேசன்துறை வீதியை அடைந்து பின்னர் சத்திரச்சந்தி வரை வந்து யாழ்.வைத்தியசாலை வீதியூடாக மணிக்கூட்டுக் கோபுர வீதியைச் சென்று வேம்படி வீதியூடாக கல்லூரி வாசலை வந்தடையவுள்ளது.

எனவே மேற்படி நடைபவனி நிகழ்விற்கு கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள் என அனைவரும் ஒத்துழைப்பினை வழங்குமாறு கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் கேட்டுள்ளார். (இ-5)

# கண்டிப்புள்ள ஆசிரியர்கள்தான் சமூகத்தால் மதிக்கப்பட்டார்கள்

(யாழ்ப்பாணம்)

நல்ல மனிதர்களை உருவாக்குகின்ற பணியின் மூலவேராகத் திகழ்பவர்கள் ஆசிரியர்களே. அவர்கள் வணக்கத்திற்கும், மதிப்பிற்கும் உரியவர்களாக சமூகத்தில் இடம்பிடித்திருந்தனர். ஆனால் இன்று அத்தகைய நிலைமாறி ஆசிரியர்களை மதிக்காத சமூகம் உருவாகி வருவது கண்டு மனவேதனை அடைகின்றேன்.

அதற்கு சமூகத்தில் உள்ளவர்கள் மட்டும ன்றி நாமும் காரணமாகின்றோம். முன்னைய காலங்களில் கண்டிப்பு ள்ள ஆசிரியர்களே சமூகத்தில் மதிப்புள்ளவர்களாக வாழ்ந்தார்கள். ஆனால் இன்று அத்தகைய நிலை இல்லை என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரன் தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெற்ற ஆசிரியர்தின விழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

தமது கடமைகளை சிறப்பாகவும், சீராகவும் ஆற்றி அதனூடாக நல்ல அறுவடைகளைப்பெற்று தனிமனித வாழ்கையையும், சமூகத்தையும் உயர்வான நிலைக்கு கொண்டுவந்தவர்கள் ஆசிரியர்களே. அவர்களின் கண்டிப்பும், அவர்கள் வழங்கிய தண்டனை யும் ஏற்புடையதாக மாணவர் மனங்களில் விழிப்பை உண்டாக்கியது.

ஆனால் இன்று அப்படியல்ல. கண்டிப்பை ஏற்றுக்கொள்ளும் மாணவரும் இல்லை. சாதனைகளுக்கு உரிமை கோரக்கூடிய ஆசிரியர்களும் இல்லை. காரணம் ஒரு மாணவனின் சாதனையில் அதிக பங்காளிகள் உள்ளனர். அவர்களை இனங்காண்பதிலும், வணங்குவதிலும் மாணவர்களுக்கு பல்வேறு சிக்கல்கள் உள்ளன. இதனை உணராத சமூகம் ஆசிரியர்களை வணங்கும், வாழ்த்தும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. மாறாக சாதனைக்கு உரியவர் நான்தான் என்பதனை மாணவன் எப்பொழுது சுட்டிக்காட்டுகின்றானோ அன்றுதான் நாம் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியவர்களாக மாறுகின்றோம்.

நாம் கற்கும் காலத்தில் கண்டிப்பான ஆசிரியர்களாலேயே கற்றோம். அப்போது கற்பதென்பது எமக்குச் சுமையாக இருந்தது. கற்பதால் என்ன பயன் என்பதனை நாம் உணர்ந்திருக்கவில்லை. கற்பதைவிட களிப்புடன் வாழ்வதையே கருப்பொருளாக கொண்டிருந் தோம். அககாலத்தில் கண்டிப்பான ஆசிரியர்களுக்குப் பயந்தே நாம் கற்றோம். என்பதால்தான் அதன் பலாபலனை இன்று அனுபவிக்கின்றோம்.

இன்று கண்டிப்பு வழங்கும் அளவிற்கு ஆசிரியர்களும் இல்லை. அதுமுடியாத காரியமும்கூட. அதே வேளை கண்டிப்பை ஏற்றுக்கொள்ளும் மாணவர்களும் இல்லை. இந்த நிலை மாறாதவரை மாணவப்பராயத்தில் கற்கவேண்டிய எதையும் மாணவன் கற்காத நிலை தோன்றி எம்மில் எவரையுமே மதிக்காத சமூகம் உருவாகும். ஆகையால் கண்டிப்புக்குப் பதிலாக சாதனையின் சொந்தக்காரர்களாக நாம் மட்டும் மாறி மாணவர் மனதில் இடம்பிடித்து அதனூடாக நல்ல சமூகத்தை உருவாக்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# ஆசிரியர் சேவையில் தரமுயர்வை முறையற்றதாக்குவதற்கும் காலதாமதமாக்குவதற்கும் எதிராக மனுவில் ஒப்பமிடுங்கள்

2014.10.23ஆம் திகதி 1885/38 ஆம் இலக்க புதிய ஆசிரியர் பிரமாணக்குறிப்பு வெளியிடப்பட்டுள்ளது. அப்பிரமாணக்குறிப்பிற்கமைய தரமுயர்வோ சம்பளநிலுவையோ இதுவரையும் கிடைக்கப் பெறவில்லை. அத்துடன் சம்பள முறைமைப்படுத்துவதிலும் குளறுபடிகள் நிறைந்துள்ளன. 1994.10.31 ஆம் திகதி வெளியிடப்பட்ட 883/4ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானமூலம் நிறுவப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவையின் பிரமாணக் குறிப்பு அடிக்கடி திருத்தங்களுக்குள்ளானதன் பின்னர் இப்பிரமாணக் குறிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்த பிரமாணக் குறிப்பில் காணப்படும் குறைபாடுகள் சம்பந்தமாக கல்வி அதிகாரிகளிடம் விளக்கம் கேட்டபோதும் எவ்வித பதிலும் அறியத்தராதிருப்பதன் மூலம் பிரச்சினை விரிவடைந்து செல்கிறது.

இதுவரையும் நாடு பூராகிலும் ஆசிரியர் தரமுயர்வானது பாரிய குறைபாடுகளுடன் காணப்படுகிறது என இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

நடைமுறையில் இருந்த பிரமாணக்குறிப்பில் ஆசிரியர் தரமுயர்வானது இலங்கை ஆசிரியர் சேவை 3.1 தரத்தில் 5 வருடங்களும் 2.11 தரத்தில் 10 வருடங்களும் 2.1 தரத்தில் 5 வருடங்களாகவும் ஆக 20 வருடங்களுக்குள் ஆசிரியர் தரம் 1 இற்கு வருவதற்கேற்றபடி காணப்பட்டது. அதே போன்று 2005/4ஆம் இலக்க பிரமாணக் குறிப்பில் அது மேலும் இலகுபடுத்தப்பட்டு 4 1/2 வருடங்களுக்குள் ஆசிரியர் தரம் 1 ற்கு வருவதற்கான அவகாசத்தை ஏற்படுத்தியிருந்தது. ஒருவருட காலத்தை கவனத்தில் கொள்ளும்போது 6 மாதங்களுக்கு மேலானதாக காணப்பட்டால் அது ஒருவருடகாலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. புதியபிரமாணக்குறிப்பின் படி 3.1 தரத்தில் 5 வருடங்களும் 2.11 தரத்தில் 9 வருடங்களும் 2.1 தரத்தில் 6 வருடங்களுமாக எல்லாமாக 20 வருடங்களுக்குள் தரம் 1 ற்கு தரமுயர்வு பெற்றுக் கொள்ளும் படியாக அமைந்துள்ளது. (கல்வித்தகைமைகளுக்கேற்ப வருடங்களில் மாற்றம் காணப்படும்) இதில் முக்கிய பிரச்சினையாக காணப்படுவது பழைய பிரமாணக்குறிப்பின்படி 2.1 தரம்பெற்ற ஆசிரியர்கள் தரம் 1 ற்கு வருவதற்கு புதிய பிரமாணக் குறிப்பின்படி 6 வருடங்களை கவனத்தில் கொள்வதாகும். இதுவரையும் கழிந்துள்ள 15 வருடங்களுக்கு 6 வருடங்களை கூட்டுவதனூடாக தரம் 1 ற்கு வருவதற்கு 21 வருடங்களாகின்றது.

இது சம்பந்தமாக நடத்திய பேச்சுவார்த்தைகள் எதற்கும் பதிலளிக்காமலிருப்பதனூடாக ஆசிரியர் சேவையில் பாரிய முறைகேட்டை ஏற்படுத்தியுள்ளது. அதனால் முறையற்ற விதத்தில் சம்பள மாற்றம் செய்திருப்பதனூடாக ஆசிரியர்கள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர்.

புதிய பிரமாணக்குறிப்பின்படி கல்வி டிப்ளோமா பெற்றவர்கள் 3.1 (இ) தரத்திற்கு உள்வாங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளதோடு பழைய பிரமாணக்குறிப்பின்படி நியமனம் பெற்ற டிப்ளோமாதாரர்களுக்கு தரம் 3.1 இற்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக உள்வாங்குவதனூடாக பழைய முறையின்படி நியமனம் பெற்றவர்களின் தரத்தை குறைத்திருக்கும் பிரச்சினைக்கு தீர்வு இல்லை.

புதிய பிரமாணக்குறிப்பின்படி அவ்விடயம் சம்பந்தமாக எவ்வித குறிப்புகளுமில்லாததனூடாக புதிய பிரச்சினையொன்று தோன்றியுள்ளது. பழைய பிரமாணக்குறிப்பின் படி 2010.12.31 குள் 2011/30 சுற்றுநிருபத்திற்கமைய தரமுயர்வு பெற்றுக்கொடுத்து சம்பள நிலுவையும் வழங்கியிருக்க வேண்டும். 2011/30 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைய தரமுயர்வுபடுத்தலை மேற்கொள்ளாமல் புதிய பிரமாணக்குறிப்பிற்கமைய தரமுயர்வு படுத்தும் போது சம்பளத்தில் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பாக எவ்வித தெளிவுபடுத்தலும் காணப்படவில்லை. அதேவேளை புதிய பிரமாணக்குறிப்பு 2008.07.01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறையில் இருந்த போதும் சம்பள நிலுவை 2011.01.01 ஆம் திகதி முதல் அமுல்படுத்த தீர்மானித்திருப்பதனூடாக 2 வருடகால சம்பள நிலுவை உரிமையற்றதாகியுள்ளது.

அச் சம்பள நிலுவையும் எம்மால் கோரப்பட்டுள்ள இடைக்கால கொடுப்பனவையும் வென்றெடுப்பதற்கான செயற்பாடொன்றை மேற்கொள்ள வேண்டும்.

புதிய பிரமாணக்குறிப்பில் அடுத்த தரத்திற்குப் போக பட்டதாரிகள் 3.1 தரத்தில் 3 வருடங்களும் 2.11 தரத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா அல்லது கல்விமாணிப்பட்டம் பெற்றிருப்பின் 7 வருடங்களும் ஆரம்ப பட்டத்துடன் கல்வி முதுமாணி /கல்வி முதுமாணியுடன் பயிற்றப்பட்ட ஆசிரியராயின் 5 வருடங்களாகவும் காணப்படுகிறது. பழைய பிரமாணக்குறிப்பில் அவ்வுரிமை காணப்படவில்லை. சேவையில் உள்வாங்கப்படும் போது இது சம்பந்தமாக தெளிவுபடுத்தலும் இல்லை.

2014 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ புதிய பிரமாணக்குறிப்பின்படி 2014.12.31 ற்கு முன்னர் தரமுயர்வு பெற்றுக் கொடுப்பதாக தெரிவித்தார். முன்னாள் கல்வியமைச்சர் பந்துல குணவர்தன 2014.12.31 இற்கு முன்னர் பாடசாலைகளுக்கு வந்து தரமுயர்வு பெற்றுக்கொடுப்பதாக தெரிவித்தார். தற்போதைய கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் 100 நாள் வேலைத்திட்டத்தில் தரமுயர்வு பெற்றுக்கொடுத்து முடிப்பதாக கூறினாலும் 2015.08.31 இற்கு முன்னர் தரமுயர்வு பெற்றுக்கொடுப்பதாக அவர்கள் தேர்தல் காலத்தில் கூறிய அனைத்து வாக்குறுதிகளும் பேச்சளவில் மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் கல்வி அமைச்சில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் மந்தகதியில் செயற்படுகின்றனர்.

இந்நிலைக்கு எதிராக பாரிய தொழிற்சங்க செயற்பாடொன்றை முன்னெடுப்பதற்கு நாம்திட்டமிட்டுள்ளோம். அதன்படி முதற் செயற்பாடாக அனைத்து ஆசிரியர்களினதும் கையொப்பத்துடன் கூடிய மனுவை கல்வி அமைச்சருக்கு சமாப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

இத்துடன் தங்களுக்கு தரப்பட்டுள்ள மனுவில் கையொப்பமிட்டு ஏனைய ஆசிரியர்களிடமும் காண்பித்து கையொப்பத்தை பெற்று மேலுள்ள விலாசத்தில் உள்ள இலங்கை ஆசிரியர் சங்கத்திற்கு உடன் அனுப்பிவைக்கும்படி வேண்டுகிறோம்.

இதுவரை உங்களால் ஏற்றுக் கொள்ள முடியாத தரமுயர்வு சம்பந்தமான கடிதம் கிடைத்திருப்பின் நகல் பிரதியொன்றும் ஏற்பட்டுள்ள பிரச்சினையையும் குறிப்பிட்டு அனுப்பும்படி வேண்டுகிறோம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் மேலும் அறிவித்துள்ளார். (இ-10)




# அப்பா ஏன் பொய் சொன்னார்?

...அவர் அந்த ரேங்க் கார்டை அப்போதுதான் பார்த்தார்.

பெற்றோர் கையெப்பம் போட வேண்டிய இடத்தில் அவருடைய கையெப்பம் இருந்ததையும் கவனித்தார். அது அவர் போட்டதில்லை என்பதைத் தெரிந்துகொண்டார்.

ஒரு நொடிதான் சிந்தித்தார். தன் மகன் குமார் செய்துள்ள தவறைப் புரிந்துகொண்டார்.

குமாரைத் திரும்பிப் பார்த்தார்.

குமார் அமைதியாக எழுந்து நின்று தலையைக் குனிந்து கொண்டார். மற்ற மாணவர்கள் அங்கே என்ன நடக்கப் போகிறதோ என்ற அச்சத்தோடு அமைதியாக இருந்தனர்.

போன மாதம் ரேங்க் காட்டில் திருட்டுக் கையெழுத்துப்போட்டது தெரிந்தவுடன் முகமது கவுஸ் என்ற மாணவனை எல்லோர் முன்னிலையிலும் வகுப்பிலேயே அவனுடைய அப்பா அடித்து நொறுக்கியது குமாருடைய கண் முன்னே நின்றது.

அப்பா என்ன செய்யப் போகிறாரோ என்று நினைத்துப் பயத்தோடு நின்றிருந்தான். அவருடைய கோபம் அவனுக்குத் தெரியும்.

ஆமாம் சார்! பார்த்தேன்! வீட்டில் விசேஷம் வந்துவிட்டதால் இரண்டு நாள் அவனுக்குப் படிப்பில் கவனம் செலுத்த முடியாத அளவு விருந்தினர் தொந்தரவு. அடுத்தமுறை நிச்சயமாக நிறைய மதிப் பெண் எடுப்பான். இந்தமுறை அவனை மன்னிச்சிடுங்க. நானும் கவனிக்கிறேன்!


ராஜா சாதாரணமாகச் சொன்னார். குமாரின் காதுகளை அவனால் நம்பமுடியவில்லை!

அவன் மார்க் குறைந்ததில் கூட எனக்குப் பெரிய வருத்தம் இல்லை சார். நீங்கள் மிகவும் கண்டிப்பானவராச்சே! ரேங்க் கார்டில கையெழுத்துப் போட மாட்டீங்களே! ஒருவேளை குமார் ஏதாவது திருட்டுத்தனமாக.... ஆசிரியர் முடிப்பதற்குள் ராஜா முந்திக்கொண்டார்.

ஸாரி சார் என் மகன் அப்படிப்பட்டவன் கிடையாது. சந்தேகப்பட வேண்டாம். அடுத்த மாதம் பாருங்கள் மீண்டும் பாஸ்ட் ரேங்க் எடுத்துக் காட்டுவான்.

ஓகே சார்... உங்களைத் தொந்தரவு செய்துட்டேன்! ஸாரி.

பரவாயில்லை சார். பெற்றோருக்கு இருப்பதைப் போல் தானே மாணவர்களின் நலனில் உங்களுக்கும் அக்கறை இருக்கணும். அப்பா விடை பெற்றுச் சென்றதி லிருந்து குமார் குழம்பிப் போனான். அப்பா ஏன் பொய் சொன்னார். பொய் பேசுபவர்களையே அவருக் குப் பிடிக்காதே!



ஒருவேளை வீட்டுக்குப் போனதும் தண்டனை தரப் போகும் திட்டமாக இருக்குமோ! அன்று முழுவதும் பள்ளியில் அவன் கலகலப்பாகவே இல்லை.

அன்று மாலை.... பள்ளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பிய குமார் வாசலில் ஷூவை அவிழ்த்து விடும்போதே கவனித்தான். அவனுடைய அப்பா அம்மாவிடம் உள்ளே பேசிக் கொண்டிருந்தது அவனுடைய காதுகளில் நன்றாக விழுந்தது, அமைதியாக நின்று கவனித்தான்.

திருட்டுப்பயல்! உங்கள் கையெழுத்துப் போடற அளவுக்குத் திமிர் வந்துட்டுதா அவனுக்கு? அங்கேயே நாலு அறை விட்டுட்டு வராம. இப்ப வந்து அமைதியா சொல்றீங்களே! நீங்கதாங்க அவனைக் கெடுக்கிறீங்க! அம்மா பொரிந்துகொண்டிருந்தாள்.

இல்லம்மா. எப்பவுமே முதல் ரேங்க் எடுத்து வந்த அவனால் இந்த தோல்வியை தாங்கிக்க முடியல! அப்பா என்ன நினைப்பாரோ என்ற கவலை வேறு. தப்பிக்க வேற வழி தெரியல. தற்காலிகமாக தப்பிக்க இதுமாதிரி செய்துட்டான் விடு. நமக்கும் உண்மை தெரிஞ்ச மாதிரி காட்டிக்க வேண்டாம். அந்த குற்ற உணர்வே அவனை மேலும் குற்றவாளி ஆக்கிடும்.

ஓஹோ... அப்படியா இத அப்படியே விட்டுடச் சொல்றீங்களா? வரட்டும் இன்னிக்கு! திருட்டுக் கையெழுத்துப் போட்ட அந்த விரல்ல ஒரு சூடு போட்டா எல்லாம் சரியாகிப் போயிடும்!

சொன்னா கேளு வாசுகி, நாம அவன் மேல வச்சிருக்கிற நம்பிக்கை எங்கே வீணாயிடு மோன்ற கவலையில்தான் அவன் அப்படி செய்துட்டான்.

இல்லீங்க. மத்த பசங்க எதிரிலேயே நீங்க ,அவனை நாலு போட்டிருந்தீங்கன்னா தானே மறுபடி அந்தத் தப்பை அவன் செய்ய மாட்டான்! யோசிச்சிப்பாரு வாசுகி, அவனோட வகுப்பாசிரியர், குமார் மேல எவ்வளவு நம்பிக்கை வச்சிருக்காரு தெரியுமா? நான் மட்டும் உண்மையைச் சொல்லியிருந்தா அந்த நம்பிக்கை அடியோட பாழாகிப் போயிருக்கும். இதுக்கப்புறம் அவன் உண்மையே பேசினாக் கூட அவர் நம்ப மாட்டார். அதோட மட்டும் இல்லாம மத்த பிள்ளைகள் மத்தியில் அவன் அவமானப்பட்டிருந்தால் திரும்ப எப்படி வகுப்புக்குள்ள நுழைவான்? அப்புறம் படிப்பில் அக்கறை குறைஞ்சு ரொம்ப மோசமாகிவிடுவான். நமக்கு உண்மை தெரிஞ்சிடுச்சின்னு அவனுக்குத் தெரிஞ்சாலே போதும், அதுக்கே ரொம்பவும் அவமானப் படுவான். அதனால தான் நான் ஒரு பொய் சொன்னேன். அந்த ஒரு பொய்யை நான் சொன்னதால அவனுடைய மனசாட்சியே அவனை உறுத்தும். மறுபடி அது போல தப்பே செய்யாதபடி அவன் திருந்திடுவான். நீ வேணும்னா பாறேன். நம்ம பையன் மேலே எனக்கு நிறைய நம்பிக்கை இருக்குது.

அப்பா தன்மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும் தன்னை பிறர் மத்தியில் அவமானப்படுத்து வதை விரும்பாத அவருடைய உயர்ந்த குணத்தையும் உணர்ந்த குமார் உணர்ச்சிவசப்பட்டான். அதுவரை வாசலிலேயே நின்றிருந்த அவன் தன்தோள் மீதிருந்த புத்தகப்பையை பொத்தென அப்படியே போட்டு விட்டுத் தன் தந்தையிடம் ஓடினான். அவருடைய கால்களில் விழுந்தான். கலங்கிய கண்களுடன் அப்பா என்னை மன்னிச்சிடுங்க. இனிமேல் இது போல தப்பே செய்யமாட்டேன். படிப்பில் கவனமாயிருந்து எப்பவுமே முதல் ரேங்க எடுத்துக் காட்டறேன். இந்த தடவை மட்டும் என்னை மன்னிச்சிடுங்கப்பா... என்று புலம்பின்னான்.

வாசுகி ஆச்சர்யத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். தனது கால்களில் விழுந்த தன் மகனை ராஜா குனிந்து தூக்கி அன்போடு அணைத்துக் கொண்டு அவனுடைய கண்ணீரைத் துடைத்து விட்டார். (முற்றும்)




- ❖ 1573 - எண்பதாண்டுப் போரில் நெதர்லாந்து முதலாவது வெற்றியை ஸ்பானியாவுக்கு எதிராகப் வெற்றி யைப் பெற்றது.
- ❖ 1582 - கிரெகொரியின் நாட்காட்டி அறிமுகப்படுத்தப்பட்டதை அடுத்து இத்தாலி, போலந்து, போர்த்துக்கல், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் புதிய நாட்காட்டியில் இவ் வாண்டின் இந்நாள் இடம் பெறவில்லை.
- ❖ 1813 - பவேரியாவுக்கும் ஆஸ்திரியாவுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டது.
- ❖ 1821 - பெருவில் ஜோஸ் டெ சான் மார்ட்டின் தலைமையிலான அரசு கடற்படையை அமைத்தது.
- ❖ 1860 - லாஸ் ஏஞ்சலஸ், சான் பிரான்சிஸ்கோ நகர்களுக்கிடையே மின்சாரத் தந்தி அறிமுகமானது.
- ❖ 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அமெரிக்கப் படைகள் கென்டக்கியில் கூட்டமைப்புப் படைகளின் முற்றுகையைத் தடுத்து நிறுத்தினர்.
- ❖ 1912 - முதலாவது பால்கன் போர் ஆரம்பமானது: மொண டெனேகுரோ உதுமானியப் பேரரசுடன் போர் தொடுத்தது.
- ❖ 1932 - இந்திய வான்படை நிறுவப்பட்டது.
- ❖ 1939 - இரண்டாம் உலகப் போர்: ஜேர்மனி மேற்கு போலந்தை இணைத்துக் கொண்டது.
- ❖ 1944 - குரூசிஃபிக்ஸ் ஹில் சண்டை ஆஃகனிற்கருகில் இடம்பெற்றது.
- ❖ 1962 - அல்சீரியா ஜக்கிய நாடுகள் அவையில் இணைந்தது.
- ❖ 1967 - கெரில்லா இயக்கத் தலைவர் சேகுவேராவும் அவரது சகாக்களும் பொலிவியாவில் கைப்பற்றப்பட்ட னர்.
- ❖ 1973 -சூயஸ் கால்வாயின் ஸ்ரேலியப் பக்கத்தில் இடம்பெற்ற போரில் 140 ஸ்ரேலியத் தாங்கிகள் எகிப்திய படைகளினால் அழிக்கப்பட்டது.
- ❖ 1982 - சொலிடாரிட்டி தொழிற்சங்கம் போலந்தில் தடை செய்யப்பட்டது.
- ❖ 2006 - காலி கடற்படைத் தளத்தின் மீது விடுதலைப் புலிகள் தாக்கி 3 கடற்படைக் கலங்களை மூழ்கடித்தனர்.

### பிறப்புகள்

- ❖ 1922 - கோ. நா. இராமச்சந்திரன், இந்திய அறிவியலாளர் (இ. 2001)
- ❖ 1924 - திருநல்லூர் கருணாகரன், இந்தியக் கவிஞர் (இ. 2006)
- ❖ 1932 - கென்னத் அப்பெல், அமெரிக்கக் கணிதவியலாளர்
- ❖ 1950 - சு. கலிவரதன், தமிழக எழுத்தாளர்
- ❖ 1971 - பா. ராகவன், தமிழக எழுத்தாளர்
- ❖ 1983 - அபிசேக் நாயர், இந்தியத் துடுப்பாட்ட வீரர்

### இறப்புகள்

- ❖ 1936 - பிரேம்சந்த், இந்திய எழுத்தாளர் (பி. 1880)
- ❖ 1959 - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கவிஞர், பாடலாசிரியர் (பி. 1930)
- ❖ 1967 - கிளமெண்ட் அட்லீ, ஐக்கிய இராச்சியத்தின் பிரதமர் (பி. 1883)
- ❖ 1979 - ஜெயபிரகாஷ் நாராயணண், இந்திய அரசியல்வாதி (பி. 1902)
- ❖ 2003 - வீரமணி ஐயர், ஈழத்துக் கவிஞர் (பி. 1931)
- ❖ 2011 - பாரத லக்சுமன் பிரேமச்சந்திர, இலங்கை அரசியல்வாதி (பி. 1956)

துயரத்தை விலையாகக் கொடுக்காமல் மகிழ்ச்சியைப் பெறவே இயலாது.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வதை முகாமின் இறுதித் தீர்ப்பு சிலர் விடுதலை; பலர் அழுகை

வதை முகாமில் ஒரே சித்திரவதை. வீட்டில், வெளியில் என சித்திரவதையின் ஆக்கிரமிப்பு தொடர்ந்தது.

பாடசாலையில் ஆசிரியர், அதிபர் ஆகியோரின் “படி” “படி” என்ற அழுத்தம். வீட்டில் பெற்றோரின் அதட்டல். பிஞ்சு உள்ளங்களின் ஏக்கம்; ஓய்வு என்ற பேச்சுக்கே இடமில்லை. இதனிடையே சதுர்த்தி, சஷ்டி, ஏகாதசி, கார்த்திகை விரதம் போல தனியார் கல்வி நிறுவனங்களில் நடக்கும் மகா தீட்சை. பத்தே வயதான பிஞ்சுகளின் மனங்களை வதைத்து வறுத்து இனிமேல் கல்வியில் ஆசை கொள்ளாதே என்று உயில் எழுதுவது போல எல்லாம் நடந்து முடியும்.

[illegible] பத்தே வயதான சிறுவர்களை, உச்சமாக வதைப்பதற்காக இந்த நாட்டின் மகா மேதைகள் ஒன்று கூடி 200 புள்ளிகள் கொண்ட இரண்டு வினாத்தாள்களை தயாரிப்பர். அன்றுதான் அந்தப் பிஞ்சுகளுக்கான கவுணாவத்தை வேள்வி நடைபெறும்.

அது மகா வேள்வியாக இருந்தாலும் எல்லாப் பாரத்தையும் இறக்கி வைக்கின்ற நாள் என்பதால், அந்தப் பாலகர்களுக்கு அது திருப்தியாக இருக்கும். எனினும் மகா வேள்வியின் முடிவு வரும் வரை ஏக்கம் வதைக்கும். திடீர் திடீர் கனவுகள் வந்து போகும். கடவுளே! இந்தப் படிப்பு வேண்டாம் என்று அந்தப் பச்சிளம் உள்ளங்கள் பதை பதைக்கும்.

ஆம், அந்த முடிவுகளுக்கான காத்திருப்பு முன்னைய வதைகளை விட மோசமானது. ஒரு நாள் நடு நிசியில் கணனிகள் தட்டி எழுப்பும். இணையத்தில் வதைபட்டோர், விடுதலை பெற்றோர் பட்டியல் [illegible]ம்பெற்றிருக்கும்.

இதனிடையே வேள்வி நடந்த சிறுவர்களின் வீடுகளில் தொலைபேசி ஓய்வின்றி ஒலி எழுப்பும்.

என்ன சங்கதி! நடுச்சாமத்தில் அந்த வீடுகளில் ஒரே ஆரவாரம். ஒரு வீட்டில் அழுகுரல் கேட்கிறது. மறுவீட்டில் மகிழ்ச்சி ஆரவாரம். இருந்தும் திருப்தியில்லாத் திண்டாட்டம்.

அந்தோ! என்னவோ! ஏதோ! என்ற ஏக்கத்தோடு முதுமைக்ள் வாழும் வீட்டில் உறக்கம் கலைந்து, குலைந்து போகும்.

மறுநாள் விடியற்பொழுதில் பல பாடசாலைகளில் கறுப்புக்கொடி கட்டாத துக்கம் அனுஷ்டிப்பு.

சில பாடசாலைகளில் வெற்றிக் கொடி நாட்டாத வெற்றி விழாக் கொண்டாட்டம்.

இதனிடையே கல்வித் திணைக்களப் பொதிகளுடன் தபால்கந்தோரின் பணி தொடரும்.

70க்கு கீழ்; 70க்கு மேல்; 100க்கு மேல்; சித்தி; சித்தியின்மை; இலை; மரம் அடேங்கப்பா வதை முகாமில் நடந்தவை அறிக்கைப்படுத்தப்பட்டு பெரிய பெரிய திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

வதை முகாமில் அடிபட்டு, உதைபட்டு, திட்டுகள் எல்லாம் தாங்கி சித்தி என்ற பேறு பெற்றோர் துன்பம் என்னும் சுமையில் இருந்து விடுபட்டனர்.

மற்றவர்கள் வாழ்நாள் பூராகவும் துன்பப்பட்டு, துயரப்பட்டு அணிவதையே தம் தலைவிதியாக்கிக் கொள்வர். என் செய்வோம்! தரம் ஐந்து மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சை, அதற்கான தயார்ப்படுத்தல், பெறுபேற்றுக்கான காத்திருப்பு, பரீட்சைப் பெறுபேற்றின் முடிவு.

இவைதான் நம் வீடுகளில் 10 வயதுப் பாலகர்களை வதை செய்யும் கொடு வதை முகாம்.

ஐ.நா அறியாத இந்த வதை முகாமை அழிக்க வல்லார் யாரோ! யாம் அறியோம் பராபரமே.

# யாழில் ஆசிரியர் அடித்துக் கொலை இருவருக்கு விளக்கமறியல் நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியில் வைத்து தம்பதிகள் மீது மோசமான தாக்குதலை மேற்கொண்டு கணவரை கொலை செய்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் இருவரையும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 19 ஆம் திகதி யாழ்.மணிக்கூட்டு வீதியினைச் சேர்ந்த ஆசிரியர்களான மாதவ மணிவண்ணன் (வயது 44) திருமதி எம்.தர்சினி தம் பதிகள் சில காடையர்களால் தாக்கப் பட்டு யாழ்.போதனா வைத்திய சாலை யில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இவர்களில் மாதவமணிவண்ணன் சிகிச்சை பலனின்றி கடந்த 23 ஆம் திகதி உயிரிழந்தார்.

இதனையடுத்து குறித்த தம்பதிகள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் இரகசிய கமராவில் சிக்கியுள்ளனர்.

இந்த ஆதாரத்தின் மூலம் அரசடி, மணக்கும்பான் பகுதியைச் சேர்ந்த இரு வரை பொலிஸார் கைது செய்து நீதி மன்றில் முன்னிலைப்படுத்திய போது நீதவான் இவர்களை நேற்று வரை விளக்கமறியிலில் வைக்குமாறு உத் தரவிட்டிருந்தார்.

அதன்படி நேற்றைய தினம் இவர்களின் வழக்கு மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்டபோது யாழ்.நீதிமன்ற நீதவான் பொ.சிவகுமார் இவர்களை எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத் தரவிட்டார். (செ-4,9)

## தரம் – 5 பரீட்சை மீள் பரிசீலனைக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் நேற்று வெளியாகியுள்ள நிலையில், இவற்றில் மீள் திருத்தம் செய்ய விரும்புபவர்கள் எதிர்வரும் 23-ம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்குமாறு பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட மாணவர்கள் பாடசாலை அதிபர் ஊடாக குறித்த விண்ணப்பங்களை அனுப்ப முடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்த மேலதிக விபரங்கள் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (செ-12)

## 14 பேருக்கு தாதியர் நியமனம்

(அல்வாய்)

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 14 பேருக்கு தாதியர் நியமனம் வழங்கப் படவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமனம் வழங்கப்பட வுள்ளது.

யாழ்.தாதியர் கல்லூரியில் 2011-ம் ஆண்டிலிருந்து தாதிய கற்கை நெறியை பூர்த்தி செய்த தாதியர்களுக்கே இவ் நியமனம் வழங்கப்படவுள்ளமை குறிப் பிடத்தக்கது. (செ-12,13)

## கஞ்சா கலந்த பாக்கு விற்பனை; சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

யாழ் ஐந்து சந்திப் பகுதியில் கஞ்சா கலந்த பாக்கு வியாபாரத்தில் ஈடுபட்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ் நீதவான் நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் உத்தரவிட்டுள்ளார்.

யாழ் 5 சந்திப்பகுதியில் பாக்கு, புகையிலை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவரை கஞ்சா கலந்த பாக்கு விற்பனை செய்துவருவதாக பொலிஸாருக்கு கிடைத்த ரகசிய தகவலையடுத்து நேற்று முன்தினம் யாழ்.பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்றையதினம் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அவர் சார்பாக பிணை விண்ணப்பம் செய்யப்பட்ட போது அவரை பிணையில் விடுவிக்க பொலிஸார் கடும் எதிர்ப்பு தெரிவித்த காரணத்தினால் அவரது பிணைக் கட்டளையை 21 ஆம் திகதி வரை ஒத்திவைத்து சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத் தரவிட்டார். (செ-9)

## ரயில் சேவைகள் வழமைக்கு திரும்பின

(யாழ்ப்பாணம்)

ரயில் ஒன்று தடம்புரண்டதால் பாதிக்கப்பட்ட வடக்கு ரயில் சேவைகள் வழமைக்குத் திரும்பியுள்ளன.

வடக்கு ரயில் பாதையின் அம்பத்பொல - கல்கமுவ வரையான பகுதியில் ரயிலொன்று நேற்று முன்தினம் தடம் புரண்டது.

இதனால் வட பகுதிக்கான இரவு நேர தபால் ரயில்கள் நான்கும் இரத்துச் செய்யப்பட்டன.

இதனையடுத்து நேற்று முன்தினம் நள்ளிரவு 12.30 மணி அளவில் தடம் புரண்ட ரயில் மீண்டும் சீர்செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-12)

## கிருஷ்ணாத்மானந்தா சுவாமிகளின் சத்சங்கமம்

(யாழ்ப்பாணம்)

இன்று வியாழக்கிழமை மாலை 5.00 மணி தொடக்கம் 6.00 மணி வரை இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள யாழ்ப்பாண சின்மயா மிஷன் ஆச்சிரமத்தில் குரு பாதுஹா பூஜை, பஜனை இடம்பெற்று 6.00 மணி முதல் 7.00 மணிவரை சிறப்பு நிகழ்வாக இந்தியா சேலத்திலிருந்து வருகை தந்துள்ள சுவாமி கிருஷ்ணாத்மானந்தா அவர்களின் சத் சங்கம் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆன்மிக ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)

## சத்திய தரிசனம்



### அன்புடன் ஆதரிப்போம்

- அளவாக உண்ணுங்கள். பயன் தரும் இனிய சொற்களைப் பேசுங்கள்.
- மனக்கட்டுப்பாடும், நல்ல ஒழுக்கமும் சொர்க்கத்துக்கு நிகரான வாழ்வு தரும்.
- யாரையும் வெறுப்பது கூடாது. பிடிக்காவிட்டால் பழகாமல் இருப்பது நல்லது.
- உலகிலுள்ள அனைவரும் நலமுடன் வாழ வேண்டும் என்று அன்றாட வழிபாட்டில் வேண்டுங்கள்.
- பயப்படுவதும், பிறரைப் பயமுறுத்துவதும் மிருகப்பண்பு. அன்புடன் அனைவரையும் ஆதரியுங்கள்.
- மனிதப்பிறவி மீண்டும் கிடைக்காமல் போகலாம். அதனால் வாழ்வைப் பயனுள்ளதாக்குங்கள்



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஒரு மனிதன் இறந்துவிட்டால் அவன் இருக்கின்றான் என்றும் அவன் இல்லையென்றும் கூறுகின்றனர். ஒருவன் இறந்துவிட்டால் இருக்கின்றானா, இல்லையா?

மனிதனை இரண்டு நெருங்குகிறது. மேன்மையானது ஒன்று, சுகமானது ஒன்று. கடவுளை நினைந்துருகி அவரையே போற்றி ஒழுக்கமாக வாழ்வது மேன்மையானது.

எந்த ஒரு வேலை செய்தாலும் அதற்கு பலன் எதிர்பாராமல் செய்வது, அதன் பலன் இறைவனுக்குத்தான் என வாழ்பவன் கவலையின்றி இருக்கின்றான்.

எவ்வளவுதான் பணம் வந்தாலும் பத்தாது என அலைவது, எந்தப் பொருளையும் தனக்கு என அடைய நினைந்து அலைவது. பார்க்க வேண்டும், புகழ வேண்டும் என சுயநலம் கொண்டு ஆசைகளில் மோகமாகி அதிலேயே மூழ்கிவிடுவது சுகமானது.

இந்தச் சுகத்தில் மூழ்கியவன் எந்த நாளுமே நிம்மதியென்பதை அடைய முடியாத அர்ப்பனாகின்றான். பொருள் ஈட்டுவதிலேயே தன்னையும் மனத்தையும் ஒரு நிலைப்படுத்தி பயம் வேலை என்றே மூழ்கி தத்தளிப்பான்.

மரணத்திற்குப் பின் ஒரு மனிதனுடைய ஆன்மாவானது பாவ புண்ணிய பாவபலன்களுக்கு ஏற்க சொர்க்கம் நரகம் எனப் போகின்றது. அதன் பாவ புண்ணியத்தின் படி பலன்களை அனுபவித்துவிட்டு மீண்டும் பிறக்கின்றான்.

அதுவும் கூட ஏற்கனவே அது செய்த வினைப்படிதான் பிறப்பெடுக்கும்.

அதனால் எவனொருவன் தெளிந்த பக்தியுடன் பக்தி கொண்டு வாழ்கிறானோ அவன் பரிசுத்தமாக ஆகிறான். பிறகு அவன் இறைவனை அடைந்து மோட்சம் ஆகின்றான்.

ஆசைகளை முழுவதும் துறக்கும்போது மரணம் அவனை நெருங்குவதில்லை. அவன் இறைவனுடன் இரண்டறக் கலக்கிறான்.

## உதைபந்தாட்டத் தொடர்

நெடுந்தீவு மத்திய சனசமூக நிலையத்தின் 50ஆவது ஆண்டு நிறைவையொட்டி குறித்த சனசமூக நிலையத்தால் உதைபந்தாட்டத் தொடர் ஒன்று நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நெடுந்தீவு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் 7 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான இந்த உதைபந்தாட்டத் தொடா எதிர்வரும் 10ஆம் திகதி ஆரம்பமாகும் என்று ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (க)

## ஆறுதல் வெற்றி பெறும் இந்தியா இறுதி இருபது-20 போட்டி இன்று

இந்தியா-தென் ஆபிரிக்கா அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி 20 ஓவர் கிரிக்கெட் போட்டி கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

முதல் 2 போட்டியிலும் தோற்று தொடரை இழந்த இந்திய அணி இந்த ஆட்டத்திலாவது வென்று ஆறுதல் அடையுமா? என்று ரசிகர்கள் ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளனர். முதல் ஆட்டத்தில் மோசமான பந்து வீச்சாலும், 2ஆவது ஆட்டத்தில் மோசமான பட்டிங்கா லும் தோல்வி ஏற்பட்டது.

இவை இரண்டையும் சரி செய்து சம பலத்துடன் விளையாடினால் மட்டுமே தென் ஆபிரிக்காவை வீழ்த்த இயலும். சிறந்த ஓல்ரவுண்டர் இல்லாதது இந்திய அணிக்கு பலவீனமே. முதல் 2 ஆட்டத்தில் வாய்ப்பு கிடைக்காத ரகானே, அமித் மிஸ்ரா இன்றைய போட்டியில் இடம் பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அம்பதி ராயுடு, ஹர்பஜன் சிங் கழற்றி விடப்படலாம்.

தென் ஆபிரிக்க அணி 3 ஆவது போட்டியிலும் வென்று 'ஹட்ரிக்' சாதனை படைக்கும் ஆர்வத்துடன் உள்ளது. பட்டிங், பவுலிங், பீல்டிங் ஆகிய 3 துறைகளிலும் அந்த அணி சிறப்புடன் உள்ளது. (க)

## கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் தனது அங்கத்துவ கழகங்களுக்கிடையில் நடத்திய 2015ஆம் ஆண்டுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி இன்று வியாழக்கிழமை மாலை 6.30 மணிக்கு அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஆண்களுக்கான A பிரிவு இறுதிப்போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும்

ஆண்களுக்கான B பிரிவு இறு திப்போட்டியில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இணுவில் அமரகவி விளையாட் டுக்கழகம் மோதவுள்ளது. (க)

# மைக்கல் வி.கழக உதைபந்தாட்டம்; இளவாலை யங்கென்றீஸ் வெற்றி



மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் யாழ். மாவடடத்திலுள்ள அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையே நடத்தப்பட்டு வரும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டத் தொட ரில் கடந்த திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு வதிரி பொம்மேர்ஸ் அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றீஸ் அணி மோதியது.

போட்டியின் ஆட்டநேரமுடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் யங்ஹென்றீஸ் விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது. (க)

# அமரர் கீர்த்திகன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி



கொக்குவில் இந்துக்கல்லூரியின் மாணவனும் கூடைப்பந்தாட்ட வீரனுமான அமரர் கீர்த்திகன் ஞாபகார்த்தமாகக் கொக்குவில் இந்துக் கல்லூரியினால் யாழ்.மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் கூடைப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டங்களில் யாழ். இந்துக் கல்லூரி, மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை என்பன வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

அண்மையில் கொக்குவில் இந்து கல்லூரியின் கூடைப்பந்தாட்டந் திடலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டங்களில் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக்கல்லூரி அணி மோதியது. இதில் யாழ். இந்துக் கல்லூரி அணி 69:52 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணியை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதிக்கொணடது. இதில் மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணி 56:49 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (க)

# சமரபாகு நியூட்டன் வி.கழக மாவட்ட ரீதியான உதைபந்து

## அடுத்த சுற்றில் அன்ரனிஸ், திக்கம் இளைஞர்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் சமரபாகு நியூட்டன் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் உதைபந்தாட்டத் தொடர், குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. இந்தத் தொடரில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற சென். அன்ரனிஸ், இளைஞர் கழகங்கள் அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பாஷையூர் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழகமும் வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. பல சவால்களுக்கும் எதிர்ப்புக்களுக்கும் மத்தியில் சென்.அன்ரனிஸ் சார்பாக ஆட்டத்தின் 17 ஆவது நிமிடத்தில் முதல் கோல் பதிவானது. சயந்தனால் அடிக்கப்பட்ட அந்தக் கோலே முதல்பாதியின் இறுதிக்கோலுமாக முடிவடைந்தது முதல் பாதி.

பழி தீர்த்தேயாக வேண்டும் என்ற கட்டாயத்தில் களமிறங்கிய டயமன்ஸ் இரண்டாம் பாதியின் பதினேழாவது நிமிடத்தில் பதில் கோலையும் தமது முதல் கோலையும் பதிவுசெய்ய ஆட்டம் 1:1 என்று சமநிலையானது. மேலதிகமாகக் கோல்கள் எவையும் பதியப்படவில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைவரை ஆட்டம் நீடித்தது. சமனிலை தவிர்ப்பு உதையில் 4:2 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம்.

தொடர்ந்தும் இடம்பெற்ற ஆட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகமும் கரவைச்சுடர் விளையாட்டுக் கழகமும் மோதின.

ஆரம்பம் முதலே திக்கம் இளைஞர் அணியின் தீபன் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

அவரால் மட்டுமே ஐந்து கோல்கள் பதிவாக முடிவில் 6:0 என மிக இலகுவாக வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது திக்கம் இளைஞர் அணி. (க)

## நீதிமன்ற தாக்குதல்...

விட்டுள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலையைக் கண்டித்து கடந்த மே மாதம் 20 ஆம் திகதி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது நீதிமன்ற கட்டடத்தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டதாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களில் 17 பேர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

நீதிமன்ற கட்டடத்தொகுதியின் மீது தாக்குதல் மேற்கொண்டமை பொலிஸார் மீது தாக்குதல் நடத்தி அவர்களை காயப்படுத்தியமை, சிறைச்சாலை வாகனங்களை சேதப்படுத்தி பொதுச்சொத்துக்களுக்கு பங்கம் விளைவித்தமை மற்றும் சட்டவிரோத கூட்டங்களில் கலந்து கொண்டமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் சந்தேக நபர்களுக்கெதிராக வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அவர்களில் 10 பேர் யாழ் மேல் நீதிமன்றத்தில் மீளாய்வு மனு தாக்கல் செய்திருந்தனர்.

அதில் 2 பேர் யாழ் நீதவான் நீதிமன்றால் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் இவர்களுடைய வழக்கு நேற்றையதினம் யாழ் மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது வழக்கை விசா ரிதத நீதிபதி 8 பேரையும் பிணையில்செலல அனுமதித்துள்ளார். (செ-4,9)

## ஐ.நாவின்...

துள்ளார்.

கொழும்பில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் வைத்து தோற்கடிக்க முடியும்.

இலங்கையின் பௌதிக ஒருமைப்பாடு, இறைமை மற்றும் சுயதீனத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையிலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கை குறித்த தீர்மானம் மிகவும் பாரதூரமானது. இதனை நாம் ஏற்கமுடியாது.

ஐசீன் பூசி கசப்பான கசாயத்தை அருந்தக் கொடுப்பது போன்றதே இந்த தீர்மானமாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த தீர்மானம் வெற்றியளித்தால் நிச்சயமாக இலங்கை விவகாரங்களில் சர்வதேச நாடுகள் தலையீடு செய்யும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

## யாழ்.பொஸ்கோ...

பாடசாலை மாணவன் சிவஞானம் துளசிகனும் பெற்றுக் கொண்டுள்ளனர்.

மாவட்ட ரீதியில் கிளிநொச்சி மாவட்டத்தில் கிளி/தரும்புரம் இல 01. அ.த.க. பாடசாலை மாணவி சிவரஞ்சன் லக்ஷிகா 186 புள்ளியை பெற்று முதலாமிடத்தினை பெற்றுள்ளார்.

மன்னார் மாவட்டத்தில் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவர்களான ஜ.எரிக கிறேஸ்மன், ஜே.றெறஸ் அனோன் ஆகிய இருவரும் 183 புள்ளியை பெற்று மன்னாரில் முதலிடத்தையும் பெற்றுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முல்லை விஸ்வநாதர் ஆரம்ப வித்தியாலய மாணவனான தர்மகுலசிங்கம் தர்சாளின் 186 புள்ளிகளை பெற்று முல்லைத்தீவில் முதலாமிடத்தை பெற்றுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் வவு/இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி மாணவியான ஹரிணி பரந்தாமன் 188 புள்ளிகளைப் பெற்று வவுனியாவில் முதலாமிடத்தினையும் பெற்றுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் யாழ். சென். பொஸ்கோ பாடசாலை மாணவனான சோதிநாதன் வக்ஸரன் 192 புள்ளிகளை பெற்று மாவட்ட ரீதியிலும் மாகாண ரீதியிலும் முதலாமிடத்தினைபெற்றுள்ளார். (செ-4,2,15,302,271,250)

# மன்னார் புதைகுழி வழக்கு

(மன்னார்)

கடந்த 2013ஆம் ஆண்டு மன்னார் மாந்தை திருக்கேதீஸ்வர பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி சம்பவத்தை தொடர்ந்து அங்கு அகழ்வு செய்யப்பட்ட புதைகுழியில் இருந்து 83 மனித மண்டையோடுகளும் மனித எச்சங்களும் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் இது சம்பந்தமான வழக்கு மன்னார் நீதிமன்றில் நடைபெற்று வருகிறது.

அகழ்வு சம்பந்தமான வழக்கு மன்னார் நீதிமன்றத்தில் நேற்று புதன் கிழமை நீதிபதி ஆசீர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளபட்டது.

ஏற்கெனவே கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களின் மரபணு சம்பந்தமான அறிக்கையை மன்றில் சமர்ப்பிக்கும்படி மன்னார் நீதிமன்றம் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தது. ஆனால குறித்த அறிக்கை நேற்று மன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை.

அந்த அறிக்கையை இன்று (நேற்று) சமர்ப்பிக்க முடியவில்லை என குற்றத்தடுப்பு புலனாய்வு பொலிஸார் மன்றில் தெரிவித்திருந்த நிலையில் அடுத்த தவணையில் இதனை சமர்ப்பிப்பதாகவும் மன்றில் தெரிவித்தனர்.

சர்வதேச ரீதியில் மரபணுவை ஆய்வுசெய்யவேண்டும் என காணாமல்போனோர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் மன்றில் விண்ணப்பித்தமைக்கு அமைய மன்று ஏற்றுகொண்டதுடன் இது சம்பந்தமாகவும் குற்றத்தடுப்பு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

மேலும் ஏற்கெனவே அதே இடத்தில் அடையாளம் இடப்பட்டிருக்கும் சந்தேகத்திற்கு இடமான கிணற்றை தாம் முன்னின்று அகழ்வு செய்யும் பணியில் ஈடுபட முடியாத சூழநிலை இருப்பதாகவும் இதை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கும் படியும் குற்றத்தடுப்பு பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். இதனை மன்னார் பொலிஸாரும் ஏற்றுகொண்டு அடுத்த தவணையில் சந்தேகத்திற்கிடமாக இருக்கும் கிணற்றை அகழ்வு செய்து அதற்கான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு முன்வருவதாகவும் தெரிவித்தனர். (செ-12)

## ரூபா 18 கோடி தேவை...

மொத்தமாக 25 கோடி ரூபாயினை ஒதுக்கீடு செய்ய குறைநிரப்புப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நாடாளுமன்றில் இந்த குறைநிரப்புப் பிரேரணை சமர்ப் பிக்கப்பட்டுள்ளது. ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் கயந்த கருணாதிலக்க இந்த யோசனையை முன்வைத்திருந்தார்.

கொழும்பு பெஜட் வீதியின் இலக்கம் சீ 61 மற்றும் சீ 62 ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஜனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தின் சுற்றுச் சூழலை நவீனமயப்படுத்தல், புனரமைத்தல் ஆகியனவற்றுக்கு ஒன்பது கோடி ரூபாயும், உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள பகுதிகளில் கட்டடங்களை அமைப்புதற்கு எட்டு கோடி நாற்பது லட்சம்ரூபாயும்தேவைபபடுவதாகத் தெரிவித்து இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவிற்கு பி.எம்.டபிள்யூ ரக கார் ஒன்றையும், பிம்.எம்.டபிள்யூ.ஆர் ரக மோட்டார் சைக்கிள்கள் 12-ம் கொள்வனவு செய்வதற்காக ஏழு கோடியே ஆறு லட்சம் ரூபாய் தேவைப்படுவதாகவும் குறைநிரப்புப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது வாசஸ்தலத்தை தேவையற்ற வகையில் ஆடம்பரமாக்கியதாகவும், விரயமாக செலவிட்டுள்ளதாகவும் இந்த அரசாங்கம் குற்றம்சுமத்தி வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## 4 இராணுவத்தினருக்கு...

கடந்த 2010 ஆம் ஆண்டு ஜூன மாதம் 6ஆம் திகதி வன்னிப் பிரதேசத்தில் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தபோது, இராணுவத்தினரால், விசுவமடு பகுதியில் 28 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாயார் ஒருவர் கூட்டுப்பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதுடன், 38 வயதுடைய 5 பிள்ளைகளின் தாயார் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டிருந்தார்.

நள்ளிரவு வேளையில் பாதுகாப்பற்ற தற்காலிகக் கூடார வீடொன்றில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தினால் விசுவமடு பிரதேசம் மட்டுமல்லாமல் கிளிநொச்சி மாவட்டத்தின் மீள்குடியேற்ற பிரதேசமே பெரும் அச்சத்தில் மூழ்கியிருந்தது.

இந்தச் சம்பவத்தையடுத்து, முழுமையான இராணுவ மயமாகியிருந்த சூழலில், கொட்டில்களிலும தரப்பாள் கூடாரங்களிலும் மக்கள் மீள்குடியேறியிருந்த அந்த நேரம் பெண்கள் உரிய பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் என்ன நடக்குமோ ஏது நடக்குமோ என்ற அச்சத்துடனேயே இரவு நேரங்களைக் கழித்தார்கள்.

இந்தச் சம்பவத்தில் விசுவமடுவைச் சேர்ந்த 2 பிள்ளைகளின் தாயார் ஒருவரை கூட்டுப்பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியதாகவும், மற்றுமொரு பெணணாகிய 5 பிள்ளைகளின் தாயாரை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாகவும் குற்றம் சுமத்தி சட்டமா அதிபர் 4 இராணுவத்தினருக்கு எதிராக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

விசுவமடு பிரதேச இராணுவ முகாமில் கடமையாற்றியிருந்த, பண்டித கெதர சாந்த சுபசிங்க, பத்திரண பண்டாரநாயக்க பிரியந்த குமார, தெல்கொல்லகே தனுஸ்க புஸ்பகுமார, கொப்பேராலகே கெதர தனுஸ்க பிரியலால் ரத்நாயக்க ஆகிய 4 இராணுவ சிப்பாய்களுக்கு இந்த வழக்கில் 4 கூட்டுப்பாலியல் வல்லுறவு, பாலியல் துஷ்பிரயோகம் உள்ளிட்ட 5 குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இந்த வழக்கு விசாரணையின் போது, நான்காவது எதிரி மன்றில் ஆஜராகாது தலைமறைவாகியிருந்தார். அவருக்கெதிராக பிடியாணை பிறப்பித்ததுடன் அவர் இல்லாமலேயே இந்த வழக்கு விசாரணை நடைபெற்று நேற்று புதன்கிழமை தீர்ப்பளிக்கப்பட்டது.

### தண்டனை

குற்றம் சுமத்தப்பட்டிருந்த 4 இராணுவ சிப்பாய்களும் விசாரணையில் குற்றவாளிகளாகக் காணப்பட்டிருப்பதாகத் தெரிவித்து, அவர்கள் ஒவ்வொருவருக்கும் மொத்தமாக 30 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை வழங்குவதாக யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தனது தீர்ப்பில் தெரிவித்தார்.

இரண்டு பிள்ளைகளின் தாயாராகிய இளம்பெண்ணை கூட்டுப்பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றத்திற்காக எதிரிகள் நால்வருக்கும், இந்தத் தீர்ப்பில் தலா 20 ஆண்டு கடூழிய சிறைத் தண்டனை விதித்ததுடன் 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் கட்டத்தவறின் ஒருவருட சிறைத்தண்டனையும் நட்டஈடாக 5 இலட்சம் ரூபாயும் கட்டத்தவறின் 2 வருடங்கள் கடூழிய சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளது.

ஐந்து பிள்ளைகளின் தாயாராகிய பெண்ணை அதே சம்பவத்தில் பாலியல் துஷ்பிரயோகம் செய்தமைக்காக நான்கு எதிரிகளுக்கும் இந்தத் தீர்ப்பில் 5 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்ததுடன் 10 ஆயிரம் ரூபாய் தண்டப்பணமும் கட்டத்தவறும் பட்சத்தில் ஒரு வருட கடூழிய சிறைத்தண்டனையும் நட்டஈடாக ஒரு இலட்சம் ரூபாயும் கட்டத்தவறும் பட்சத்தில் ஒரு வருட கடூழிய சிறைத் தண்டனையும் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இந்த வழக்கின் எதிரிகள் நால்வருக்கும் கூட்டுப்பாலியல வல்லுறவுக்கு 20 வருடமும், பாலியல் துஷ்பிரயோகத்திற்கு 5 வருடமும், நட்டஈடு வழங்காவிட்டால் 3 வருடமும், தண்டப்பணம் செலுத்தாவிட்டால் 2 வருடமுமாக மொத்தமாக 30 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

மக்களையும் நாட்டையும் பாதுகாக்கச் சென்ற காவலர்களே குற்றம் புரிந்துள்ளார்கள்.

இந்த வழக்கில் எதிரிகளாக நிறுத்தப்பட்டிருப்பவர்கள் இராணுவச் சிப்பாய்களாவர். இவர்கள் இந்தச் சம்பவம் நடைபெற்ற காலப்பகுதியில், கிளிநொச்சி விசுவமடு பிரதேசத்தில் நாட்டின் பாதுகாப்பையும் பொதுமக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் பாதுகாப்பு நடவடிக்கைக்காக, இராணுவ உத்தியோகத்தர்களாக கடமைக்காக அரசாங்கத்தினால் அனுப்பப்பட்டிருந்தார்கள்.

அவ்வாறாக தேசிய பாதுகாப்பு கடமைக்காக அனுப்பப்பட்டிருந்த போதே, இவர்கள் தங்களுடைய இராணுவ முகாமில் இருந்து வெளியேறிச் சென்று, கூட்டுப்பாலியல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகக் குற்றச் செயலைப் புரிந்திருக்கின்றார்கள்.

இந்தக் குற்றச் செயல் சம்பவம் நடைபெற்றதையடுத்து, சம்பவம் தொடர்பாக விசாரணை செய்த இராணுவ பொலிசார் இவர்கள் நான்கு பேரையும் அன்று அதிகாலையிலேயே கைது செய்திருந்தனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் நாட்டின் கோர யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் அனைத்தையும் இழந்து இராமநாதன் இடம் பெயர் அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்துவிட்டு, அரசாங்கமும், இராணுவத்தினரும் வழங்கிய மீள்குடியேற்றத்திற்கான வாக்குறுதியை அடுத்து, இந்தப் பெண்கள் தமது சொந்த ஊரான விசுவமடுவுக்குத் திரும்பிச் சென்று தற்காலிகக் கொட்டில் அமைத்து, அதில் தங்கியிருந்து தங்களுடைய காணிகளைத் துப்புரவு செய்வதில் ஈடுபட்டிருந்த வேளையில் இரவு 12 மணிக்கு அவர்கள் தங்கியிருந்த வீட்டினுள்ளே புகுந்து, இந்தக் குற்றச் செயலைப் புரிந்திருக்கின்றார்கள். கோர யுத்தத்தில் பாதுகாக்கப்பட்ட மானம் யுத்தம் இல்லாத வேளை சூறையாடப்பட்டது.

இந்தச் செயலின் மூலம், யுத்தம் நடைபெற்றபோது, காப்பாற்றப்பட்டிருந்த அந்தப் பெண்களின் கற்பையும் மானத்தையும் யுத்தம் முடிவடைந்ததன் பின்னர், இந்த 4 இராணுவ சிப்பாய்களும் சூறையாடியிருக்கின்றார்கள்.

கோர யுத்தத்தில் பாதுகாக்கப்பட்ட மானம் 2010 ஜூன் 6 ஆம் திகதி யுத்தம் இல்லாத சூழ் நிலையில் எதிரிகளான இராணுவ சிப்பாய்களினால பறிக்கப்பட்டிருப்பது பாரிய குற்றச் செயலாகும்.

பொது மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய தமது அரச கடமையாகிய பாதுகாப்பை வழங்காமல் இரண்டு தாய்மார்கள் மீது கூட்டுப் பாலியல் வல்லுறவு மற்றும் பாலியல் துஷ்பிரயோகம் செய்தது என்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

அது மட்டுமல்லாமல், இந்த நாட்டு இரராணுவத்தினரின் நற்பெயரைக் கெடுத்த செயலாகும். எனவே, இலங்கை இராணுவத்தின் கௌரவத்தைப் பாதுகாக்க வேண்டுமானால் இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு உச்ச தண்டனை வழங்கப்பட வேண்டும்.

இராணுவத்தின் பாலியல் வல்லுறவு குற்றம் என்பது சர்வதேச குற்றம். அத்துடன் அது ஒரு போர்க் குறறம், மனித நேயத்திற்கு எதிரான குற்றம் என ஐ.நா. யுத்த குற்ற நீதிமன்ற சட்டங்களிலும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற சட்டங்களிலும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என நீதிபதி இளஞ்செழியன் தெரிவித்தார்.

இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டபோது யாழ் மேல் நீதிமன்றம் பொதுமக்களினால் நிறைந்து வழிந்தது. தீர்ப்பு வழங்கப்பட்டதையடுத்து, எதிரிகள் நான்கு பேரும் உடனடியாக, பாதுகாப்பாக சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள்.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றக் கட்டிடத்தின் முதலாம் மாடியில் அதிரடிப்படை பொலிசார் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். நீதிபதி இளஞ்செழியனுக்கும் விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. (செ-4,9)

## ரயில் மோதி...

கிழமை இடம்பெற்றுள்ளது.

அந்த விபத்து சம்பவத்தில் யாழ். திருநகர் பகுதியைச் சேர்ந்த தேவசகாயம் ஏனோட் (வயது 62) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது, யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பை நோக்கி பயணித்த யாழ்.தேவி புகையிரதம் நேற்று புதன்கிழமை காலை 6.30 மணியளவில் யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் இருந்து தனது பயணத்தை ஆரம்பித்து சென்று கொண்டிருந்த போது, சோமசுந்தரம் வீதி வழியாக சென்று கொணடிருந்த குடும்பஸ்தர் புகையிரத்திற்கு குறுக்கே சென்றுள்ளார்.

அப்போது வேகமாக மோதுண்டு தூக்கி வீசப்பட்ட நிலையில், குடும்பஸ்தரின் சடலத்தினை மீட்ட புகையிரத சாரதிகள் நாவற்குழி புகையிரத நிலையத்தில் ஒப்படைத்து விட்டு, கொழும்பிற்கு பயணித்துள்ளனர். சடலம் தொடர்பான விசாரணையினை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-4,9)

## யாழ்.சட்டத்...

விளை வித்ததோடு சட்டத்தரணி உட்பட வீட்டிலிருந்தவர்களையும் அச்சுறுத்தி விட்டு தப்பி சென்றுள்ளனர்.

தற்போது யாழில் அடிக்கடி வாள்வெட்டு சம்பவங்களும் அடிதடி சம்பவங்களும் இடம் பெற்று வரும் நிலையில் இவற்றின் உச்சகட்டமாக சட்டத்தரணி ஒருவருடைய வீட்டிற்குள்ளேயே சென்று தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் யாழ்.குடாநாட்டு மக்களிடையே பாரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதோடு, சட்டம் ஒழுங்கு எந்தளவிற்கு உள்ளது என்பது குறித்தும் மக்களை சந்தேகம் கொள்ள வைத்துள்ளது.

இவ்வாறான நிலையில் மேற்படி சட்டத்தரிணியின் வீட்டிற்குள் அத்துமீறி உள்நுழைந்து தாக்குதல் மேற்கொண்ட சம்பவம் தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராயும் கூட்டமொன்று நேற்றைய தினம் யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் சங்க வலய தலைவி சாந்தா அபிமன்னசிங்கம் தலைமையில் யாழ்.நீதிமன்ற கட்டிடத்தொகுதியில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின் போதே மேற்படி தாக்குதலை கண்டித்து யாழ்.மாவட்ட சட்டத்தரணிகள் நீதிமன்றங்களுக்கு செல்லாது பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்முடிவின் படி யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல நீதிமன்றங்களிலும் கடமையாற்றும் சட்டத்தரணிகள் இன்றைய தினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர்.

இதேவேளை சட்டத்தரணியின் வீட்டின் மீது தாக்குதல் நடத்திய சமூக விரோத கும்பலினை சேர்ந்தோர் நேற்று வரை கைது செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இவ்வாறான சம்பவங்கள் தற்போது அதிகரித்து வருவதோடு அண்மையில் கூட ஒரு பாடசாலை ஆசிரியர் சமூக விரோத கும்பலின் தாக்குதலினால் கொல்லப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (செ-4)


SIKARAM
Any Visa to Any Country
School of Hospitality &ENGLISH
உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் & விசா ஏற்பாட்டுடன்
Business & Hotel Management
புதிய பிரிவு ஆரம்பம் 15-10-2015, வியாழன் 10 மணி
Leading to University of Sunderland UK
Certificate – Diploma – Bachelors Degree
SWISS – AUSTRALIA – SINGAPORE – MALAYSIA



வகுப்பறைக் கற்கை | செயன்முறைப் பயிற்சி | வருமானத்துடன் களப்பயிற்சி | வெளிநாட்டு விசா ஏற்பாடு

ஹொட்டேல் வரவேற்பறைப் பகுதியில் வேலைவாய்ப்புடன் Front Office Management
ஹொட்டேல் உணவகங்களில் 'டிப்ஸ்' உடன் அதிகம் சம்பாதிக்க Food & Beverage Management
Chef (பிரதான சமையலாளர்) ஆகி. இலட்சங்களில் உழைக்க CULINARY ARTS
Tourist Guide (சுற்றுலா வழிகாட்டி) ஆக பணம் சம்பாதிக்க Tourism Management
with ENGLISH
Beginner's Level
Advanced Learners
IELTS Preparatory
(க-2402)
MONEY BACK 100% GUARANTEE
கற்கைநெறியில் இணையும் அனைவருக்கும் 3 மாதங்களில் ஆங்கிலத்தில் பேசும் திறன் & தொழில்வாய்ப்பு பெறும் உத்தரவாதம்
இதுவரை கற்கைநெறியில் இணைந்த 13 பேருக்கு வெளிநாட்டு விசா ஏற்பாடு
077 36 16 798, 021 222 0011
இல.275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்தில் இருந்து 100m


## மரண தண்டனையை...

அமுல்படுத்தவேண்டும் என்ற பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

உலகிலுள்ள 103 நாடுகள் மரணதண்டனையைத் தமது சட்டத்திலிருந்து நீக்கியுள்ளன. சில நாடுகளின் சட்டத்தில் மரண தண்டனை இருக்கின்றபோதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படுவதில்லை.

மரணதண்டனையை தற்காலிகமாக இடைநிறுத்துவது தொடர்பான யோசனைக்கு 2007, 2008, 2009ஆம் ஆண்டுகளில் இலங்கை ஆதரவாக வாக்களித்தது. 2012, 2014ஆம் ஆண்டுகளில் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை. 2015ஆம் ஆண்டு இடம்பெறும் வாக்களிப்பில் யோசனைக்கு ஆதரவாக வாக்களிக்க அரசு முடிவுசெய்துள்ளது.

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றிய பாப்பரசர், மரணதண்டனையை உலக நாடுகள் சட்டத்திலிருந்து நீக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் கடந்த மாதம் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, இலங்கையில் மரணதண் டனை நிறைவேற்றப்படாது என்று கூறியிருந்தார்.

மரணதண்டனையை நடைமுறைப்படுத்துவது குறித்து இந்தியா ஆராய்ந்து வருகிறது. சில குற்றச்செயல்கள் தொடர்பில் மரண தண்டனையை அமுல்படுத்துவது குறித்து சீனாவும் ஆராய்ந்து வருகின்றது. குற்றவாளிக்கு வழங்கப்படும் தண்டனை அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதாகவே அமைய வேண்டுமே தவிர, பழிவாங்குவதாக அமையக்கூடாது. இலங்கையின்சட்டத்தில்மரண தணடனை உள்ளபோதும் அதனை நடை முறைபடுத்துவதில்லை என்ற முடிவி லேயே அரசு தொடர்ந்தும் இருக்கின்றது என அமைச்சர் விஜே தாஸ தெரிவித்துள்ளார். (செ-12)

## 4737 பேர்...

வாழ்ந்து வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

ஈ.பி.டி.பி.யின் பொதுச் செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவினால் பாராளுமன்றில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர் மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேவை ஏற்பட்டால் மேலும் நிதி ஒதுக்கீடுகளை பயன்படுத்த முடியும் எனவும் சுவாமிநாதன் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## பட்ஜெட்டில்...

சியின் கோரிக்கைக்கு இணங்க கொண்டு வரப்படவுள்ள வரவு-செலவுத்திட்டத்தில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதமான அளவு கல்வித்துறைக்கு ஒதுக்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

ஒரு தனிநபருடைய முன்னேற்றத்துக்கு புத்தக அறிவு மாத்திரம் போதாது என்றும் குறிப்பிட்ட அவர், நாட்டின் அபிவிருத்தியில் கல்வி ஒரு முக்கிய பகுதியாகும் என்றும் தெரிவித்தார். (செ-12)


Sahapons Education Centre
சகாபொன்ஸ் கல்வி நிலையம்
மாலுசந்தி
அல்வாய்
தரம் 5 புலமைப்பரிசில்
விசேட வகுப்புக்கள்- 2016
பரீட்சைகள், செயலட்டைகள், வளவாளர்களால கருத்தரங்குகள் என்பன
விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்
திரு. ச. சுகர்ணன் Dip.Teach(Spl.Ed)
அவர்களின் வழிகாட்டலில் 09.10.2015
பி.ப 3.30 மணி (வெள்ளிக்கிழமை)
முதல் நடைபெறும்.
பதிவுகள் இன்று முதல்
(க-2397)
இயக்குனர்
சதாபொன்ஸ்
0212263206
0773095176



வாழ்த்துகின்றோம்
நாடளாவிய ரீதியில் 2015-தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வெற்றித் தேர்வு பரீட்சை எழுதிய மாணவர்களை வாழ்த்துகின்றோம் ,
வெற்றித் தேர்வு வெளியீட்டகம்
(க-2400)

NEW SCIENCE HALL, JAFFNA
COMBINED MATHS DAY CLASS - 2016 A/L
அலகு ரீதியான துரித மீட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றன
நேரம் : - 7.00AM (Mon - Fri) (1982)
Mr P. Sentilnathan

பாராட்டி வாழ்த்துகின்றோம்
புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து எமது பிரதேசத்திற்கு பெருமை சேர்த்த எமது "மாணவச் செல்வங்களையும்" அவர்களது சாதனைக்கு உறுதுணையாக செயற்பட்ட "ஆசிரிய பெருந்தகைகளையும்" பாராட்டி வாழ்த்துகின்றோம்.
எமது பிரதேசத்தில் தன்னலமற்ற சேவையாற்றும் ஆசிரிய பெருந்தகைகளையும் விசேடமாக "பிரதீபா பிரபா" விருது பெற்ற ஆசிரியர்களையும் இன் நன்நாளில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்த்துபவர்: யாழ்.நகரில் ★விளையாட்டு உபகரணங்கள் ★ இசைக்கருவிகள் ★ பாண்ட் வாத்தியங்கள் ★உடற்பயிற்சி சாதனங்களின் விற்பனை முன்னணி நிறுவனம்
HAPPAN SCHOLARSHIP AWARD NSB 2015 ATCHUVELY BRANCH
ஒலிம்பியா ஸ்போட்ஸ்
இல.06 ஜும்மா பள்ளிவாசல் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021222 3490, 0778060267
COLLEGE OF ENGLISH JAFFNA E-CITY EXCELLENCE AWARD IN ENGLISH
(க-2401)
மாணவர்களை கௌரவிப்பதற்கான பதக்கங்கள் (மெடல்ஸ்), ஆசிரியர்களுக்குரிய நினைவு கேடயங்களை விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் நியாய விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.10.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.